# நக்கீரம் '02
# NAKKEERAM '02



230.6
சட்ட
SL/PR

சட்டமாணவர் இந்து மகாசபை
LAW STUDENTS' HINDU MAHASABHA

V. Prasath

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

230.6
SLIPR

# நந்திரம்

# 2002

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்


இதழாசிரியர்
சின்னத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா

| கணை: 04 | வெளியீடு: 12-09-2002 |
|---|---|

இலங்கைச் சட்டக் கல்லூரி
244, ஹல்ப்ஸ்டோ:ப் வீதி,
கொழும்பு-12.


Sri Lanka Law College
244, Hulftsdorp Street,
Colombo-12.

28965



# ஸ்ரீ விநாயகர் வழிபாடு

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம்
சதுர்புஜம் ப்ரஸன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப சாந்தயே.



# சமர்ப்பணம்

சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றி, சட்டத் துறையிலும், அரசியல் களத்திலும் தமக்கென தனியிடத்தைப் பிடித்து, தடம் பதித்து மறைந்த மாமணிகள் முதுபெரும் தலைவர் திரு.முருகேசு சிவசிதம்பரம், தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு இம்மலரைச் சமர்ப்பித்து அப்பெரியார்களை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

# இதழாசிரியர் இதயத்திலிருந்து.

இலங்கை சட்டக்கல்லூரி இந்து மகாசபையின் நான்காவது பூ மலர்ந்து "நக்கீரம் 2002" வெளிவருகின்றது. இதனை உங்கள் கரங்களில் தவழ விடுவதில் இதழாசிரியர் என்ற வகையில் பெருமகிழ்வடைகிறேன்.

உலகில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடயத்தையே தகுதியென நினைத்துக் கொண்டிருக்கிறோம் சிலர் படிப்பை, பட்டத்தை, சிலர் பணத்தை, இன்னும் சிலர் பதவியை.

ஆனால் பொதுமறை செய்த வள்ளுவனோ, நடுநிலமையையே ஒரு மனிதனுக்குரிய ஒப்பற்ற தகுதியாகக் கருதுகிறான்.

"தகுதி என நின்று நன்றே பகுதியான்
பார்ப்பட்டு ஒழுகப் பெறின்"

இது நடுவுநிலமை அதிகாரத்தினை முதற் குறள் இந்த நடுவு நிலமை "நெற்றிக் கண் காட்டிலும் குற்றம் குற்றமே" என்ற நக்கீர பரம்பரைக்குப் பிரதானமானது. பெரிதும் வேண்டப்படுவது.

"சட்டத்தின் முன் யாவரும் சமம்" என்ற கோட்பாட்டை வலியுறுத்தும் எமக்கு இது மகிவும் பிரதானமானது இக் கோட்பாட்டை இறைவனிடத்திலேயே வலியுறுத்திய ஒரு பெரு மகனின் பேரால் வெளிவருகிறது எமது "நக்கீரம்."

"நக்கீரம் மலர்வதற்கு மனம், மொழி, மெய்களால் உழைத்த அனைவருக்கும் மலராசிரியரான என் நன்றிகள் உரியன.

இம் மலர் மென்மேலும் வளர்ச்சியடைந்து எம் எழுச்சிக் குரலாக ஒலிக்க எல்லாம் வல்ல ஈசனைப் பிரார்த்திக்கின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

*இதழாசிரியர்,*
*சி. ஸ்ரீஸ்கந்தராஜா*

## கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் கிளைத் தலைவர்
## சுவாமி ஆத்மகனாநந்தா மகராஜ்
## அவர்களின்
# வாழ்த்து மலர்

கொழும்பு சட்ட மாணவர் இந்து மகா சபையினர் வெளியிடும் "நக்கீரம் 2002" சிறப்பிதழிற்கு இவ் வாழ்த்து மலரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்து சமயம் அனுபவத்தினால் உணரப்பட்ட உண்மைகளில் என்றும் நிலைத்து நிற்பது. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" எனும் உலகம் தழுவிய பண்பாட்டின் சிகரமாக விளங்குவது. இந்த சமயத்தைப் போற்றி வளர்க்கும் அளவிற்கு மனித குலத்தில் அன்பும், அமைதியும், சகோதரத்துவமும் தழைத்தோங்கும்.

கொழும்பு சட்ட மாணவர் இந்து மகா சபையின் நன்முயற்சி பாராட்டத்தக்கது. அவர்களுக்கு எமது இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

சுவாமி ஆத்மகனானந்தா.

CHIEF JUSTICE'S CHAMBERS
SUPREME COURT
COLOMBO 12.

# Message from Hon. Chief Justice

27th August 2002

*I take pride in issuing this message on the occasion of the publication of "Nakkeeram" by the Law Students' Hindu Maha Sabha.*

*Hinduism being one of the oldest religions has a deep and abiding philosophy based on justice, peace and harmony.*

*I wish to express my sincere appreciation to the members of the Hindu Maha Sabha, though small in number, for their untiring efforts, dedication and commitment in achieving this formidable task.*

*Sarath N. Silva*
*Chief Justice*

Supreme Court of the Democratic Socialist Republic of Sri Lanka
Colombo 12

# பிரதம அதிதியின் வாழ்த்துச் செய்தி

## வாழ்த்துச் செய்தி

நக்கீரம் நடை தளர்ந்து இளப்பாறி விட்டது என்று நகை எழுந்த நேரத்தில் மீண்டும் நிமிர்ந்தெழுந்து நடைபவனி வரும் 2002 ம் ஆண்டின் "நக்கீரம்" இதழை வரவேற்கும் அதேவேளையில் அதற்குப் புத்துயிர் ஊட்டிய சகலரையும் பாராட்டுகிறேன்.

சட்டக்கல்லூரியில் இந்து மாணவ மாணவியரின் தொகை வருடா வருடம் குறைந்து வருவதாகத் தெரிகிறது. நான் சட்ட மாணவர் சங்கத் தலைவராக 1962-63 ல் இருந்த கால கட்டத்தில் தான் இந்து மகாசபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதாக ஞாபகம். அக்காலத்தில் முழு சட்ட மாணவர்களின் தொகையிலும் இந்து மாணவர்கள் 25 சதவிகிதத்திற்கு குறையாமல் இருந்தார்கள். இன்று சட்டக்கல்லூரி மாணவ மாணவியர்களின் தொகை பெருமளவு அதிகரித்துங்கூட இந்து மாணவ மாணவியர் தொகை விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்குக் குறைந்துள்ளது. இதன் காரணங்களை இன்றைய மாணவ மணவியர் கண்டறிந்து ஆவன செய்தல் இந்து சபையினது வருங்காலத் தொடர்ச்சியையும் வருடா வருட நக்கீர பவனியின் தொடர்பையும் உறுதிப்படுத்த உதவும்.

யாவரும் இன்புற்றிருக்க இறைவனை வேண்டுகிறேன்.

நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்

# Message from the principal

I take great pleasure in sending this message in connection with the release of the magazine "NAKKERAM" published by the Law Students of the Hindu Maha Sabha. This Magazine which is published annually regrettably has not been released for the last two years due to certain constraints the Hindu Maha Sabha was faced with. However, they have now overcome these hurdles and have been successful in recommencing this publication this year.

This magazine is a forum for the exchange of ideas and views on Hinduism and other allied subjects and also for educating the Students and the Public on various matters connected with religion and the law.

It is my fervent wish that this magazine will continue to be published uninterruptedly in the future thus serving those who are interested in this area.

I congratulate the President and the Committee of the Law Students' Hindu Maha Sabha for the efforts taken by them to publish the magazine this year.

Dr. H.J.F. Silva
Principal.

# *Message from the Senior Treasurer*

*I have great pleasure in sending my greetings and best wishes to "Nakeeram" once again. I am well aware of the vicissitudes the Law Students' Hindu Mahasabha undergoes due to its very limited membership. Despite all hardship the Sabha has always striven to do its best towards promotion of Hinduism. This issue is yet another valiant effort.*

*Mahatma Gandhiji is quoted as having said thus, "In the midst of darkness, light persists." We must have faith in religion and in mankind. Spiritual strength is a great and ideal 'Weapon,' to use the language most readily understood in this age.*

*While appreciating the efforts of the present committee I wish and hope that future members would carry on the worthy effort with sincerity and dedication.*

***Mrs. Kamala Nagendra.***

# தலைவரின் வாழ்த்துரை

புதிய நூற்றாண்டிற்கான சட்டமாணவர் இந்து மகாசபையின் முதல் மலருக்கு உரை எழுதும் சந்தர்ப்பத்தைத் தந்த எல்லாம் வல்ல எம் பெருமானுக்கு முதற்கண் நன்றி. இறை வனிடமே நீதிகேட்டு வெற்றி பெற்ற வீரனின் பெயரை இம் மலர் தாங்கியிருப்பது இன்றைய கால கட்டத்திற்கு மிகப் பொருத்தமானதாகும்.

சட்டக் கல்லூரியிலே சட்டப்படிப்பைப் பூர்த்தி செய்வதுடன் ஆளுமைகளையும், தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்துக் கொள்வதும் கலை கலாச்சார, சமய சமூக விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதும் எமது நோக்கமும், கடமையுமாகும். இந்த நோக்கத்தை அடைய ஊக்கம் தேவை பொய்யாமொழிப்புலவரின்

*"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா*
*ஊக்கம் உடையா னுழை"*

என்ற திருக்குறளிற்கு இணங்க அந்த ஆக்கமே இம் மலர் என்றால் அது மிகையில்லை

இந்து மதக் கோட்பாடுகள் ஒரு மனிதனை நல்வழிப்படுத்தவே உருவாக்கப்பட்டுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. சட்டத்தின் முன் யாவரும் சமம் என்பதைப் போல இறைவனின் முன் மனிதர் அனைவரும் சமம். ஆனால் மதக் கோட்பாடு என்ற அணிகலனை ஒருவன் அணிகின்ற போது அவன் இறைவனிடத்தில் உயர்ந்த மனிதனாக அறிமுகம் ஆகின்றான் ஆகவே அனைவரும் இந்து மதக் கோட்பாடுகள் என்ற அணிகலன்களை அணிந்து உயர்ந்த மனிதர்களாக மிளிரவேண்டும். இந்து மதக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம் ஓர் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்கவும் முடியும். எனவே நாம் அனைவரும் ஓர் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்கும் பணியில் கைகோர்க்க வேண்டும் என்பது என்னுடைய அவா. இதைப் பூர்த்தி செய்வதற்கு இம்மலர் ஒரு சிறிய பங்களிப்பையாவது செய்யும் என்று திடமாக நம்புகின்றேன்.

இம்மலரை மலரச் செய்ய உதவி செய்த கௌரவ நீதியரசர் C.V. விக்னேஷ்வரன் அவர் கள், எமது சட்டக்கல்லூரி அதிபர் Dr. H.J.F. சில்வா அவர்கள் எமது பெரும் பொருளாளர் திருமதி. K. நாகேந்திரா அவர்கள் நிதியுதவி வழங்கிய சட்டத்தரணிகள், செயற்குழு உறுப்பினர்கள். ஆக்கங்களை தந்துதவிய சான்றோர்கள், பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவிய M.s.s. அமீர் அலி, அஹமட் ராசி, தீபன் ஆகியோர் உள்ளிட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள, சகோதரர்கள் அனைவருக்கும் நன்றிகளை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

**மீண்டும், மீண்டும் நக்கீரம் மலர வேண்டும் மணம் பரப்ப வேண்டும்**

T. *சரவணராஜா*
*தலைவர்*
*சட்ட மாணவர் இந்து மகாசபை.*

## *Law Students' Hindu Maha Sabha Executive Committee 2002*



**Seated (Left to Right):** Mrs. K. Nagendra (Senior Treasurer), Hon.S.N. Silva (Chief Justice), T. Saravanarajah (President), Dr. H.J.F. Silva (Principal) S.Sriskandarajah (Editor)

**Standing (Left to Right):** Miss. V. Hamsahanambiha (Treasurer), Miss.S. Eesananthini (Secretary)

**Absent** :S. Jothilingam (Vice President), Miss. S. Anuraji (Asst. Secretary), J. Jeyaruban (Auditor), B. Partheeban (Committee Member)

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 01. | **சைவ மேன் மக்களின் தலைமையகம் அருள் மிகு திருக்கேதீச்சரத் திருத்தலம்.**<br>*புலவர் அ. திருநாவுக்கரசு, துணைச் செயலர்*<br>*திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை.* | 01 |
| 02. | **திருக்கோணேஸ்வரம்**<br>*ஞானசிரோன்மணி பண்டிதர். இ. வடிவேல்* | 03 |
| 03. | **ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வரலாறு** | 08 |
| 04. | **சைவசித்தாந்தத் தத்துவத் தலைக்காவலருடன் ஒரு சில மணித்துளிகள்**<br>*முனைவர் வே. இரத்தினசபாபதி* | 10 |
| 05. | **SWAMI VIVEKANANDA'S ADDRESS IN THE WORLD'S PARLIAMENT OF RELIGIONS ON 11 SEPTEMBER1893 AT CHICAGO AND COMMENTS THAT APPEARED IN THE AMERICAN PRESS**<br>*A.R. Surendran LL.M*<br>*Attorney - at - Law* | 14 |
| 06. | **சட்டமும் சமயமும்**<br>*மட்டுவில் ஆ. நடராசா* | 22 |
| 07. | **உன்னை நீயே....!**<br>*சட்டத்தரணி க. பிரபாகரன்* | 26 |
| 08. | **The Review of Industrial Arbitral Awards the Creative Role of Appellate Courts**<br>*By Saleem Marsoof P.C.*<br>*Additional Solicitor General* | 30 |
| 09. | **வேலையாட்கள் சேவை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**<br>*ARULANANTHAM SARVESWARAN*<br>*LL.B (Hons), Attorney-at-Law.*<br>*Lecturer, Faculty of Law, University of Colombo.* | 38 |
| 10. | **INCEST AMONG CASES OF CHILD ABUSE**<br>*S Thurairaja - Senior State Counsel* | 45 |
| 11. | **Industrial Arbitration**<br>*V. Vimalarajah*<br>*Arbitrator - Formerly President Labour Tribunal* | 49 |

12. **APPLICABILITY OF *TESAWALAMAI*** 55
*S.Selvakkunapalan. LL.B*
*Assistant Legal Draftsman*

13. **நீதித்துறையின் சுதந்திரத்திற்குப் பதினேழாவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் எந்தளவு உதவி புரிகிறது?** 63
*சட்டத்தரணி கே.ஜீ.ஜோன் B.A*

14. **சிவில் வழக்குகளில் கட்டாணையும் இடைக்காலத்தடை உத்தரவும்.** 67
*சட்டத்தரணி ஐ. பயஸ் றெஸ்ஸாக்*

15. **இந்து மதமும் விரதங்களும்** 75
*அனுறஜி செல்வநாதன் - ஆரம்பநிலை ஆண்டு.*

16. **பிரார்த்தனை** 77
*ஜெ. கஜநிதிபாலன் - ஆரம்பநிலை ஆண்டு*

17. **சிறுவர் துஷ்பிரயோகமும் அதன் விளைவுகளும்** 80
*T. சரவணராஜா - இறுதி ஆண்டு.*

18. **சட்ட ஆட்சி (Rule of Law)** 84
*ஜெயசிங்கம் ஜெயரூபன் - இடைநிலை ஆண்டு*

19. **வலுவேறாக்கம்** 87
*தனபாலசிங்கம் ஜனகன் - ஆரம்பநிலை ஆண்டு*

20. **வறுமை எமது உடன் பிறப்பு** 90
*S.A.M. உபைதுல்லாஹ் - இடைநிலை ஆண்டு.*

21. **ஓம் சக்தி** 91
*ச. சசாநந்தினி - இடைநிலை ஆண்டு*

22. **Law Students' Hindu Mahasabha Executive Committee 2002** 92

23. **Members of the Law Students' Hindu Mahasabha 2002** 92

24. **போட்டி முடிவுகள்** 93

25. **இந்து மகாசபையின் சரித்திரத்தில்....** 94

26. **சைவ நீதி வழங்கியோரும் நக்கீரம் நல்கியோரும்** 95

27. **பொதுச் செயலாளரின் ஆண்டறிக்கை - 2002** 96

சிவ சிவ

# சைவ மேன் மக்களின் தலைமையகம் அருள் மிகு திருக்கேதீச்சரத் திருத்தலம்.

*"மேரு நடு நாடி மிக்கிடை பிங்கலை
கூரு மிவ்வானின் இலங்கை குறியுறுஞ்
சாருந் தில்லைவனத் தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுமுனை இவை சிவ பூமியே".*

புலவர் அ. திருநாவுக்கரசு
துணைச் செயலர்
திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை.

என்பது திருமூலநாயனார் திருவாய் மொழியாகும். இக்கூற்றிற்கு ஏற்றாற்போல இவ் ஈழத்திரு நாட்டின் பல பாகங்களிலும் சிவத்தலங்கள் பல பல்கிப்பெருகியிருந் தமை வரலாறு கூறும் உண்மையுமாகும்.

### பாடல் பெற்றதலம்

பாடல் பெற்ற திருத்தலங்கள் 274 இல், ஈழத்திருநாட்டில் இரண்டு தலங்களே பாடல் பெற்றவை. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடிய திருத்தலம் திருக்கேதீச்சரத் திருத்தல மாகும். திருநாவுக்கரசு நாயனார் வைப்புத் தலமாகப்பாடியதும் இத்திருத்தலமேயாம். மற்றொன்று திருக்கோணேஸ்வரத்திருத்தல மாம்.

### தலப்பெருமை

மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் முச்சிறப் பும் பெற்றதலம் திருக்கேதீச்சரம், கேது, மயன் மாதுவட்டா, மண்டோதரி, இராமர், அகத்தியர் போன்ற தவமுடையோர் வழிபட் டுத் தங்குறை போக்கிய வரலாறும் இதற் குண்டு.

கேதுவினால் பூசிக்கப்பட்டமையால் தலத்தின் பெயர் கேதீச்சரமாயிற்றென்பர்.

இத்திருத்தலம் மாதோட்டம் என்னும் பெரு நகரில் அமைந்துள்ளது கண்கூடு. சூரபதுமனின் மனையாளின் தாத்தாவின் பெயர் துவட்டாவெனப் பேசப்படுகின்றது. துவட்டா மகப்பேறின்றிப் பாலாவித்தீர்த் தத்தில் நீராடி வழிபட்டமையால் மகப்பேறு கிட்டிற்றென்பர்.

துவட்டா இத்தலத்தில் வாழ்ந்து பெரு நகரமாக்கினார், என்றும் இவரால் வளப்ப டுத்தப்பட்டமையால் இதன் பெயர் துவட்டா வெனவும் காலப்போக்கில் இந்நகரம் மாது வட்டாவென அழைக்கப்பட்டுவந்தமையும் வரலாற்றுத் தரவுகளாகும்.

பாலாவித்தீர்த்தத்தின் மகிமையைச் செப்புவோர் இதில் நீராடி இறுதிக்கடன் செய் வோர்க்கு காயாவில் கடனாற்றும் புண்ணி யங் கிட்டுமென்றும், பிரமகத்தி போன்ற பாவங்கள் தீருமென்பதும் தீர்த்தத்தின் மேன் மையாகும்.

இத் திருத்தலம் பழங்குடியினரான நாகர் களின் வழிபாடுத்தலமாயிருந்தமையால் நாகநாதர்திருக்கோயிலெனவும் அழைக் கப்பட்டது. சோழ, பாண்டிய மன்னர்கள் திருப்பணி செய்தமையும் வன்னி, யாழ்ப் பாண மன்னர்கள் நித்திய நைமித்தியங் களை வழுவின்றி இடையறாது செய்துவந்த பெருமையுமித்தலத்திற்குண்டு.

பெரிய புராணம் பாடிய சேக்கிழார் சுவா மிகளின் பெரிய புராணத்திலும் இத்தி ருத்தலம் சுட்டப்பட்டமை சிறப்புடைய தாகும்.

இத்திருத்தலத்தின் அண்மிய பகுதிக ளில் சிவாலயங்கள் இருந்தன என்னும் உண்மையை அகழ்வாய்வாளர்கள் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது.

இத்திருத்தலமும் சூழலும் உலகப் புகழ் பெற்ற பெருநகரமாகவும், பல்வகை நுண் தொழில் வல்லார் வாழ்ந்த விடமாகவும் சிற்பக்கலை நுண்மை நிறைந்த ஆற்றலு டைய கலைஞர்களைக் கொண்டு மிளிர்ந்த அழகு நகராகத் திகழ்ந்ததென்பது ஆய்வாளர் கருத்தாம்.

போர்த்துக்கீசரால் தகர்த்தழிக்கப்பட்ட இத்திருக்கோயிற் கற்களைக் கொண்டு மன்னார்த்தீவில் முதல்முதல் அமைக்கப் பட்டது கிறிஸ்த்தவத் தேவாலயமாகும். இத்தேவாலயம் இன்று மிருப்பதை அறிய முடிகின்றது.

சிதைக்கப்பட்டுச் சீரழிந்த நிலையில் இருந்த இத்திருக்கோயிலை மறுசீரமைக்க வேண்டுமென்ற எண்ணம் நம் திருப்பெருந் திரு ஆறுமுக நாவலர் ஐயா அவர்களின் உள்ளத்தில் உதித்தது. அதன் பலனாகக் கொழும்பு வாழ் சைவ மேன்மக்கள் திரண்டு நாட்டுக்கோட்டை நகரத்துக்குச் செட்டி மாரின் துணை கொண்டு நிலம் பெற்றுச் சிறியதோர் ஆலயம் அமைக்கப்பட்டதுடன் வழுவிலாப்பூசையும் நிகழ்த்தப்பட்டுவந் தது.

காலப் போக்கில் ஆலயத்திற்கு ஓர் சபை அமைக்கப்பட்டு யாப்பும் இயற்றப்பட்டு பெருமை மிக்க சைவப்பேரறிஞர்களால் வழிநடாத்தப்பட்டது.

### திருப்பணிகள்

அன்று தொட்டு இன்றுவரை அரியதிருப் பணிகள் நடைபெறுகின்றன. 1976 ஆம் ஆண்டு திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாவினை எடுத்தது. ஐந்து திருத்தேர்கள் செய்யப்பட்டது. மகா சிவராத்திரி விழா, மகோற்சவப் பெருவிழாக்கள் சிறப்பாக 1990 வரை நடைபெற்று வந்தன.

திருப்பணிக்காகக் கருங்கற்றூண்கள் தமிழ் நாடு மாமல்லபுரம் அரசினர் சிற்பக்க லைக்கலூரியில் செதுக்கிமுடிக்கப்பட்டுள்ளது.

சீரும் சிறப்புமாகப் பழைய பெருமை யுடன் குறைவின்றிப் பெருவிழாக்கள் நடைபெற்று வந்த திருக்கோயில் 1990 ஆம் ஆண்டிலிருந்து இராணுவமுற்றுகையால் பொலிவிழந்து நடைபெற்று வந்த நிகழ்வு கள் யாவும் தடைப்பட்டன.

1990 இல் அழிவுகள் இருந்து இன்று வரை இராணுவம் வீதிகள் தவிர்ந்த ஏனைய ஆலயச்சூழலிலும் அயற்கிராமங்களிலும் இராணுவப் பாசறையமைத்து அகலாதிருப் பது சைவ அன்பர்களின் உள்ளத்தை வேத னையடைய வைக்கின்றது.

இருபது மில்லியன் ரூபா பெறுமதியான கோயில் உடைமைகள் களவாடப்பட்டும் சிதைத்தழிக்கப்பட்டும் விட்டன. 26 மடங்களும், பெருமனைகளும் 240 மக்கள் குடியிருந்த மனைகளும் தரைமட்டமாக்கப் பட்டதுடன் ஏதிலராய் இடம் பெயரவும் வைத்து விட்டன. இராணுவம் சூழ்ந்தி ருப்பதால் மீள் குடியமர்த்தவோ சிதைத்தழிக் கப்பட்ட மடங்கள் வீடுகளை புதிதாய் அமைத்திடவோ முடியாத அவலம் நிறைந் துள்ளது.

திருக்கோயில் திருக்குடமுழுக்குவிழா வினை 2003 தைத்திங்களில் நிகழ்த எண்ணி வீதியில் சிவாச்சாரியர்கட்கும் பணியாளர்கட்கும் பணிகொள்வோர்க்கு மென சில மனைகளமைக்கப்படுகின்றன.

திருப்பணிச்சபை நிதிநெருக்கடி காரண மாகத் திருப்பணி வேலைகட்கு சைவப் பெருங்குடிமக்களிடம் (உள்நாடு, வெளி நாடு) பெருநிதி கோரிநிற்கின்றது. திருக்கோ யில் முன்போலப் பொலிவு பெற மக்களின் பேருதவிமிகுதியாகத் தேவைப் படுவது இன்றியமையாத தொன்று என்பது சைவ மேன் மக்களால் உணரப்படவேண்டும்.

# திருக்கோணேஸ்வரம்

ஞான சிரோமணி
பண்டிதர். இ. வடிவேல்

**தொன்மை வரலாறு:-**

புராதான ஈழத்தின் கடற்கரை ஓரங்களில் புகழ்பெற்ற சிவ ஸ்தலங்கள் இருந்தன என்பது வரலாற்று ரீதியான உண்மை. புராதன ஈழத்தில் பஞ்ச ஈஸ்வரங்களாக விளங்கிய இவை இலங்கைக்கு விஜயன் வந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு (கி.மு. 5 ஆம் நூற்றாண்டு) பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே சிவத் திருப்பணியாக அமைக்கப்பட்டன என்பதும் வரலாற்று ரீதியான உண்மை.

நமது ஈழநாட்டுக் கரையோரத்தின் வட முனையில் நகுலகிரியில் அமைந்தது நகுலேஸ்வரம். தீவின் தெற்கு முனையில் அமைந்தது தொண்டேஸ்வரம். தீவின் கிழக்குக்கரையில் திருகோணமலையில் அமைந்தது திருக்கோணேஸ்வரம். தீவின் மேற்குக்கரையில் அமைந்தது முனீஸ்வரம். தீவின் வடமேற்குக் கரையில் அமைந்த திருக்கேதீஸ்வரம் என்பனவே இந்தப் பஞ்ச ஈஸ்வரங்கள்.

வரலாற்றுப் பேராசிரியராகிய டாக்டர் போல் ஈ. பீரிஸ் என்பவர் ஒரு சிங்களக் கனவான். கி.பி 1917 ஆம் ஆண்டு இந்த ஐந்து ஈஸ்வரங்களையும் பற்றி ஏசியாட்டிச் சங்கத்தில் பேசும்போது "விஜயன் இலங்கைக்கு வருவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பே இலங்கையில் புகழ் பெற்ற இந்த ஐந்து ஈஸ்வரங்களும் மக்களின் வழிபாட்டுத் தலமாக இருந்து வந்தன" என்று கூறியுள்ளார். இக்கூற்றிலிருந்து திருக்கோணேஸ்வரத்தின் தொன்மை தொனிக்கின்றது.

5 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற தெட்சண கயிலாய மான்மியமும் 6 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற திருமூலர் திருமந்திரமும் மேரு பர்வதத்திற்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட இடங்களைச் சிவ பூமி என்று குறிப்பிடுகின்றன. திராவிட மக்களின் பாரம்பரிய பூமியாகிய ஈழ நாட்டில் பூர்வீகக் குடிகள் இயக்கர் நாகர் எனப்படும் இரு தரப்பினராவார். கி.மு 1000 ஆண்டுக்காலப்பகுதியில் தாமிர பருணித்தமிழர்கள் பாண்டிய நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்து ஈழத்தில் குடியேறினார்கள். இயக்கர்கள் திராவிடத் தாய் மொழியான "எழு" மொழியையும், நாகர்கள் மூலத் தமிழையும் பேசி வாழ்ந்தனர். சங்ககாலப் புலவராகிய ஈழத்துப் பூதந்தேவனார் நாகர் குலத்தவராவர். இலங்கேஸ்வரன் இராவணன் இயக்கர் குலத்தைச் சேர்ந்த மன்னன். வீணைக் கொடியுடைய தமிழ் மன்னன் எனவே ஈழ நாடு சைவமும் தமிழும் தழைத்தோங்கிய சிவபூமியாகும்.

இந்தச் சிவபூமியாகிய திருக்கோணேஸ்வரம் ஒரு வரலாற்றுச் சுரங்கம். ஒரு தலத்தின் வரலாற்றினை எழுத முற்படும் போது அவ்வத் தலத்தின் புராணங்களை ஆதாரமாகக் கொண்டும் எழுத வேண்டுமென

காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். சுவாமிகளுடைய கருத்தை அருள் ஆணை யாகக் கொண்டு தெட்சண கயிலாய புரா ணம், திருக்கோணாசல புராணம், குளக் கோட்டு மன்னன் காலத்து கோணேசர் கல்வெட்டு, ஏட்டுப் பிரதிகள், கற்சாசனங் கள் அன்னியர் ஆட்சிக்காலத்துச் சரித்திர வரலாறுகள் திரு.வே. அகிலேசபிள்ளை, திரு.செ. குணசிங்கம் போன்ற நம் நாட்டுப் பேரறிஞர்களின் ஆராய்ச்சிக் குறிப்புகள், நமது ஈழ நாட்டைத் தரிசித்த போத்துக்கேசப் பாதிரியார் குவைறோஸ் போன்ற பிறநாட்டு நல்லறிஞர்கள் எழுதிய நூல்களில் கோ ணேஸ்வரம் பற்றிக் கூறப்பட்டுள்ள குறிப்பு கள் என்பனவற்றால் திருக்கோணேஸ்வரம் ஒரு வரலாற்றுச் சுரங்கந்தான் என அறிய முடிகிறது.

இதனைத் "திருக்கோணேஸ்வரம் தான் தெட்சண கயிலாயம்" என்பதை நிரூபணம் செய்து நான் எழுதிய நூலில் விரிவாக விளக்கியுள்ளேன். அந்த நூலைப் படித்து திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையை யும் வன்மையையும் அறியும் வண்ணம் வாசகரிடமே விட்டு விடுகிறேன். மிக விரி வான வரலாறுகளை இச்சிறு கட்டுரைக்குள் அடக்கிக் கூறுவது சிரமமாகும்.

***புராண வரலாறுகள்:-***

உத்தர கயிலையாகிய மேரு மலையில் ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்கும் இடையே ஏற்பட்ட தன்மானப் போரில் ஆதி சேடன் தனது ஆயிரம் பண முடிகளால் மேரு மலையை மூடிக்கொள்ள வாயுபகவான் தனது முழுப் பலத்தாலும் மேருமலையின் சிகரங்கள் மூன்றைப் பெயர்த்துத் தெற்கே வீசினான். அவற்றில் ஒன்று திருக் காளத்திமலை. மற்றது திருச்சிராமலை. அடுத்தது திருக்கோணமலை. ஆதாரம் செவ்வந்திப்புரானம்.

*"முன்னர் வீழ்ந்திடு சிகரி காளத்தியாய் மொழிவர்*
*பின்னர் வீழ்ந்தது திரிசிரா மலை எனும் பிறங்கல்*
*அன்னதற்பின் வீழ்ந்தது திரிகோணமா அசலம்*
*இன்ன மூன்றையும் தெட்சணகயிலை என்றுரைப்பார்."*

அதி தெற்கே வீழ்ந்த குன்று திருக்கோண மலை. அதனால் அது தெட்சண கயிலாயம் என்று போற்றப்படுகிறது. தெட்சண கயிலா யம் என்று போற்றப்படும் திருக்கோணேஸ் வரத்துக்கு திரிகூடம், மச்சேஸ்வரம் என்னும் பெயர்களுமுண்டு. இந்தத் தலத்தின் அற்பு தங்களைச் தெட்சண கயிலாய மான்மியம், தெட்சண கயிலாய புராணம், திரிகோணா சல புராணம், கோணமலை அந்தாதி, கோ ணேசர் கல்வெட்டு என்னும் பழம்பெரும் நூல்கள் விளக்கிக் கூறுகின்றன.

பாரம்பரியமாகப் பண்டைத் தமிழர்கள் வாழ்ந்த குல-மோறியாக் கண்டம், குமரிக் கண்டங்களின் பேரழிவு ஒரு தனிப்பெரும் வரலாறு.

"பஃறுளி-யாற்றுடன் பன்மலை அடுக் கத்துக்குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"

என்பது சங்க நூல் கூறும் அகச் சான்றா கும். கடல் கோள்களினால் குமரிக் கண்டத் திலிருந்த ஆலயங்கள் அழிந்தபின் சோழ மன்னர்களால் எழுப்பப்பட்ட ஆலயங்கள் திருக்கோணமலைக் குன்றில் இருந்தன.

இந்த ஆலயங்களுக்குப் புணருத்தாரணத் திருப்பணிகள் செய்தவன் குளக்கோட்டு மன்னன் அவன் செய்த திருப்பணிகளை இப்பாடலில் காணலாம்.

*"திருந்து கலிபிறந்து ஜைஞ்னூற்றொருப துடன்*
*இரண்டாண்டு சென்ற பின்னர் புரிந்திடப மாதமதில் ஈரைந்தாந்தேதி திங்கள் புணர்ந்த நாளில் தெரிந்த புகழ் ஆலயமும் சினகரமும் கோபுரமும் தேரூர் வீதி பரிந்துரத்ன மனிமதி லும் பாவநாசச் சுனவயும் பகுத்தான் மேலோன்.*

என்பது கோணேசர் கல்வெட்டு 22 ஆம் பாடலாகும். அன்றியும் குளக்கோட்டு மன்னன் திருப்பணி செய்த வரலாறுகளைத் தெட்சண கயிலாய புராணம் திருநகரச் சுருக்கம் 55 ஆம் பாடல் கோணேசப் பெருமானுக்குக் கோயில் எடுத்ததையும், 59 ஆம் 60 ஆம் பாடல்கள் மாதுமை அம்பா ளுக்குக் கோயில் அமைத்ததையும் 62 ஆம் பாடல் திருமாலுக்கு ஆலயம் எழுப்பிய தையும் 63 ஆம் பாடல் பாவ நாசச்சுனையும் அருகே தீர்த்த மண்டபமும் தேரூர் வீதிகள் மதில்கள் என்பன அமைத்ததையும் கூறு கின்றன. பிரசித்தி பெற்ற பிரம்மாண்டமான மூன்று கோயில்களைக் குளக்கோட்டு மன்னன் கட்டுவித்தான் என்று புராண வரலாறுகள் கூறுகின்றன.

**சரித்திர வரலாறு:-**

மேற்கூறிய வரலாறுகளை அறிவியலா ளர்களின் சரித்திர ஆதாரங்கள் பின்வருமாறு கூறுகின்றது.

1. கி.பி 1624 ஆம் ஆண்டு கோணேசர் கோவிலை இடித்தழித்த போத்துக்கீச தளபதியாகிய கொன்ஸ்ரன்டையின் டீசா என்பவன் போத்துக்கல் அரசனுக்கு அனுப்பிவைத்த அறிக்கை ஒன்று லிஸ்பன் நகரிலுள்ள அஜுடா நூல் நிலையத்தில் இருக்கின்றது. அதில் மனுராசா என்னும் மன்னன் இலங்கையை ஆண்டான் என்றும் அவன் கி.மு. 1300 ஆம் ஆண்டுக்கு முன் கோணேசர் கோவிலைக் கட்டினான் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

2. கொன்ஸ்ரன் டைன் டீசாவின் மகன் ஜெறொட்றிக்கோடீசா கி.பி. 1679 ஆம் ஆண்டு வெளியிட்ட நூலில் "மலையின் உச்சிக்குச் செல்லும் செங்குத்தான வழி தொடங்குமிடத்தில் ஒரு கோயிலும் மற்றது செங்குத்தான பாதையின் மத்தியிலும், மிகவும் சிறப்பு வாய்ந்த பெரிய கோயில் உச்சி மலையிலும் இருந்தது. இவைகள் மூட நம்பிக்கையுள்ள பெருந்தொகையான யாத்திரிகர்களால் வழிபடப்பட்டு வந்தன" என்று எழுதியுள்ளார்.

3. கலாநிதி போல் ஈ பீரிஸ் என்பவர் எழுதிய இலங்கை என்னும் நூலில் கி.பி. 1624 ஆம் ஆண்டு டீசா என்பவன் கோணேசர் கோவிலை இடித்தழித்தான். 400 அடி உயரமான மலையில் இருந்த மூன்று கோயில்களை அழித்து முக்கோண வடிவமான கோட்டையை போத்துக்கீசர் கட்டினார்கள் என்று குறிப்பிடுகிறார்.

4. போத்துக்கீச சரித்தர நூலாசிரியராகிய குவைறோஸ்ள் பாதிரியார் எழுதிய நூலில் "கிழக்கின் ரோமாபுரியாக கோணேசர் கோவில் விளங்குகின்றது. இங்கிருந்த மூன்று கோயில்களையும்

இந்திய நாட்டு இந்துக்களும் போற்றி வணங்கி வருகிறார்கள் என்று கூறியுள்ளார்.

5. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி 1890 ஆம் ஆண்டு ஹென்றி டபிள்யு கேவ் என்பவர் எழுதிய இலங்கை என்னும் சரித்திர நூலில் திருக்கோண மலையிலுள்ள திருக்கோணேஸ்வரம் மிகப் பழமையானது. வரலாற்றுச் செல்வங்களைக் கொண்டது. புத்தர் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே இந்துக்கள் இதைப் புனித இடமாகப் போற்றி வந்துள்ளார்கள் என்று கூறியுள்ளார்.

**ஆன்மீக வரலாறு:-**

திருக்கோணேஸ்வரம் ஆழ்ந்து அகன்று பரந்து கிடக்கும் சமுத்திரத்தால் சூழப்பட்டிருப்பதுபோல, ஆழ்ந்து அகன்ற நுண்ணியனாகிய கோணேசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் கோணேஸ்வரத்தின் வரலாறுகளும் ஆழ்ந்து அகன்ற தொன்மையும் வண்மையும் உடையது.

இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முன் திருக்கோண மலையில் சிவ வழிபாட்டுத் தலமொன்று இருந்தது. அது தெட்சண கயிலாயம் எனப்படும் திருக்கோணேஸ்வரச் க்ஷேத்திரமாக விளங்கியதென்று சரித்திர ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். என்பதை மேலே கூறப்பட்ட செய்திகளால் அறியக்கிடக்கின்றது.

திருக்கோணேஸ்வரம் மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றும் ஒருங்கே அமைந்த சிவ சேக்ஷத்திரம், மூர்த்தி மாதுமை அம்பாள் சமேத கோணேசப் பெருமான் தீர்த்தம் பாவநாசம். தல விருட்சம் கல்லால்.

7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் கோணேஸ்வரத்துக்குத் திருப்பதிகம் அருளிச் செய்துள்ளார். "நிரைகழல் அரவம்" என்று தொடங்கும் திருப்பதிகத்தில் புராண இதிகாச வரலாறுகளையும் தெய்வீக இயற்கை அழகையும் அருட் செயல்களையும் பக்தி நெறியையும் பாடி மக்களை ஆன்மீக வாழ்க்கைக்கு நெறிப்படுத்தியுள்ளார்.

7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் பெருமான் அருளிச் செய்த "தக்கார் அடியார்க்கு" என்று தொடங்கும் திரு நெய்த்தானத் திருப்பதிகத்தில் "தெக்காரும் மாகோணத்தானே" என்று கோணேசப் பெருமானை நினைந்து பாடியிருக்கும் தலம் திருக்கோணேஸ்வரம்.

9 ஆம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த "நிறைக்காட்டானே" என்று தொடங்கும் ஊர்த்தொகைப் பதிகத்தில் "மறைக்காட்டானே திருமாந் துறையாய் மாகோணத்தானே" என்று கோணேசப் பெருமானை நினைந்துப் பாடியிருக்கும் தலம் திருக்கோணேஸ்வரம்.

12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் பாடிய திருத்தொண்டர் புராணத்தில் "அந்நகரில் அமர்ந்து" என்ற பாடலில் "ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழம் தன்னில் மன்னு திருக்கோண மலை மகிழ்ந்த செங்கண் மழவிடையார்"

என்று கோணேசப் பெருமானைப் பாடிய தலம் திருக்கோணேஸ்வரம்.

15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரி நாதர் அருளிச் செய்த "விலைக்கு மேனியில்" என்று தொடங்கும் திருப்புகழில் "நிலைக்கு நான்-மறை மகத்தான பூசுரர் திருக்கொணாமலைத் தலத்தாக கோபுரம்" என்று நினைத்துப் பாடிய தலம் திருக்கோணேஸ்வரம்.

14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த சிவநாமக் கலி வெண்பாவில் "மன்னு திருக்கோண மாமலையில் மாதுமை சேர் பொன்னே கோணேசப் புராதனனே" என்று கோணேசப் பெருமானை நினைத்துப் பாடிய தலம் திருக்கோணேஸ்வரம்.

16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குரு நமச்சிவாய தேவர் அருளிச் செய்த நமச்சிவாய மாலையில் "கோணமா மலையில் வாழும் கோதிலா ஆதியே நீ ஆணிவைலப் பெண்ணுமில்லை அத்தனே நமச்சிவாய" என்று கோணேசப் பெருமானை நினைந்து பாடியிருக்கும் தலம் திருக்கோணேஸ்வரம்

"காசில் பொற் சிலம் பின் சிகரத்தைக் கால் பறித்தே எறிந்திட வந்த மாசில் தென் கோண மாமலை" என்று கதிரை மலைப் பள்ளினில் கூறப்படும் திருக்கோண-மாமலை, திருக்கோணேஸ்வரம்.

திருக்கோணேஸ்வரத்தைச் சுற்றியுள்ள ஆழ்கடலில் ஆராய்ச்சி செய்த திரு. மைக் வில்சன், டாக்டர்.சோ. ஆதர்கிளாக், திரு ரொட்ணி ஜெயலஸ் என்னும் ஆழ்கடல் ஆய்வாளர்கள் மிகப் பழமை வாய்ந்த ஆலயம் கடலின் அடியில் அமிழ்ந்திக் கிடப்பதாகக் கண்டறிந்தார்கள். பிரம்மாண்டமான மணியும், விளக்குகள், தூண்கள், கோவில் தளங்கள் என்பன கடலின் அடியில் இருப்பதாகப் பத்திரிகைகளில் பிரசுரித்தார்கள், இந்தக்கோவில் கடல் கோளினால் அழிந்த கோயிலாக இருக்கலாம்.

போத்துக்கீசரும் ஒல்லாந்தரும் பொருளாசையால் செய்த அருட்டூளியங்களால் அழிந்த திருக்கோவிலில் அமர்ந்து அருள் பாலித்த பிள்ளையார், கோணேசப் பெருமான் மாதுமை அம்பாள், சந்திரசேகரர். வீரசக்தி திரிசூலம் என்பவை 1948 ஆம் ஆண்டு கோணேஸ்வரத்தைச் சுற்றியுள்ள ஆழிக்கரை நிலத்துளிருந்து வெளிப்பட்டனர். குளக்கோட்டு மன்னன் பிரதிஷ்டை செய்த அந்த விக்கிரகங்களை திருக்கோணமலைச் சைவ அடியார்களும் ஈழ நாட்டு இந்துக்களும் ஒன்று சேர்ந்து திருப்பணி முடித்த திருக்கோவிலில் 1963 ஆம் ஆண்டு மீண்டும் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிஷேகத்தை நிறைவேற்றியுள்ளார்கள்.

பேரின வாதிகளும் அரசியல் வாதிகளும் கோணேஸ்வரத்தின் வரலாற்றைத் திரிகரண சுத்தியோடு உணர்வார்களானால் ஈழத்தில் சமாதானமும் சுபீட்சமும் அமைதியும் நிலவும்.

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வரலாறு

இலங்கை மாதாவின் சிகரமெனத் திகழ்வது யாழ்ப்பாணம். அதன் இரு கண்கள் போலத் துலங்குவது துன்னாலை, பொன்னாலை என்னும் இடங்களில் உள்ள விஷ்ணு ஆலயங்களாகும் என்று தட்சண கைலாய மான்மியம் கூறுகின்றது. அலை கடலின் தென்றல், அழகிய வெண்மணற் பரப்பு, அதைச் சுற்றி விரிந்த குடைபோல் படர்ந்த நிழல்தரும் ஆல், அரசு, கொன்றை, நாவல், இலுப்பை, சவுக்கு போன்ற நிழல் தரு விருட்சங்கள்.

இவற்றின் மத்தியில் பார்ப்பவர் மனதில் பக்திப்பரவசம் தோன்றச் செய்யும் ஏழு தளமும் எழுபத்தொரு அடி உயரமும் கொண்ட இராஜகோபுரத்தின் புதுப் பொலிவுடன் காட்சி தருவது வரலாற்றுப் பெருமைமிக்கதும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றதுமான துன்னாலை வல்லிபுரம் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்.

துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் - என்பது கீதா உபதேசம். அதர்மம் மேலோங்கி தர்மம் குன்றும்போது நல்லாரைக் காப்பதற்கும் கெட்டாரை அழிப்பதற்கும் யுகந்தோறும் நான் அவதரிப்பேன் என்று பகவத்கீதையில் அருளிய காத்தற் கடவுளாம் விஷ்ணு பரமாத்மாவுக்கு இலங்கையில் அமைக்கப் பட்ட விஷ்ணு ஆலயங்களுள் சிறப்பு வாய்ந்ததும் முதன்மை வாய்ந்ததுமாக இவ்வாலயம் விளங்குகின்றது.

**வரலாற்றுச் சிறப்பு**

இந்த ஆழ்வார் ஆலயம் அமைந்துள்ள வல்லிபுரம் பகுதியை யாழ்ப்பாண இராச்சியத்தின் பழைய இராசதானியாகிய சிங்கை நகர் என்று சுவாமி ஞானப்பிரகாசர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை போன்ற அறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அத்துடன் தொல்பொருள் ஆராய்ச்சிக்குட்பட்ட பகுதியாகவும் இவ் வல்லிபுரம் பகுதி விளங்குவதால் இப்பகுதியில் அமைந்துள்ள இவ்வாலயமும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதெனக் கூறப்படுகின்றது. எங்கும் இல்லாதவாறு கிருஷ்ண பரமாத்மாவின் ஆயுதமாகிய சக்கர ஆயுதம் கர்ப்பக்கிரகத்தில் (மூலஸ்தானத்தில்) பிரதிஷ்டை செய்யப்பட்டு இருப்பது இங்குள்ள விசேட அம்சமாகும்.

சக்கரம் மூலஸ்தானத்தில் வைத்து பூசிக்கப்படுவதற்கும் இவ்வாலயம் இப்பகுதியில் தோன்றியதற்கும் பல கர்ண பரம்பரைக் கதைகள் உண்டு. ஆனால் இன்று சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படுவது யாதெனில் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் இருந்து சுமார் மூன்று மைல் தொலைவில் உள்ள வங்கக்கடலில் இன்று கடல் தீர்த்தோற்சவம் நடைபெறும் பகுதியிலே புரட்டாதி பூரணை தினத்தன்று அதிசய மீன் ஒன்று துள்ளிக்குதித்து ஆரவாரம் செய்தது. மக்கள் செய்வது அறியாது ஏங்கித்தவித்தனர். கற்கோவளம் பகுதியில் வாழ்ந்த கடலோடிகள் பலரும் செய்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை.

வலைகளைக் கிழித்துக்கொண்டு மிக உயரத்தில் பாய்ந்து குதித்துக் கட்டுமரங்களை உதைத்து வேடிக்கையாக விளையாடிக் கொண்டிருந்தது அம்மீன். இரண்டு

மூன்று தினங்களாக நடைபெற்ற இச்செயலைக் கேள்விப்பட்ட மக்கள் கூட்டம் கடற்கரையில் திரண்டது.

வராத்துப்பளையைச் சேர்ந்த 'லவல்லி' என்ற பெண்ணுக்கு நாகசாபம் காரணமாகப் பிள்ளை இல்லாது இருந்தது. இதனால் இவரைப் பலரும் மலடி, மலடி எனக் கேலியும் கிண்டலும் செய்தனர். இப்பழிச் சொற்களால் மனம் நொந்த அம்மையார் பழிச்சொல் தீரத் தனக்கு ஒரு குழந்தை வேண்டும் என்று நெடுங்காலம் தவமிருந்தார். அதிசய மீன் செய்யும் திருவிளையாடலை அறியாதிருந்த அன்னையின் கனவிலே பகவான் தோன்றி நடைபெறும் திருவிளையாடல்களைக் கூறி, குறித்த இடத்திற்கு மறுநாள் வரும்படி பணித்து மறைந்தார். கண் விழித்து எழுந்த 'லவல்லி' இறைவனை நினைத்தபடி குறிப்பிட்ட இடத்திற்கு வந்தாள். கடற்கரையில் உட்கார்ந்து கைகளை நீட்டிய வண்ணம் பகவானின் திருநாமங்களான கோபாலா, கோவிந்தா, கண்ணா, கார்முகில் வண்ணா, ஹரியோம் நாராயணா என்று கூறியவாறு தியானித்துக்கொண்டிருந்தார். என்ன அதிசயம்.....? மூன்று நாட்களும் பலரையும் திகிலடையச் செய்த அம்மீனானது மடியில் குதித்து அழகான குழந்தையாக மாறியது.

குழந்தையைக் கண்டதும் அடியவர்கள் ஆடினர், பாடினர், ஆரவாரம் செய்தனர், அக மகிழ்ந்தனர். அம்மையார் ஆனந்தக்கண்ணீர் வடித்தார். பல்லக்கொன்றை வரவழைத்து குழந்தையைப் பல்லாக்கில் வைத்து அன்பர்கள், அடியார்கள், அவ்வூர், அயலூர் மக்கள் புடைசூழ செடிகளும், கொடிகளும், மண்மேடுகளும் அண்டிய பகுதிகளால் தூக்கி வந்தனர். நெடுந்தூரம் பல்லக்கைத் தூக்கியமையாலும், பல்லக்கு வரவரப் பாரம் கூடியமையாலும் களைப்புற்ற மக்கள் மரநிழலில் பல்லக்கை வைத்து விட்டுத் தாக சாந்தி செய்தனர். பின்னர் மீண்டும் பல்லக்கைத் தூக்க முயன்றனர். மாயக்கண்ணன் அவ்விடமே தனக்கு ஆலயம் அமைக்க உகந்த இடமெனத் திருவவுள் கொண்டானோ தெரியவில்லை நீண்டதூரம் தூக்கி வந்த பல்லக்கை அசைக்கமுடியவில்லை. வந்தோர் செய்வதறியாது நின்றபோது குழந்தை மறைந்தது. அந்தணர் ஒருவர் அவ்விடத்தில் தோன்றினார். அங்குள்ள பக்தர் ஒருவரிடம் சக்கரம் ஒன்றைக் கொடுத்து அதையே வைத்து பூசிக்குமாறு கூறி அவரும் மறைந்தருளினார்.

அந்த அந்தணரால் கொடுக்கப்பட்ட சக்கரமே இன்று கர்ப்பக்கிரகத்தில் வைத்துப் பூசிக்கப்படுவதாகவும், பல்லக்கு இறக்கி வைக்கப்பட்ட இடமே இன்று ஆலயம் அமைக்கப்பட்ட பகுதியாகவும் கூறப்படுகிறது.

ஏனைய ஆலயங்களில் சந்தனமே நெற்றியில் பொட்டாக போடுவதற்குப் பயன்படுகிறது. ஆனால் இந்த வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நாமமே பொட்டாகப் போடுவதற்குப் பயன்படுகிறது. இந்த நாமம் ஆலயத்திற்கு அருகில் உள்ள நாமக்குளத்தில் இருந்தே தோண்டியெடுக்கப்படுகிறது. இதுவும் ஆலயத்தின் ஒரு சிறப்பாகும்.

முன்னர் நாமம் தோண்டப்பட்ட பகுதியிலே தற்போது கேணித் தீர்த்தோற்சவம் இடம்பெற்று வருகிறது. இவ்வாலயத்தில் கண்ணன் பிறப்பு, ஆவணி ஞாயிறு, மார்கழி ஞாயிறு, தைப்பொங்கல், வருடப்பிறப்பு, ஏகாதசி தினங்கள் விசேட தினங்களாகக் கொண்டாடப்படுகிறது.

*"தொன்மை சேர் கீர்த்தி ஓங்கும்*
*துன்மையம் பதியின் கண்ணே*
*மன்னிய கருணை கொண்ட வல்லிபுர*
*ஆழ்வாராகிப்*
*பொன்மகள் பூ மாதேவி புடைசூழ வரங்கள்*
*நல்குஞ்ச*
*சென்னியில் துளவஞ்ச் செய்யுந் திருமாலே*
*சரணம் நீயே"*

# சைவசித்தாந்தத் தத்துவத் தலைக்காவலருடன் ஒரு சில மணித்துளிகள்

*சென்னைப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தப் பேராசிரியராக 16 வருடங்களுக்கு மேல் பணியாற்றிப் புகழ் பூத்த பேராசிரியர் முனைவர் வே. இரத்தினசபாபதி அவர்கள் கடந்த யூலை மாதம் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அழைப்பில் மாமன்றத்தலைவராக இருந்து அரும் பணியாற்றி மறைந்த வே. பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரைத் தொடரில் பத்தாவது நினைவுப்பேருரை நிகழ்த்த இலங்கை வந்திருந்தார். கொழும்பில் பல இடங்களிலும் மஸ்கெலியா, பலாங்கொட ஆகிய மலையகப்பகுதிகளிலும் தன் அறிவுக்கடலிருந்து பல அரிய கருத்து முத்துக்கள் தெரிவித்த பேரறிஞர் இன்று வாழ்கின்ற சைவ சித்தாந்த அறிஞர்களில் முன் வரிசையில் நிறுத்தி மதிக்கப்படும் தத்துவத்தலைவர் - அவர்களைச் சந்தித்து கலந்துரையாடும் பாக்கியம் கிடைத்தது. அவர் இரண்டு மணிநேரமாக பல அரிய கருத்துக்களை தந்தார். ஆனால் சுருக்கமாக சிலவற்றை இங்கு பேட்டிரூபத்தில் தருகிறோம்.*

கே. தாங்கள் உரையாற்றும் போது இறை வணக்கம் கூறி குருவையும் வணங்கியே உங்கள் உரைகளை ஆரம்பிக்கிறீர்கள். ஏன் அப்படி செய்கிறீர்கள் என விளக்க முடியுமா?

ப. மாதா-பிதா-குரு-தெய்வம். எங்களுக்கு அறிவைத் தந்து வளர்த்த குருவை நாங்கள் மறக்கக்கூடாது. திருப்பாதிரிப்புலியூரில் உள்ள ஞானியார் மடாலயத்தில் இடைக் கல்வி பயின்ற நான் தவத்திரு ஞானியாரடிகளின் நேர்முக மாணவன். தவத்திரு ஞானியாரடிகள் தான் என் குரு அவரை எப்போதும் நினைத்து வணங்குகிறேன்.

கே. தங்கள் சொற்பொழிவுகளில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை அடிக்கடி நினைவு கூருகிறீங்களே? அதன் காரணம்?

ப. யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தந்த சைவ வினாவிடை பாடம் என்பனவே நான் படித்த முதற் புத்தகங்கள். அவரைப் போல சைவத்தையும் தமிழையும் வசன நடையில் தெளிவாக யாரும் எழுதவில்லை. அவரும் எனக்கு ஒரு குரு. அவரின் நாட்டிற்கு வருவதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

கே. சைவ சமயம் என்றால்....

ப. "சிவன் என்னும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மான்" என்றும் "சிவன் என்னும் ஓசையல்ல தறையோ உலகில் திரு நின்ற செம்மை உளதே" என்றும் அப்பரடிகளால் உணர்ந்து ஓதப் பெற்ற செம்பொருளாம் சிவத்துடன் சம்பந்தமாகும் திருவுடைச் சமயமே சைவ சமயம்.

கே. சைவ சமயத்தைச் சார்ந்த பல பிரிவு கள் இன்னும் வழக்கில் உள்ளனவா?

ப. சைவ சமயம் சார்ந்த பிரிவுகள் பலவாயிருப்பதும் தென் தமிழ் நாட்டு மக்களால் அறிவதற்குரியதாகவும் அடைந்து அனுபவித்தற் குரியதாகவும் வழக்கிலுள்ள பெருநெறியானது சைவசித்தாந்தச் செந்நெறியே.

கே. சைவ சமயத்தின் அனுபவநிலை....?

ப. "அவனே தானே ஆகிய அந்நெறி" என்று இதனை எடுத்துக்கூறிய மெய் கண்டார் இந்நெறியின் அனுபவ நிலையை ஏகன் ஆகி இறைபணி நிற்றல் என்று எடுத் துக் காட்டிச் சிறப்பித்தார்.

கே. சைவசித்தாந்தப் பெரு நெறி என தாங்கள் அடிக்கடி குறிப்பிடுவது....

ப. வேதங்களின் உயிரோட்டமாக அமைந்துள்ள மகாவாக்கியங்களை ஏற்றுக் கொண்டு அனுபவப்பொருளை வழங்கியும் ஆகமங்களை உடன் கொண்டு அமைக்கப் பெற்ற அனுபவக்கருவூலங்களின் தொகை யாக விளங்குவதே சைவசித்தாந்தப் பெரு நெறி. உங்களின் நாட்டைச் சேர்ந்த வணக் கத்துக்கும் போற்றுதலுக்கும் உரிய மூத்த சட்டத் தரணியும் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபைத்தலைவருமான திரு. இ. நமசிவாயம் அவர்கள் எழுதிய "சைவசித் தாந்தம் கூறும் தத்துவங்களும் தாத்துவிகங் களும் ஒரு விஞ்ஞான நோக்கு" என்ற நூலை இளம் சமுதாயம் படித்து உணர வேண்டும்.

கே. சைவசமய தத்தவங்கள் இளம் சமுதாயத்திற்கு எவ்வகையில் உதவுகின்றன?

ப. இளம் சமுதாயத்தை நல்வழிப்படுத்த சைவ சமய தத்துவங்கள் பெரிதும் உதவு கின்றன. குறிப்பாக இளம் சமுதாயத்தினர் மத்தியில் சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பரப்புவதன் மூலம் இறை தத்துவத்தை வெளிக்கொணர முடியும். உலகின் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப, இளம் சமுதாயத்தினரும் தம்மை மாற்றி அமைத்துக் கொள்ளுகின் றனர். இவ்வாறு எமது மதத்தின் தத்துவங்க ளையும் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் அவர்களது மத்தியில் புகுத்துவதன் மூலம் நல்லதோர் புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும்.

கே. இளம் சமுதாயத்திற்கு மட்டுமல்ல, பொதுவாக அனைவருமே சைவ சித்தாந்தத் தில் தெளிவு பெறவேண்டியதன் அவசியத் தைப் பற்றி சொல்வீர்களா?

ப. சைவ சித்தாந்தத்தில் தனிமனித ஈடேற் றத்திற்குரிய வழிமுறைகள் பலவற்றை எடுத்தியம்பியுள்ள போதிலும், இதற்குள் காணப்படும் பல விடயங்களின் உட்பொ ருள்கள் குறித்து, இன்றைய சமுதாயத்தினர் அறியாதவர்களாகவே உள்ளனர்.

எந்தவொரு செயற்பாடும் காரண காரிய மின்றி இடம் பெறாது. நாம் எந்தச் செயற் பாட்டை எடுத்துக் கொண்டாலும், அதற்கு ஒரு காரணம் உண்டு என்பதையே தெளிவுபடுத்துகின்றோம். அத்துடன் எந்தவொரு செயற்பாட்டையும் காரண காரியத்துடன் தெரிந்துகொள்ள முற்பட்டால் தான் அது நீடித்து நிலைத்தவொன்றாக இருக்கும்.

ஒரு மாணவன், ஆசிரியர் கற்பிக்கும்

பாடங்களை எவ்வித சந்தேகங்களுமின்றி காரண காரியங்களுடன் தெரிந்துகொள்ள முற்படும் போதுதான் குறித்த பாடம் தொடர்பான தெளிவான அறிவைப் பெற்றுக் கொள்கிறான். இதைப்போன்று தான் சைவ சித்தாந்தம் தொடர்பான சந்தேகங்களை தெளிவுறக் கற்றுக்கொள்ளும் போது வாழ்வியலின் தத்துவத்தை அவன் விளங்கிக் கொள்கிறான்.

"எண்ணம்போல வாழ்க்கை, மனம் போல மாங்கல்யம்" என்றதோர் பழமொழி உண்டு. இதன் மூலம் என்றும் நல்லதையே நினைத்தால், நல்லதே நடக்கும் என்பதையே தெளிவுபடுத்துகிறது. ஒரு பொருளை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடன் விடாப்பிடியுடன் செயற்படும்போது, நினைத்த பொருள் கிடைக்கும் என்பதையே நாம் வெளிப்படையாகக் காண்கின்றோம்.

மேலும், உலக தத்துவத்தில் கடவுள் ஆன்மாக்களை தன்னிடம் அழைப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், சைவ சித்தாந்தத்தில் ஆண்டவன் எமக்குள்ளே இருக்கின்றான் என்று கூறப்படுகின்றது. உங்களுக்கு உள்ளேயிருக்கின்ற பரம்பொருளாகவே அது அமைந்துள்ளது.

கே. "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தைப் பற்றி சொல்வீர்களா?

ப. "ஓம்" சொல்லாத எந்த விஷயமும் செயற்பாட்டுக்கு வராது. ஒளியைத் தரும் ஜெனரேட்டர் தானாக இயங்கமாட்டாது. இயங்குவதற்கு ஒரு கருவி இருக்கிறது. அதுபோலவே "ஓம்" எனும் பிரணவ மந்திரம். அதைச் சொன்னால் எந்தவொரு விஷயமும் ஆற்றல் பெறும். அதற்கொரு மகத்தவம் உண்டு.

**கே. பல வாழ்க்கை நடைமுறைகள் உண்டு. அவற்றில் ஒன்று பற்றிக் கேட்க விரும்புகிறோம். திருமணத்தின்போது மணமக்களை அறுகு அரிசிபோட்டு ஆசீர்வதிக்கும் நடைமுறை பற்றி சொல்வீர்களா?**

ப. மணமக்களை அரிசி மட்டுமல்ல நெல்போட்டும் ஆசீர்வதிக்கவேண்டும். வாழை இலை மீது கும்பம் வைக்கும் பொழுது நெல்லைப் போட்டு, அதன்மேல் அரிசியையும் போட்டு அதன் மேலே கும்பம் வைக்கும் வழக்கமும் உண்டு. மணமக்கள் வாழ்க்கையிலே நெல்லைப் போல விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்பதற்காகவே அவ்விதம் செய்யப்படுகிறது. உமியை நீக்கினால் அரிசியைப் பெறுகிறோமல்லவா? இது தவிர, அரிசியை சமையலுக்குப் பயன்படுத்துகிறோம். சமையல் என்றால் பக்குவப்படுதல் என்று பொருள். சமையல் பாத்திரத்திலுள்ள ஒரு அரிசியை எடுத்து அழுத்திப் பார்த்துவிட்டு வெந்துபோய் விட்டது என்று சொல்கிறோம். அரிசியின் உள்ளே தடிப்பாகவும் வெளியே அவிந்தும் இருந்தால் இன்னும் வேகவில்லை என்கிறோம். உள்ளே தடிப்பாக இருப்பதுதான் பரம்பொருள். அதனை தன்னுள்ளே வைத்துக் கொண்டு மேலே மூடிக் கொண்டு இருப்பது அரிசி. அதுவே ஆன்மா. உள்ளே இருக்கின்ற பரம்பொருளாகிய இறைவனும், அவனை மூடியுள்ள ஆன்மாவும் சமைத்தல் மூலம் பக்குவப்படுதல் என்ற வகையில் இரண்டறக் கலப்பதுபோல மணமக்களுடைய வாழ்க்கை இருக்கவேண்டும். நெல்லாக இருக்கும்பொழுது இணைபிரியாக வாழவேண்டும். வேற்றுமை வரக் கூடாது. இரண்டு பேருமே இணைந்து ஒருவரோடு ஒருவர் விட்டுக்கொடுத்து வாழ்தல் வேண்டும் – இதற்கு இலக்கணம்

தான் அரிசி. நெல்லாக இணைதல், அரிசியாக பக்குவப்படுதல் என்பதே தத்துவம்.

அருள் அனுபவம் பெற்றவர்களாலும், வாழ்க்கை முறையை தேர்ந்தெடுத்தவர்கள், வாழ்க்கை இதுதான் என்று புரிந்து கொண்டவர்கள், வாழ்க்கையில் அனுபவம் பெற்றவர்கள், வயதில் மூத்தவர்கள் என்போர்களாலும் ஆசீர்வாதம் வழங்கப்படுவதில் தனித்துவம் இருக்கிறது.

கே. அறுகரிசி போடும் முறை பலவாறு வேறுபடுகிறது. எது சரியானமுறை?

ப. இறைவனை வணங்கும் போது, முதலில் முடியைப் பார்க்கக்கூடாது. முதலில் நம்மைக் காக்கும் திருவடியைப் பார்த்து விட்டு கொஞ்சம் கொஞ்சமாக மேலே சென்று முடியில் நின்று, பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக கீழே இறங்கி திருவடிக்கு வரவேண்டும். இப்படி மூன்றுமுறை பார்த்தல் வேண்டும். இறைவனை எப்படிப் பார்த்து ஆனந்திக்கிறோமோ அதுபோலவே மணமக்களையும் கருதி ஆசீர்வதிக்கும் முறையே இதுவாகும்.

கே. தேவாரம் பாடி முடிந்ததும் அரஹர நம பார்பதிபதயே என்று ஏன் சொல்கிறோம்?

ப. அரஹர என்பது என்னுடைய ஆன்மாவில் இருக்கின்ற அழுக்குகளை அரித்து அரித்து நீக்குபவன் என்று அர்த்தம். நமஹ என்ற சொல்லுக்கு வணக்கம் என்றும் பொருள். இறைவியில்லாத இறைவனில்லை. உமையொரு பாகன் என்று சொல்லப்படுவதுண்டு. பார்வதியின் கணவன். என்னுடைய ஆன்மாவில் இருக்கின்ற அழுக்கை அழிப்பவனும் பார்பதிக்கு கணவனாக இருப்பவனுமான இறைவனுக்கு வணக்கம் சொல்கிறேன் என்பதற்காகவே அப்படி சொல்கிறோம்.

கே. நிறைவாக, இன்றைய இளைஞர்களுக்குத் தாங்கள் தரும் அறிவுரை?

ப. காலம் மாறுகிறது. நான் சிறுவனாக இருந்தபோது தொலைபேசி கிடையாது. என் மகன் பிறந்த பின் தொலைபேசியுடன் வளர்ந்தான். இப்போது என் பேரன் கணனியுடன் வாழ்கிறான். விஞ்ஞான ரீதியாக இவை நன்மை தரும் மாற்றங்கள். ஆனால் அவை எங்கள் வெளிப்புற வாழ்க்கையை வசதியை உயர்த்துகின்றன. எமக்குள் இருக்கும் பரம் பொருளை நினைந்து எங்களை உண்மையில் வளர்ப்பது, உயர்த்துவது சமயம். சட்டக் கல்லூரி இந்து மகாசபை போன்ற சமய நிறுவனங்கள் இளம் சமுதாயத்தினரிடையே சைவ சித்தாந்த அறிவை வளர்க்கவேண்டும். திரு. நமசிவாயம் ஐயா அவர்களின் வழியில் சைவ சித்தாந்தத்தை அறிந்து தெளிந்தவர்கள் சைவசித்தாந்தத்தின் அடிப்படைத்தத்துவங்களை இளைஞர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இது காலத்தின் தேவை. சைவசித்தாந்தத்தின் பெருமையை இளம் சமுதாயம் அறிந்து தெரிந்து பயன்பெறவேண்டும். திருமூலர் சொல்லி வைத்தாரே. உங்கள் இளைஞர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.:-

*சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை*
*அவனொடு ஒப்பார் இங்கு யாரும் இல்லை*
*புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்*
*தவளச் சடைமுடித்தாமரையானே*
*-திருமூலர்-*

(பேராசிரியரின் அறிவுக்கடலிலிருந்து இன்னும் பல முத்துக்கள் குவிந்தன. இடம் போதாமை காரணமாக இச் செவ்வியை சுருக்கித் தந்திருக்கிறோம் - ஆசிரியர்)

# SWAMI VIVEKANANDA'S ADDRESS IN THE WORLD'S PARLIAMENT OF RELIGIONS ON 11 SEPTEMBER 1893 AT CHICAGO ANDCOMMENTS THAT APPEARED IN THE AMERICAN PRESS

***A.R. Surendran LL.M***
***Attorney - at - Law***

The year 2002 marks the centenary of Swami Vivekananda's "Maha sama dhi". In this sketch it is proposed to reproduce the views expressed by leading American newspapers regarding Swami Vivekananda and his addresses in the United States.

When Swami Vivekananda addressed the gathering of the World's Parliament of Religions on 11 September 1893 as "Sisters and Brothers of America" the entire audience broke into prolonged applause and greeted him with unprecedented enthusiasm – not merely because he addressed them as "Sisters and Brothers", for they had already heard many speak on the themes of Universal Brotherhood, but because his words, completely free from platitudes, reflected spontaneous realisation of the spiritual oneness of mankind.

In the words of ***Chicago Inter Ocean***, Swamiji "with an eloquence and power not only won admiration for himself but consideration of his own teachings."

On 19 September 1893, Swami Vivekananda read his celebrated paper on Hinduism at the world's Parliament of Religions at Chicago. ***Chicago Inter Ocean*** depicted a picture of the tremendous excitement that prevailed that day and reported:

> "great Crowds of people, most of whom were woman pressed around the doors leading to the Hall of Columbus, an hour before the time stated for opening the afternoon session, for it had been announced that Swami Vivekananda, the popular Hindu monk who looks so much like Macullough's Othello, was to speak."

As reported by the ***Chicago Daily Tribune***:

> "Dr. Noble presided at the afternoon session of the parliament of Religions in Chicago. The Hall of Colombus was badly crowded. Dr. Noble then presented Swami Vivekananda, the Hindu monk, who was applauded loudly as he stepped forward to the centre of the platform. He wore an orange robe bound with a scarlet sash, and a pale yellow turban. The customary smile was on his handsome face and his eyes shone with animation. When the ap-

plause has ceased, Swami Vivekana nda, went to read his paper on 'Hinduism'".

Dr.R.C.Majumdar quotes the ***Chicago Daily Tribune of 20 September 1893*** in his work 'Bharatiya Vidya Bhavan's History And Culture of Indian People' as saying:

"It was a fairly long document, bring a masterly summary of the philosophy, psychology, and general ideas and statements on Hinduism, in its-all-inclusive aspects. On this day the Hall was crowded to its fullest capacity, woman vastly outnumbering the men, and many had to turn away. In the morning sessions, the Christian delegates, alarmed at the hearing that the oriental religions were receiving in every meeting made a concerted attack on Hinduism. Swami Vivekananda made a telling reply, just before he reads his paper on Hinduism in the afternoon session. His basic idea was that religion had nothing to do with the material prosperity of Western nations like England, which was brought about by the use of brute force. Said he on this occasion, "We, who have come from East, have sat here on the platform day after day and have been told in a patronizing way that we ought to accept Christianity because Christian nations are the most prosperous. We look about us and we see England, the most prosperous Christian nation in the world, with her food on the neck of 250,000,000 Asiatics. We look back into history and see that the prosperity of Christian Europe began with Spain. Span's prosperity began with the invasion of Mexico, Christianity wins its prosperity by cutting the throats of its fellowman. At such a price the Hindu will not have prosperity. I have sat here and heard the height of intolerance. I have heard the creeds of Moslems applauded, when the Muslims word is carrying destruction into India. Blood and sword are not for the Hindu, whose religion is based on the laws of love" (Reported in the ***Chicago Daily Tribune of 20 September 1893***, and quoted by Dr.R.C.Majumdar in Bharatiya Vidya Bhavan's History And Culture of Indian People, Vol. X, Part II, p 127).

In an article entitled *The Parliament of Religions*, which appeared in the ***Daily Chronicle***, H.R.Haweis, gives a better account of what Swamiji said on this day (***19 September 1893***):

"Vivekananda, the popular Hindu monk, whose physiognomy bore the most striking re-

semblance to the classic figure of the Buddha, denounced our commercial prosperity, Our bloody wars, and our religious intolerance, declaring that at such a price "the mild Hindu" would have none of our vaunted civilization. The recurrent and rhetorical use of the phrase, 'mild Hindu' produced a funny impression upon the audience, as the furious monk waved his arms and almost foamed at the mouth, 'You come', he cried, 'with the bible in one hand and the conqueror's sword in the other- you, with your religion of yesterday, to us, who were taught thousands of years ago by our Rishis precepts as noble and lives as holy as your Christ's. You trample on us and treat us like the dust beneath your feet. You destroy precious life in animals. You are carnivorous. You degraded our people with drink. You insult our woman. You scorn our religion - in many points like yours, only better, because more humane. And then you wonder why Christianity makes such slow progress in India. I tell you it is because you are not like your Christ whom we could honour and reverence. Do you think, if you came to our doors like him, meek and lowly, with a message of love, living and working and suffering for others, as he did, we should turn a deaf ear? Oh! No. We should receive him and listen to him, as we have done to our own inspired Rishis" (A comprehensive Biography of Swami Vivekananda, Part 1. P. 485; also p.464 and 465.) (See 1893 September 29)

On ***27 September 1893***, ***The New York Herald***, one of the most popular and widely circulated newspapers, editorially remarked:

> "He is undoubtedly the greatest in the Parliament of Religions. After hearing him we feel how foolish it is to send missionaries to his learned nation."

The ***Chicago Advocate*** on its issue of ***1893 September 28*** gave a picture of ***Swami Vivekananda*** on the opening day at the World's Parliament of Religions. It went on to say:

> "In certain respects, the most fascinating personality was the Brahmin monk Swami Vivekan anda with his flowing orange robe, saffron turban, smooth shaven, shapely, handsome face, large dark, subtle, penetrating eyes, and with the air of one being only pleased, with the consciousness of being easily the master of his situation. His Knowledge

of English is as though it were his mother tongue...."

On ***1893 September 29*** referring to many Christian delegates' open attack on Hinduism, on the very day that Swami Vivekananda was scheduled to read his famous paper on 'Hinduism', the ***Iowa Times*** said:

> "The Parliament of Religions reached a point where sharp acerbities develop. The thin veil of courtesy maintained of course, but behind it was ill felling. Rev. Joseph Cook criticised the Hindus sharply and was more sharply criticized in turn."

Of Swamiji's address the paper reported:

> "He was out of humour, or soon became so, apparently. He wore an orange robe and a pale yellow turban and dashed at once into a savage attack on Christian nations." [See 1893 Sept. 19]

The Catholics received Swamiji's criticism with hearty enthusiasm. In Barrow's History, ***Introduction to Parliament Papers***, it is reported that:

> "On the eleventh day Bishop Keane said, ' I endorse the denunciation that was hurled forth last night against the system of pretend charity that offered food to the hungry Hindus at the cost of their conscience and faith. It is a shame and a disgrace to those who call themselves Christians..."

On ***30 September 1893*** the ***Boston Evening Transcript*** reported:

> "The most striking figure one meets in this afternoon is Swami Vivekananda, the Brahmin monk. He is a large, well built man, with the superb carriage of the Hindustanis, his face clean shaven, squarely moulded, regular features, white teeth and well-chiselled lips that are usually parted in a benevolent smile while he is conversing. His finely poised head is crowned with either a lemon coloured or a red turban, and his hassock (not the technical name for his garment), belted in at the waist and falling below the knees, alternates in a bright orange and rich crimson .He speaks excellent English and replied readily to any questions asked in sincerity.
>
> "Vivekananda's address before the parliament was broad as the heavens above us, embracing the best in all religions, as the ultimate universal religion- charity to all mankind, good works for the love of

God, not for fear of punishment or hope of reward. He is a great favourite at the parliament, from the grandeur of his sentiments and his appearance as well. If he merely crosses the platform he is applauded and this marked approval of thousands he accepts in a child like spirit of gratification, without a trace of conceit."

To a request of the ***New York World,*** on ***1 October 1893***, for "a sentiment of expression regarding the significance of the great meeting (Parliament of Religions) from each representative", ***Swami Vivekananda*** replied with two quotations, one from Gita and the other from Vyasa.

"I am He that is in every religion- like the thread that passes through a string of pearls."

"Holy, perfect and pure men are seen in all creeds; therefore they all lead to the same birth-for how can nectar be the outcome of poison?"

On ***7 October 1893*** the ***New York Critic*** reported:

"The most impressive figure of the Parliament was the Hindoo monk, Swami Vivekananda. No one expressed so well the spirit of Parliament, its limitations and its finest influence, as did the Hindoo monk. He is an orator by divine right and his strong, intelligent face in its picturesque setting of yellow and orange, was hardly less interesting than his earnest words and the rich, rhythmical utterance he gave them.....

"Perhaps the most tangible result of the congress was the feeling it aroused in regard to foreign missions. The impertinence of sending half-educated theological students to instruct the wise and erudite Orientals was never brought home to an English speaking audience more forcibly. It is only in the spirit of tolerance and sympathy that we are at liberty to touch their faith, and the exhorters who possess these qualities are rare...

"....It was an outgrowth of the Parliament of Religions, which opened our eyes to the fact that the philosophy of the ancient creeds contains much beauty for the moderns. When we had once clearly perceived this, our interest in their exponents quickened and with characteristic eagerness we set out in pursuit of knowledge. The most available means of obtaining it, after the close of the Parliament, was through the address and lectures of Swami Vivekananda, who is still in the city (Chicago).....

".....His culture, his eloquence, and his fascinating personality has given us a new idea of Hindu Civilization; he is an interesting figure, his fine, intelligent mobile face in its setting of yellow, and deep musical voice prepossessing one at once in his favour. So it is not strange that he has churches, until the life of Buddha and the doctrines of his faith have grown familiar to us. He speaks without notes, presenting his facts and his conclusions with the greatest art and the most convincing sincerity; and rising at times to a rich, inspiring eloquence.... At present he contents himself with enlightening us in regard to his religion and the words of its philosophers."

***Evanston Index*** reported on ***7 October 1893***that:

"Swami Vivekananda is a representative from India to the Parliament of Religions. He has attracted a great deal of attention on account of his unique attire in Mandarin colours, by his magnetic presence and by his brilliant oratory and wonderful exposition of Hindu philosophy. His stay in Chicago has been a continual ovation."

The ***Christian Herald*** of ***11 October 1893*** stated:

"(Christian missionaries) come to offer life but only on condition that the Hindus become Christians, abandoning the faith of their fathers and forefathers. Is it right? ..... If you wish to illustrate the meaning of 'brotherhood', treat Hindus more kindly, even though he be a Hindu and is faithful to his religion. Send missionaries to teach them how better to earn a piece of bread, and not to teach them metaphysical nonsense."

***Wisconsin State Journal*** reported on ***21 November 1893*** as follows:

"The lecture at Congregational Church (Madison) last night by the celebrated Hindoo monk, Vivekananda was an extremely interesting one, and contained much of sound philosophy and good religion. Pagan though he be, Christianity may well follow many of his teachings. His creed is as wide as the Universe, taking in all religions, and accepting truth wherever it may be found. Bigotry and superstition and idle ceremony, he declared, have no place in 'the religions of India'"

The Indian Mirror quoted the ***Chi-***

***cago Tribune*** in one of its issues in ***December 1893*** as follows:

"Swami Vivekananda was the last speaker of the evening. He says Missionaries go hungry. He spoke extemporaneously, and said in part- 'Christians must always be ready for good criticism, and I hardly think that you will care if I make a little criticism. You, Christians, who are so fond of sending out missionaries to save the souls of the heathen, why do you not try to save their bodies from starvation? In India during the terrible famines thousands died from hunger, yet you, Christians, did nothing. You erect churches all through India, but the crying evil in the East is not religion – they have religion enough – but is bread that these suffering millions of burning India cry out for with parched throats. They ask for bread, but we give them stones. It is an insult to a starving people to offer them religion; it is an insult to a starving man to teach him metaphysics. In India a priest that preached for money would lose caste, and be spat upon by the people. I came here to seek aid for my impoverished people, and I fully realised how difficult it was to get help for heathens from Christians in a Christian land."

On ***16 January 1894*** the ***Appeal ·valanche***, reported that:

"Swami Vivekananda, the Hindu monk, who is to lecture at the auditorium (Memphis) tonight, is one of the most eloquent men who has ever appeared on the religious or lecture platform in this country. His Matchless oratory, deep penetration into things occult, his cleverness in debate, and great earnestness captured the closest attention of the world's thinking men at the world's Fair Parliament of Religions, and the admiration of thousands of people who have since heard him during his lecture tour through many of the States of the Union.

"In conversation he is a most pleasant gentleman; his choice of words are the gems of the English Language and his general bearing ranks him with the most cultured people of western etiquette and custom. As a companion he is a most charming man, and as a conversationalist he is, perhaps not surpassed in the drawing rooms of any city in the western world. He speaks English not only distinctly, but fluently, and his ideas, as new as sparkling, drop from his tongue in a perfectly bewildering over-

flow of ornamental language."'

"' His wonderful first address before the members of the world's fair Parliament stamped him at once as a leader in that great body of religious thinkers. During the session he was frequency heard in defence of his religion, and some of the most beautiful and philosophical gems that grace the English Language rolled from his lips there in picturing the higher duties that man owed to man and his creator. He is an artist in thought, an idealist in belief and a dramatist on the platform."'

"'Yesterday afternoon he lectured before a large and fashionable audience composed of the members of the nineteenth Century Club, in the rooms of the club, in the Randolph Building. Tonight he will be heard at the Auditorium on 'Hindoosim'"'

***Memphis Commercial*** reported on ***17 January 1894*** that:

"'An audience of fair proportions gathered last night at the auditorium to greet the celebrated Hindu monk, Swami Vivekana nda, in his lecture on Hinduism"'

"'The eminent oriental was received with liberal applause and heard with attentive interest through out. He is a man of fine physical presence, with regular bronze features and form of fine proportions. He wore a robe of pink silk, fastened at the waist with a black trouser and about his head was gracefully draped a turban of yellow Indian silk. His delivery is very good, his use of English being perfect as regards choice of words and correctness of grammar and construction... Attentive listeners, how ever, probably lost few words and their attention was well rewarded by an address full of original thought information and broad wisdom. The address might fitly be called a plea for universal tolerance, illustrated by remarks concerning the religion of India. This sprit, he contented, the spirit of tolerance and love, is the central inspiration of all religions which are worthy and this, he thinks, is the end to be secured by any form of faith."

"'His entire lecture cannot be sketched here; but it was a masterly appeal for brotherly love, and an eloquent defence of a beautiful faith"'

[ COURTESY : VIVEKANANDA – HIS GOSPEL OF MAN-MAKING; COMPILED AND EDITED BY SWAMI JYOTIRMAYANANDA ]

# சட்டமும் சமயமும்

-மட்டுவில் ஆ. நடராசா

தனது குடும்ப உறுப்பினரோடு மாத்திர மன்றி, சமூகத்தோடுஞ் சேர்ந்து வாழவேண் டிய காரணத்தால் மனிதன் ஏதாவதொரு ஒழுக்க நெறியைப் பேண வேண்டியவ னாவான். அவ்வொழுக்க நெறி அவனது சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட போது அது சட்டமென அழைக்கப்பட்டிருக்கலாம். இவ்வாறு பல்வேறு இனக்குழுக்களாலும் வெவ்வேறு சட்டங்கள் தோற்றறுவிக்கப் பட்டன. இதற்கு உதாரணமாகத் தேச வழமைச்சட்டம், இஸ்லாமியரது திருமணச் சட்டம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். அன்னியர் எம்மை ஆண்டபோது றோமன் டச் சட்டம் இந்நாட்டில் அறிமுகப் படுத்தப்பட்டது. இப்பொழுது இலங்கைப் பாராளுமன்றம் சட்டமாக்கும் அதிகாரத் தைப் பெற்றிருக்கிறது. இவற்றால் வெவ் வேறு சமூகங்களும் அமைப்புகளும் எமது நாட்டுச் சட்டத்துறைக்குப் பங்களிப்புச் செய்திருக்கின்றன. இந்த வகையில், சமயம் - சிறப்பாகச் சைவ சமயம் - இந்நாட்டுச் சட்டவாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்திருக் கின்றதா; சமயத்துக்கும் சட்டத்துக்குமுள்ள தொடர்பு எத்தகைய தென்பதைப் பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

எமது சமுதாயத்தில் நடைபெறும் திரு மணச் சடங்குகளும் மரணச் சடங்குகளும் சட்டத்தினால் அங்கீகரிக்கப்படுகின்றன. சமயாசாரப்படி திருமணம் நடைபெற்ற தென்பது நிரூபிக்கப்படும்போது, அது சட்டவலுவுள்ளதாகக் கருதப்படுகின்றது. காலஞ் சென்ற தந்தையின் சொத்தைப் பிள்ளைகள் ஒன்று சேர்ந்து அறுதியாக விற்று உறுதியெழுதிக் கொடுப்பதற்கு, அவரின் மரணச் சான்றிதழை உறுதியோடி ணைக்க வேண்டுமெனச் சட்டம் வலியு றுத்தவில்லை.

சில மதத்தவர்கள், இப்படித்தான் வாழ வேண்டும். இவ்வாறாக ஆட்சி நடத்த வேண்டுமென மதத்தலைவர்கள் கூறிய தைச் சட்டமாக ஏற்றுக்கொள்ள வேண்டு மெனக் கருதுகிறார்கள். ஆபுகானிஸ்தானில் தலிபான் இயக்கம் இஸ்லாமிய சட்டப்படி ஆட்சி நடத்த முனைந்ததை இதற்குதாரண மாகக் குறிப்பிடலாம். சில இஸ்லாமிய நாடுகளிற் குற்றமிழைப்பவர்களுக்கு இஸ் லாமிய சட்டப்படி தண்டனை வழங்கும் வழக்கம் இப்போதும் நடைமுறையில் இருக்கிறது.

சில நாடுகளில் மதகுருமாரே ஆட்சி நடத்துகின்றார்கள். வேறு சில நாடுகளில் மதகுருமார் ஆட்சி புரிவோரை ஆட்டிப்ப டைக்கிறார்கள்.

மணச் சடங்கும் மரணச் சடங்கும் பலர் சாட்சியாகப் பலர் முன்னிலையில் நடை பெறுவதால், அந்நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன வென்பது உறுதிப்படுத்தப்படுகின்றதே தவிர, சமயாசாரப்படி நடந்தமையால் அந்நி கழ்வுகள் சட்டபூர்வமானவையெனச் சைவ சமயங்கூறவில்லை.

சூரிய சந்திரரும் அக்கினியும் விசுவ ரூபியாகிய சிவபெருமானது மூன்று கண்க ளாகவும் விளங்குகின்றன. திருமணச் சடங்கின்போது, திருமணம் நடந்த தென்

பதற்குச் சிவனே சாட்சியாவர் என்பதைப் பிரகடனப்படுத்த விரும்பும் சமயகுரு, அக் கினி சாட்சியாக, சூரிய சந்திரர் சாட்சியாக மணமகளைத் தான் ஏற்றுக் கொண்டதாக மணமகனைக் கொண்டு பிரகடனஞ் செய் விக்கின்றார்.

குற்றவியற் சட்டங்களும் சைவ சமயம் வலியுறுத்தும் ஒழுக்க நெறிகளும் சமூகத் தில் ஒழுங்கையுங் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்துவதற்குதவுகின்றன.

சமூக நலச் சட்டங்கள், சொத்துடைமை, குடியுரிமை முதலிய பல்வேறு உட் பிரிவுக ளைக் கொண்டிருக்கின்ற போதிலும் சமயம் இவற்றைப் பற்றி எதுவுமே கூறவில்லை.

உயிர் எடுக்கும் உடம்பும் அதனால் நுகரப்படும் பொருள்களும் நுகர்வினால் உண்டாகும் இன்பமும் இந்த உலகமும் நிலைபேறற்றவை. துன்பந் தருவதாகிய பிறவிப் பிணியிலிருந்து விடுபட்டு, நிலை பேறுடைய வீட்டை அடைவதன் மூலமே பேரின்பத்தை அனுபவிக்கலாம்.

நிலைபெறுதலில்லாத உலகப் பொருள் களை நிலையானவையெனக் கருதும் மயக்க உணர்வினால், அப்பொருள்கள் மீது வைக்கும் பற்றுக் காரணமாகத் துன்பந் தரும் பிறப் பிறப்புகள் உண்டாகின்றன. அதனால் நிலையில்லாத பொருட் பற்றை விட்டு, மெய்ப் பொருளாகிய சிவபெருமான் மீது பற்றுடையராதல் வேண்டுமென்று கூறு கின்றது சைவசமயம்.

<u>'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும் மருளானாம் மாணாப் பிறப்பு"</u> <u>என்றும்</u>

*"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று நிலையாமை காணப் படும்"*

என்றுங் கூறுகின்றார் வள்ளுவர். பொ ருட்பற்றை விடவேண்டுமென்னுங் கார ணத்தாற் போலும் சைவ சமயத்தில் சொத்து டைமை பற்றி எதுவுமே கூறப்படவில்லை.

குற்றவியற் சட்டம் அதற்கு விரோதமாக நடப்போரைத் தண்டிக்க வழிசெய்கின்றதே தவிர அதற்கமைவாக நடப்போருக்கு எந்த நன்மையும் செய்வதில்லை. இச்சட்டங்கள் அரசர்களால், சர்வாதிகாரிகளால், சமுதாயத் தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் ஆக்கப்படுகின்றன. காலத்துக்குக் காலம் அச்சட்டங்களுக்குத் திருத்தங்கள் கொண்டு வரப்படுவதுண்டு. இவ்வாறு திருத்தங்கள் கொண்டு வரப்படுவதே அச்சட்டங்கள் குறைபாடுடையன என்பதற்குச் சான்றாகும்.

வடமொழியில் எழுந்த ஸ்மிருதிகள் வருணாச்சிரம தருமம் பற்றிக்கூறுகின்றன. மனுஸ்மிருதி அல்லது மனு தரும சாத்திரம் மன்னர்கள் எப்படி நாட்டை ஆளவேண்டு மென்று கூறுகின்றது.

அரச வீதியில் தன்னிச்சையாக ஓடிச் சென்ற பசுக்கன்று அரசகுமாரன் சென்ற தேர்ச்சில்லின்கீழ் நுழைந்து நசிந்து இறக் கின்றது. இந்நிகழ்ச்சியைத் தாய்ப்பசு முறை யிடக் கேட்டறிந்த மனுநீதி கண்ட சோழன் தன் மகன் மீது தேரைச் செலுத்தி அவனைக் கொன்று நீதி செய்தானென்று கூறுகின்றது திருத்தொண்டர் புராணம். மனுஸ்மிருதிக் கமைவாக நீதி வழங்கிய காரணத்தால் அம்மன்னன் மனு நீதி கண்ட சோழனென்று போற்றப்படுகின்றான்.

கள்வனல்லாத கோவலனைக் கள்வ னெனக் கருதி, அவனைக் கொலைசெய் வித்த பாண்டிய மன்னன், தன் கணவன் கோவலன் கள்வனல்லன் என்பதைக் கண்ணகி நிரூபித்துக் காட்டியவுடன் உயிர் துறக்கிறான். அவனது செயலை, 'வல்வி னை வளைத்த கோலை மன்னவன் செல்லு யிர் நீத்துச் செங்கோலாக்கியது' என்று கூறிப் போற்றிப் புகழ்கின்றது சிலப்பதிகாரம். நீதி

மான்கள் கூட விதி வசத்தால் நீதி தவறுகின்றார்கள் என்பதற்கு இஃதோர் உதாரணம்.

இவ்வாறான தருமத்தின் அடிப்படையில் ஆக்கப்பட்ட சட்டங்களுக்கமைவாகச் செங்கோல் மன்னர்களால் வழங்கப்படுந் தீர்ப்புகளே தவறாக அமையுமானால், தண்டிக்க வேண்டுமென்பதற்காகவே ஆக்கப்பட்ட சட்டங்களுக்கமைவாக, சித்திரவதை செய்து பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களையும் சோடிக்கப்பட்ட சாட்சியங்களையுஞ் சான்றாகக் கொண்டு, சட்டத் தரணிகள் செய்யுங் குறுக்கு விசாரணைகளையும் அவற்றுக்களிக்கப்படும் பதில்களையும் வாதப் பிரதி வாதங்களையும் அவதானித்தபின் வழங்கப்படுந் தீர்ப்புகளெல்லாம் - அத்தீர்ப்புகளை வழங்கும் நீதிபதிகள் உண்மையாகவே நீதிமான்களாக இருந்தாலுங்கூட - எவ்வாறமையும்?

சைவசமயங் கூறும் விதிமுறைகளின்படியொழுகாது தவறிழைப்போருக்குத் தண்டனை வழங்குவதோடமையாது, அவ்விதி முறைகளுக்கமைவாக நடப்போருக்குச் சிவன் சிறப்புஞ் செய்கின்றான். சைவ சமய விதிமுறைகள் குறைவுடைய மனிதர்களால் ஆக்கப்பட்டவைகளல்ல; நிறைவுடைய இறைவனால் ஆக்கப்பட்டவை. இவ்விதிகளுக்குக் காலத்துக்குக் காலம் திருத்தங்கள் கொண்டுவரப்படுவதில்லை.

சிவபெருமானால் அருளப்பட்ட வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்டவை புண்ணியங்கள், விலக்கப்பட்டவை பாவங்கள். பிற உயிர்களுக்கு இதஞ்செய்தல் புண்ணியம்; அகிதஞ் செய்தல் பாவம். பிற உயிர்களுக்கு இன்பமுந் துன்பமும் மனம் வாக்குக் காயங்களாற் செய்யப்படுமென்று சைவ சமயங் கூறுகின்றது. பிறருக்குத் துன்பஞ் செய்ய நினைப்பதும் பாவம்.

கடவுளை வணங்குதல், தந்தை தாய் உபாத்தியாயர் முதலிய குரவர்களை மதித்து அவர்களைப் பேணுதல், உயிர்களுக்கிரங்குதல், உண்மை பேசுதல், செய்நன்றி மறவாமை முதலியன புண்ணியச் செயல்கள்.

கொலை, களவு, கள்ளுண்ணல், மாமிசம் புசித்தல், சூதாடுதல். பொய் மொழிதல், விபச்சாரம் செய்தல் முதலியன பாவங்கள்.

ஒவ்வோர் உயிருக்கும் அவ்வுயிர் செய்த நல்வினை தீவினைகளுக் கீடான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கின்றான் இறைவன். எங்கும் நிறைந்த எல்லாம் வல்லவரான எல்லாவற்றையும் அறியும் இறைவனுக்கு இவ்வாறு செய்தல் கூடும். இறைவன் வேதாகமங்களில் விதிக்கப்பட்டபடி ஒழுகாதவர்களை நரகமென்னும் சிறைகளில் அடைத்து வைக்கின்றான். வேதாகமங்களில் விதிக்கப்பட்டபடி ஒழுகுவோரை உம்பர் உலகங்களில் வைத்து அவர்களுக்குச் சுகபோகங்களைக் கொடுக்கின்றான்.

*"மறைகளீசன்சொல் அச்சொல் வழிவரா*
*உயிரை வைக்கும்*
*சிறைகள் மாநிரயம் இட்டபணி செய்*
*வோர் செல்வத்தோடும்*
*உறையும்மா பதிகள் உம்ப ருலகங்கள்*
*யோனிக் கெல்லாம்*
*இறைவனாணையினால் இன்பத் துன்*
*பங்கள் இயைவதாகும்"* என்று கூறுகின்
*றது சிவஞான சித்தியார்.*

இறைவன், விதிவழி ஒழுகுவோருக்கு அனுக்கிரகஞ் செய்வது மாத்திரமல்ல, விதிவழி ஒழுகாதோருக்கு நிக்கிரகஞ் செய்வதும் அவ்வுயிர்கள் மீது கொண்ட கருணை காரணமாகவே யாகும். பெற்றோர் தம் சொல் வழி நடக்காத பிள்ளைகளை அடித்து உறுக்கித் தண்டிப்பது அவர்களை நல்வழியிற் செலுத்துவதற்கேயாகும். அது போலவே இறைவனும் விதிப்படி ஒழுகாத உயிர்களுக்குத் துன்பத்தைக் கொடுப்பது அவற்றைத்

திருத்தி நன்னெறியிற் செலுத்துவதற்கே யாகும்.

ஓருயிர் தான் செய்த தவறுக்குரிய தண்ட னையை அனுபவித்ததன் பின் அக்குற்றத்தி னின்றும் விடுபடுகின்றது.

*"நிக்கிர கங்கள் தானும் நேசத்தால் ஈசன்*
*செய்வ (து)*
*அக்கிர மத்தால் குற்றம் அடித்துத்தீர்த்*
*தச்சம் பண்ணி*
*இக்கிரமத்தி னாலே ஈண்டறம் இயற்றி*
*டென்பன்*
*எக்கிரமத்தி னாலும் இறைசெயல் அருளே*
*யென்றும்" என்று கூறுகின்றார்*
*அருணந்தி சிவாச்சாரியார்.*

குற்றவியற் சட்டப்படி சிறைத்தண்ட னை அனுபவித்தவன் அரச சேவையிற் சேர்வதற்கும் பாராளுமன்றத் தேர்தலிற் போட்டியிடுவதற்கும் தடைவிதிக்கிறது சட்டம். அச்சம் பண்ணி அடித்து குற்றம் தீர்த்து அறம் இயற்றி டென்பன் இறைவன். அரசினால் விதிக்கப்படும் சில தண்ட னைகள் தவறு செய்தவனைத் திருத்து வதற்காக வன்றி சமூகத்தை அச்சுறுத்தித் திருத்துவதற்காகவே வழங்கப்படுகின்றன. குற்றமிழைத்தவனுக்கு மரண தண்டனை விதிப்பது இந்தவகையைச் சேர்ந்தது. இத்தகைய தண்டனைகள் சைவ நீதிக்கு ஏற்புடையனவல்ல. இது போலவே பாவஞ் செய்த உயிர்களை இறைவன் மீளா நரகத் தில் வைப்பனென்று சில சமயங்கள் கூறுவ தையுஞ் சைவம் ஒப்புக் கொள்ளவில்லை. எல்லா உயிர்களுக்கும் பேரின்பப் பெரு வாழ்வைக் கொடுக்கவேண்டுமென்பதே சிவபெருமானின் திருவுள்ளக் கருத்தென்று கூறுகின்றது சைவம்.

சிவபெருமான் வேதாகமங்களை அருளிச் செய்தது போலவே பிற மதங்களை ஆக்கி யோரும் தத்தம் சமய நூல்களை ஆக்கியிருக் கிறார்கள். எந்த மதத் தலைவரும் தம்மதத் தவர் தமது சமய விதிமுறைகளுக்குக் கட் டுப்பட்டொழுக வேண்டுமென்று எதிர்பார்க் கின்றார். தன்னை ஒரு மதத்தவரென்று கூறிக்கொண்டு, அம்மதக் கோட்பாட்டுக்கு முரணாக நடப்பவர் நயவஞ்சகர்.

வஞ்ச மனமுடையவர்களது படிற்றொ ழுக்கத்தையும் சைவசமயம் வெறுக்கிறது. சில நாடுகளில் அரசமைப்பின் மூலம் சில மதங்கள் அரசாங்க மதங்களாக்கப்பட்டி ருக்கின்றன. சில நாடுகள் மதச் சார்பின்மை என்னும் போர்வைக்குள் மறைந்து நின்று மதச் சார்புடன் செயற்படுகின்றன. இவ்வா றான அரசமைப்புச் சட்டங்களையுஞ் செயற் பாடுகளையும் சைவசமயம் வெறுக்கின்றது.

நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தத்தம் சமய நெறிக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவ்வாறு நடக்காதவர்களைத் தண்டித்து அவர்களை அவரவர் சமய நெறி யில் நிறுத்த வேண்டியது அரசின் கடமை. அரசு இக்கடமையைச் செய்யத்தவறினால், மறுமையிற் சிவன் தான் சொன்ன ஆகம நூல் விதிகளுக்கமைவாக, தத்தம் சமய நெறியில் நில்லாதவர்களுக்குத் தண்டனை வழங்குவா னென்பது சைவ நூற்கொள்கை.

*"தத்தஞ் சமயத் தகுதி நில்லாதாரை*
*அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி*
*எத்தண் டமுஞ்செயும் அம்மையில்*
*இம்மைக்கே*
*மெய்த் தண்டஞ் செய்வதவ் வேந்தன்*
*கடனே" என்கின்றது திருமந்திரம்.*

இவ்வாறாகச் சட்டத்துக்கும் சைவ சமயத் துக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டு நோக்குவோர் சட்டத்திலும் பார்க்கச் சைவநீதி மேலானதென்பதை ஒப்புக்கொள்வர். ஒரு சமூகம் சைவ நீதி யைக் கடைப்பிடித்தொழுகுமேயானால், அச்சமூகத்துக்கென ஆக்கப்பட்ட சாதாரண சட்டங்கள் செயலற்றுப்போகும்.

# உன்னை நீயே....!

சட்டத்தரணி க. பிரபாகரன்

*பத்தி நெறியில் பலமாய் உறைவார்*
*அத்தி முகனின் அடியைப் பணிவார்*
*முத்தி பெறுவார் முதன்மை உறுவார்*
*சித்தி அடைவார் திடமே! திடமே;*

-விநாயகர் அனுபூதி-
கவிகுஞ்சபாவலன்

ஆம்! பக்தி நெறி, இறைவனை ஒரு மனிதன் அடைவதற்கான மகத்தான மார்க்கங்களில் ஒன்று ஆகும். இந்து மதம் இறைவன் மீது பக்திப் பெருவெள்ளத்தினைப் பாய்ச்சிய நாயன்மார்களை, ஆழ்வார்களை, அடியார்களை, பெரியார்களை, அவர்கள் வழங்கிச் சென்ற மாபெரும் பொக்கிசங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தோனறிய காலம் அறியப்படாத வேதங்கள், உபநிடதங்கள், சித்தாந்தங்கள், தேவாரப் பதிகங்கள் எனப் பல்வேறு தரத்திலும் உள்ள வேறுபட்ட நிலைத்தரத்திலுள்ள இந்துக்கட்கு வழிகாட்டும் பொக்கிசங்கள் நம்மிடம் உண்டு. எல்லாமே பக்தி மார்க்கத்தினைப் பற்றியும் அதன் வழியில் செல்வதன் அவசியத்தினை செப்பி நிற்கின்றன. உடலுணர்ச்சி மிகுந்த சாதாரணமான மனிதர்கள் தம்மைப் போலவே தம் தலைவனை சகுண வழிபாட்டில் கண்டு பணிந்து இறை நெறி நிற்க இந்தபக்திமார்க்கம் மிக அற்புதமான வழிகாட்டுதல்களைக் காட்டி நிற்கின்றது. இந்த பக்தி மூலம் ஒரு மனிதன் தனது மனத்தினைப் பக்குவப்படுத்திக் கொள்கிறான். இதன் மூலம் மனத்தினை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரவும், இந்தப்பிறப்பின் நோக்கம் அடையப்படவும் முடிகிறது.

இந்து மதத்தில் பக்தன் தனது இறை அன்பினை வெளிப்படுத்துகின்றமுறை பல்வேறு படித்தரங்களைக் கொண்டதாக இருக்கின்றது. இறைவனைப் பாடுதல் மூலம் ஒருசாரார் தமது பக்தியை வெளிப்படுத்துகின்றனர். மற்றொருவன் தமது உடலினை வருத்தியும், இன்னொருசாரார் தமது பொருள் செல்வத்தினைப் பயன்படுத்தியும் பக்தியை வெளிப்படுத்துகின்றனர். இவர்கள் எல்லோருடைய நோக்கமும், நம்பிக்கையும் ஒன்றே ஆகும். தம் வாழ்வில் அவர்கள் இறைவனை முதன்மைப்படுத்தி பணியாற்றுகின்றனர். அந்தளவில் நாம் மகிழ்கிறோம். ஆனால் இதில் எத்தனைபேர் தமது ஒவ்வொரு கணப்பொழுது வாழ்விலும் இறைவனை முதன்மைப்படுத்துகின்றனர்/ நின்னத்துக் கொண்டு வாழ்கிறோம். இறைவன் மீது பக்தி செலுத்துவது என்பது ஒன்றும் வெறும் பகுதிநேரத் தொழிலல்ல. இறைவன் மீது பக்தி என்பது ஒரு முழுநேர இறையுணர்வுடனான விழிப்புணர்ச்சி என்பதை நாம் மறக்கக்கூடாது. (Spiritual practice is not a part-time hobby, but a full-time awareness of truth.)

இறைவன் மீது பக்தியை வெளிப்படுத்த, இறைவனோடு இணைந்து நிற்க நம்முன்னோர் தந்து சென்றபாடல்கள் உருக்கமானவை. பக்திச் சுவை செறிந்தவை. அவை தத்துவக்குவியல்கள், ஞானச்சுரங்கங்கள். அவை புனிதத்துவம் மிகுந்தவை. அவற்றி

னைப் பாடுவது மனிதனை பக்குவப்படுத்தும். அதனால் தான் பொருள் புரிகிறதோ இல்லையோ பாடுங்கள், பாடிக் கொண்டே இருங்கள், ஒரு நாள் எல்லாம் புரியவரும் என நம் பெரும்ஞானிகள், மகான்கள் சொல்லிச் சென்றனர். பாடுவதன் மூலம் ஒருசாரார் பக்தி செலுத்த இன்னோர் சாராரோ தம்மை பல்வேறு வழிகளிலும் வதைத்து தம் பக்தியை செலுத்துகின்றனர். விரதம் இருத்தலில் தொடங்கும் இது உடலில் ஊசிகளைக் குத்தியும், காவடி ஆட்டம், தீமிதித்தல் போன்றவற்றின் மூலமும் இறை நாமதத்தில் தம்மை செலுத்தி தமது உடலில் உருவாகும் வேதனையை மறந்து அந்த நேரத்தில் இறைவனோடு இணைகின்றனர். இன்னோர் சாரார் தாம் ஈட்டிய பொருளை கொண்டு இறைவனை அலங்கரித்தும், கோவில் திருபணி செய்வித்தும், தானம், தர்மம், அன்ன தானம், பூசைகள் செய்வித்தும் வழிபடுகின்றனர்.

இன்றைய உலகில் இந்துக்களது இந்த வழிபாட்டு முறைமை பல சந்தர்ப்பங்களில் மிகவும் தவறான, மூடக்கொள்கையுடன் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை கண்கூடு. வேதனைக்குரியதும் கூட. நாம் நம் முன்னோர் தந்த வழிகளை அறியாமையால் (Ignorance) தவறாகப்பயன்படுத்த விழைந்ததன் மூலம் இந்து தர்மத்தில் இருந்து மிகவும் விலகிவந்துவிட்டோம். இன்றைய பக்தி வெறும் எதிர்பார்ப்புக்கள், ஆசைகள் அவற்றினை வெளிப்படுத்துவதற்கானதாக மாறிவிட்டது. இறைவனோடு பேரம் பேசுதல் மூலம் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள இந்து விழைகிறான். எல்லோருமே நான் இறைபக்தன் என்று முத்திரையும் குத்திக்கொள்கின்றோம். இப்பொழுது நம்மை நாமே திரும்பிப்பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. நாம் உண்மையான பக்தர்களா?

இறைவன் தனது பக்தர்கள் யார் என கூறி இருக்கிறார். பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா தனது பக்தனுக்கு இருக்க வேண்டிய முப்பத்து ஐந்து (35) குணங்களை பட்டியலிட்டுத்தந்திருக்கிறார். இந்தப் பண்புகள் நம்மிடத்தில் இருக்கிறதா என நாம் நம்மையே சோதித்துப்பார்ப்பதன் மூலம் கடவுளுக்கு உவந்தபக்தன் நாமா என முடிவு செய்யலாம்.

மனித சமுதாயம் வெளித்தோற்றத்தில் வேறுபாடுகளைக் கொண்டாலும் அதனிடம் உள்ள உள்ளுணர்வு ஏதோ ஒருவகையில் ஒன்றே. இந்த மனிதன் ஆசையின் வடிவத்தால் வேறுபடுகிறான். அவனது ஆசை எல்லாம் இன்பம் பெறவேண்டும் என்பதுதான். ஆனால் அதனை அறியாமையினால் (Ignorance) உலக இன்பம் என்று காண்கிறான். இந்தப் பொருள் உலகில் பொருளை அடைய போட்டி போடுகிறான். இதன் அடிப்படையில் சுழலும் போது மற்றவர்களை வேறாகக் காண்கிறான். மற்றவர்களை தனது போட்டியாளர்களாக, எதிரிகளாக, தனது வளர்ச்சிக்கான முட்டுக்கட்டை என தானே நினைத்து தனது உலகினை சுருக்கிக் கொள்கிறான். இதன் வெளிப்பாடுகளாக தன் மக்கள் மீது வெறுப்பு, பகை, கொடுங்கோன்மை நிலைபாடுகளை மேற்கொள்கின்றான். மமாகாரம்வளர்கிறது. எல்லாம் எனது, எனக்கே வேண்டும் என்று எல்லாவற்றுடனும் பந்தம் கொள்கிறான். அதுவே நான் என்ற அகங்காரத்தில் முடிகிறது. நான் சாதித்தேன், நான் வென்றேன், நான் தோற்றேன் என்ற அகங்கார உணர்வு தலையெடுத்தாடுகிறது. இவை ஒருபக்தனுக்குரிய இயல்புகளே அல்ல. பக்தன் இன்பம், துன்பம் என்பவற்றினை சமமாகக் காண்பான். அவன் பொறுமையே வடிவெ

டுத்தவன். இறைவனே அவனது சிந்தனை யாக இருப்பதால், இறைவனுக்காகவே வாழ்வதால், இறைவன் கொடுப்பதனை பிரசாதமாக கொண்டு அவன் எப்போதும் சந்தோசமாகவே வாழ்வான்.

இறைவனது பக்தன் தனது மனம், புத்தியை இறைவனுக்குச் சமர்ப்பித்து விட்டவனாக வாழ்வான். அவனது மனதில் இறை சிந்தனை குடி கொண்டிருக்கும். அத்தகையவன் தன்னடக்கத்துடன் தனது இறைபணியை, பூவுலகப்பணியை ஆற்றுவான். தனது பாதையில், பயணத்தில் ஒருபக்தனுக்கு எப்போதும் சந்தேகமே எழாது. திட நிச்சயந்துடன் தீர்க்கமான தனது பயணத்தினை மேற்கொள்ளுவான்.

ஒரு மனிதனுடைய உலகைப் பற்றிய பார்வை அவனது வாழ்வினை நிர்ணயிப்பதாக இருக்கிறது. உண்மையில் உலகத்தினை நோக்கிய பார்வை என்பது அவனது வாழ்வில் இடர்பாட்டினை விளைவிக்கும் ஒன்றாக இருக்கிறது. ஆனால் உண்மையான பக்தனுக்கு இது எதனையும் செய்து விடாது. அதேவேளை இவன் உலகுக்கும் இடர்கொடான், மனதினை இறைவனிடம் வைத்து விட்ட பிறகு மனதிலே எழக்கூடிய உணர்வு நிலை மாற்றங்கள் அங்கே எழ முடியாத நிலை உருவாகிறது. மனம் என்பது அற்புதமான கருவி அது ஒரு தடவையில் ஒன்றினையே செய்யக்கூடியது. இது நிரூபிக்கப்பட்ட உண்மை. இதே மனத்திலேதான் களிப்பு, கோபம், அச்சம், கலக்கம் எல்லாமே எழுகிறது. பக்தனது மனதில் இறைவன் குடியேறிய பிறகு அவனுக்கு வேறு எந்த சலனமும் எதனாலும் ஏற்பட வாய்பில்லாது போய்விடுகிறது.

கிருஷ்ண பரமாத்மா தனது பக்தன் தனது பக்தியில் எந்தக் கலப்பினையும் செய்ய மாட்டான் என்கிறார். அவன் இறைவனிடம் பேரம் பேசுவதில்லை.

அவனது பக்தி தூயது. அதுபோல அவனும் (மனம்) தூயவன் ஆகிறான். இத்தகையவன் திறமைவாய்ந்தவனாக இருப்பான். இவனது மனது வேறு உலகப் பொருளில் செல்லாது இறைவனுடன் இணைந்து நிற்பதனால், எப்பொழுதும் விழிப்புடன் இருப்பான். எனவே தன்னை நோக்கி வரும் எதனையும் தெளிவதுடன், தீர்க்கமாகவும் அணுகி விடையும் காண்கிறான். இவனது உடலும், புத்தியும், மனதும் இணைந்துவிடுவதே இதன் இரகசியம் ஆகும். இந்த நிலைப்பாடு வெறும் போலியன்றி மனத்தளவில் அவனுக்கு இது குறித்தோ, இந்த வாழ்வு முறை குறித்தோ துயர் ஏதும் இருப்பதில்லை. ஏனெனில் இறை பணி, இறை இட்ட உலகக் கர்மங்களை இறைவனுக்காகவே ஆற்றுவதனால் தனக்கு என்று எந்தக் கர்மமும் இல்லாததால் அங்கு ஏதும் முரண்பாட்டிற்கு இடமே இல்லை.

உண்மையான பக்தனாக இறைவன் காணவிரும்புவது அர்ச்சுனனை மட்டுமல்ல. இந்த உலகில் வாழும் அனைவரையும் தான். இறைவன் பகவத்கீதை மூலம் சொன்ன தத்துவப் பிழியல் நம் எல்லோருக்கும் பொருந்தும். மனிதகுலத்தில் இருமை நிலை எங்கும் இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் மறுபக்கம் உண்டு. மனிதனது புத்தியும் அத்தகைய வேறு பிரித்தறிவும் தன்மையது தான். இதுவேண்டும் என்று மனம் கேட்கும் போது வேண்டாம் என்று புத்தி தீர்மானிக்கும் நிலை உண்டு. அறிவுடைய மாந்தர் தம் புத்தி, காரணகாரிய விளைவுகளை மையமாகக் கொண்டு தனது அறிவுக்குட்பட்டு முடிவெடுக்கிறது. இதே புத்தியினையும் அடக்கி ஆளவேண்டிய தேவை உண்டு. இறைவன் தனது கீதையில் காணும் பக்தன் இருமை நிலைக்கு அப்பாற்

பட்டவன் என்பதனை பல இயல்புகளூடாக பகவான் காட்டுகிறார். இத்தகைய உயர் நிலை ஒரு பக்தனுக்கு அவசியம் என்பதில் சந்தேகமில்லை. அத்தகைய நிலைவரும்போது பல பிரச்சனைகள் இல்லாமல் போய்விடுகிறது. மனிதமனம், புத்தி என்பன கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது. இந்த அதி உயர் நிலை மூலம் ஒரு பக்தன் இறைவனாக உயர்கிறான்.

இந்த பேரியல்புகளை நாம் நமது வாழ்வில் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவது இன்றியமையாதது. இறைவனது பக்தனாக நாம் வாழ்கிறோமா என்பதனை நாம் திரும்பிப்பார்க்க வேண்டும். இறைவன் நீ எனது பக்தன் என்று நம்மைச் சொல்ல வேண்டுமாயில் இந்த இயல்புகளை நம் வாழ்வில் நடைமுறைப்படுத்தியாக வேண்டியது தவிர்க்க முடியாத தேவையாகிறது.

தொடர்ச்சியான, விடாத பயிற்சி மூலமே இது சாத்தியமாக்கப்பட முடியும். பக்தி யோகத்தின் இறுதிப்பாடலில் பகவானே "சிரத்தையுடைய எவ் அன்பர் என்னையே கதியாகக் கொண்டு அமிர்தம் போன்ற இத்தர்மத்தை ஈண்டுரைத்தபடி கடைப் பிடிக்கிறார்களோ அவர்களே எனக்கு மிகவுமினியவர்" என்கிறார்.

இந்த பூவுலகவாழ்வினை நாம் மகிழ்ச்சியாக்கிக் கொள்ள விரும்புகிறோமா? அப்படியாயின் அதற்காக நாம் உண்மையாக உழைக்கிறோமா? இதற்குப்பதில் நிச்சயமாக இல்லை. இப்படித்தான் வாழவேண்டும் என்று நமக்கு சொல்லித்தரப்பட்டுள்ளது. அந்த வழியில் நாம் வாழ வேண்டும். அதன் போது நமது வாழ்வுமுற்றாக மாறிப் போகும். இந்த உண்மை நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போது பந்து நமது கையில், ஆம்! நாமே நமது வாழ்வைத் தீர்மானிப்போம் இறைவனது உண்மையான பக்தனாக உறுதிபூணுவோம். பகவத்கீதை - 12 - பக்தியோகம் - கடவுளுக்கு உவந்த பக்தன் குணவியல்புகள் பாடல் : 13-14 :- வெறுப்பற்றவன், நட்புடையவன், கருணையுள்ளவன், மமகாரம் அற்றவன், அகங்காரம் அற்றவன், இன்ப துன்பங்களை சமமாக கருதுபவன், பொறுமையாளன், சந்தோசமானவன், யோகி, தன்னடக்கமுடையவன், திட நிச்சயமுள்ளவன் (சந்தேகமற்றவன்), மனம், புத்தியை சமர்ப்பித்தவன்.

பாடல் 15:- உலகுக்கு இடர் செய்யாதவன், உலகத்தினின்று இடர்படாதவன்; களிப்பு, கோபம், அச்சம், கலக்கத்தினின்றும் விடுபட்டவன்.

பாடல் 16:- வேண்டுதலில்லாதவன், சுத்தமானவன், திறமைவாய்ந்தவன், ஓரம் சாராதவன், மனத்துயரமற்றவன், எல்லாக் காமியகர்மங்களையும் துறந்தவன்.

பாடல் 17:- மகிழ்வடைவதில்லை, துவேசிப்பதில்லை (வெறுப்பதில்லை), துயரப்படுவதில்லை, ஆசைப்படுவதில்லை, நலன் (நன்மை), கேடு (தீமை) விட்டவன்.

பாடல் 18 - 19:- பகை, நட்புநிகராகக் கருதுபவன், மானம் அவமானத்தை நிகராக் கருதுபவன், குளிர்வெப்பம், இன்ப துன்பத்தினை ஒப்பாக்கிப் பற்றற்றவன், இகழ்ச்சி புகழ்ச்சியை ஒன்றாகக் கருதுபவன் (மௌனி), கிடைப்பதில் திருப்தியடைபவன், இருக்க இடம் தேடாதவன், உறுதியான உள்ளம் உடையவன். பூசனை செய்து புகழ்ந்து மனங்கசிந்து நேசத்தால் ஈசனைத்தேடு - ஔவையார்.

-முற்றும்-

# The Review of Industrial Arbitral Awards - the Creative Role of Appellate Courts

By Saleem Marsoof P.C.
Additional Solicitor General

## *Introduction*

The Industrial Disputes Act provides for the resolution of Industrial disputes in various ways. Disputes can be settled through collective agreements,[1] and may also be referred under the Act for conciliation[2] or arbitration[3]. Reference for arbitration may be voluntary[4] or compulsory.[5] While voluntary reference of a dispute for arbitration is salutary, the provision for compulsory reference by the Minister has been criticized as a mechanism geared "to prevent healthy trade unionism"[6].

A dispute may be referred for arbitration to a labour tribunal or to an arbitrator nominated jointly by the parties or nominated by the Minister. Our courts have taken the view that the decision of the Minister to refer or not to refer a matter for arbitration is purely administrative and is not amenable to judicial review.[7] In Nadaraja Ltd., v Krishnadasan[8] it was also held that once the Minister makes a reference, he has no power to revoke the same. It must be noted that where a dispute is referred to alabour tribunal for arbitration, it does not exercise powers under Part IV of the Act but exercises the powers of an arbitrator as set out in Part II of the Act.

## *Appeal and Review*

Although an aggrieved party may appeal to the Provincial High Court from an order of a labour tribunal, no appeal lies from an award made by a labour tribunal or other arbitrator. However, the award of an arbitrator appointed under the Industrial Disputes Act may be reviewed by the Court of Appeal under by the issue of prerogative writs in terms of Article 140 of the Constitution. While certiorari is available to have an invalid decision or order quashed, mandamus is avaiable to compel the performance of a public duty[9]. Quo Warranto is the remedy available to challenge the authority of someone purporting to hold public office.[10]

The main remedy available for quashing an arbitral award is the writ of certiorari but a court may refuse to grant the writ where there is an effective alternative remedy. It has been held by our courts that the remedy of repudiating the award[11] is not such an adequate remedy the existence of which would deprive a party the writ of certiorari[12]

According to Atkin L.J. in R.v. Electricity Commissioners, the writ of certiorari will be issued "wherever any body of

persons having legal authority to determine questions affecting the rights of subjects, and having the duty to act judicially, act in excess of their legal authority..."in the above dicta the focus was on the source of power sought to be reviewed. It was earlier thought that 'body of persons' amenable to writ must be a State organ created by statute.[13] The focus has now shifted to the nature of the power sought to be reviewed.[14]

It has been held that an arbitrator appointed under the Industrial Disputes Act has a duty to act judicially.[15] However, recent judicial decisions have dispensed with the requirement of a "duty to act judicially" and merely require that there must be a duty to act fairly.[16] There can be no question that an industrial arbitrator is expected to act fairly. As the court observed in All Ceylon Commercial & Industrial Workers Union v Nestle Lanka Ltd.,[17]

"Although the arbitrator does not exercise judicial power in the strict sense, it is his duty to act judicially, though ultimately he makes an award as may appear to him to be just and equitable."

***Want or Excess of Jurisdiction***

Want or excess of jurisdiction is a major ground for the issue of certiorari.[18] An arbitral award can be quashed on the ground of ultra vires. In Equipment and Construction Co. Ltd. v. Ranasinghe[19] the Supreme Court held that once the Minister makes the reference for arbitration he becomes functus and cannot make further references of the same dispute. In Upali Newspapers Ltd. v. Eksath Kamkaru Samithiya[20] the Court of Appeal differed from earlier decisions of the same court[21] and held that the Minister is not competent to refer a matter pending before a Labour Tribunal for arbitration as that would infringe the independence of the judiciary. Similarly, in Volanka Ltd. v. Seneviratne, Minister of Labour & others[22] the Court of Appeal held that a matter governed by a collective agreement in force, cannot be referred for arbitration. The awards in all these cases were quashed on the ground of ultra vires.

However, in De Costa v.A.& Z Grindlays Bank PLC.23 the argument that a dispute with an ex-employee cannot be referred an arbitration was rejected by the Supreme Court. The Court based its decision on a pronouncement made by Justice Sharwananda (as he was then) in a dissenting judgement in National Union of Workers v. The Scottish Ceylon Tea Company Ltd.[24] who said "that the word 'gratuity' has come to mean not only retiring allowance or retrial benefit payable on termination, but also terminal benefit payable on termination of a long and faithful service consequent to resignation prior to a retiring age."

Where the Commissioner refers a dispute for voluntary arbitration under Sec-

tion 3 (1) (d) or for compulsory arbitration under Section 4 there shall be a statement prepared by the Commissioner setting out each of the matters which to his knowledge is in dispute between the parties.[25] The jurisdiction of an arbitrator is generally limited to the matters stated in such statement of the dispute. This Section, however, further states that nothing in this provision shall be deemed to be in derogation of the power of the Arbitrator to admit, consider and decide any other matter which is shown to his satisfaction to have been a mater in dispute between the parties prior to the date of the said order of reference, provided such matter arises out of or is connected with a matter specified in the statement prepared by the Commissioner. Therefore it is within the jurisdiction of an arbitrator to inquire into a matter not stated in the reference provided that he is satisfied that such matter has been in dispute between the parties prior to the date of the order of reference and such matter arises out of or connected with the disputed specified in the reference. This provision has been discussed in the Supreme Court decision in The Shell Co.(Ceylon) Ltd. v. Perera[26]. An arbitrator has no inherent or absolute jurisdiction, and derives jurisdiction from the order of reference. Any deviation by an arbitrator of his specified jurisdiction is considered to be ultra vires and may be subject to judicial review.

The characteristics and powers and functions of the statutory industrial arbitrators who adjudicate on a reference made under the Act differ from commercial arbitrator under the civil law. This is primarily due to industrial arbitrators being empowered to make an award which is "just and equitable". When an industrial dispute has been referred under Section 3 (1) (d) or Section 4 (1) to an arbitrator for settlement by arbitration he shall make all such inquiries into the dispute as he may consider necessary, hear such evidence as may be tendered by the parties to the dispute and thereafter make such - award as may appear to him just and equitable.[27] This gives very wide discretionary power to an arbitrator to make an award which in his opinion is just and equitable and it is said that arbitrators may not only grant existing contractual rights of the parties but also may create new rights and obligations or modify any existing right which will become implied terms of a contract of employment.

On a reference made to an arbitrator he assumes jurisdiction on the industrial dispute referred to him. Under Section 17 (1) he is required to make all inquiries as he may think necessary and hear all evidence as may be tendered and thereafter make such award as may appear to him just and equitable. It is settled law today, that arbitrators under the Industrial Disputes Act exercise arbitral and not judicial power. In Brown & Co. Ltd. v. Ratnayake[28] a comprehensive analysis was made of the powers and duties of an Arbitrator. The Court of Ap-

peal in that case stated that sec. 17 does not say that Arbitrator shall hold an inquiry. It reads that the Arbitrator shall make all such inquiries. Therefore the burden is on the Arbitrator to initiate inquiries himself and he has a wide discretion to decide on the procedure of the inquiry. Whatever the procedure he may follow, the only limitation is that it shall be in conformity with the principles of natural justice. Thus in Thirunavakarasu v siriwardena and others[29] the supreme Court pointed out that "An industrial arbitrator has such wider powers both as regards the scope of the inquiry and the kind of orders he can make than an arbitrator in the civil law. In short, we can fairly say that arbitration under the Industrial Law is intended to be even more liberal, informal and flexible than commercial arbitration. Justice Rodrigo, however, in Brown & Co. Ltd. v. Ratnayake[30] put it this way:

"The functions of the arbitrator power in relation to industrial disputes is to ascertain and declare what in the opinion of the arbitratorought to be the respective rights and liabilities of the parties in relation to each other, as distinct from the rights and liabilities of the parties as they exist at the moment the proceedings are instituted."

An arbitrator can order what he considers just and equitable even though that is in excess of the legal rights of the employee. The parties to the dispute cannot by agreement confer additional power which the arbitrator otherwise will not have in law. In such a situation an award can be challenged on the ground of excess of jurisdiction or on the ground that the arbitrator has not made a just and equitable order.[31]

The law requires an arbitrator to "make all such inquiries into the dispute as he may consider necessary." This widens the scope of duty of an arbitrator. Thus in an inquiry before an arbitrator the question on whom the burden of proof lies is irrelevant and out of place, and that this legal concept is inapplicable to such proceedings.

***Natural Justice***

The duty of an arbitrator to comply with rules of natural justice extends to the observance of principles of equity and the making of a "just and equitable" award. The concept of making 'just and equitable award'
by an arbitration tribunal was expounded by H.N.G. Fernando C.J in the case of Cargo Board Dispatch Co. Ltd v. Moosajee Ltd.[32] as follows:-

"When the Industrial Disputes Act confers on an arbitrator the discretion to make an award which is "just and equitable", the legislature did not intend to confer on an arbitrator the freedom of a wild ass. An award must be "just and equitable' as between the parties to a dispute"

In making an award, the arbitrator should also comply with the rules of natural justice. The first rule of natural justice is the audi alteram partem rule, which was applied in cases such as the Board of Trustees of Maradana Mosque v Minister of Education.[33] This principle emphasizes the duty of an arbitrator to hear and consider the submissions by both parties prior to making an award. In fact, in Volanka Ltd. v. Seneviratne, Minister of Labour & others[34] the court was of the view of this duty was expanded by Section 36 (1) of the Industrial Disputes Act which empowered the arbitrator require any person to furnish particulars, produce documents and give evidence. The court observed in this case that it would have been desirable in the circumstances of the case to call the Petitioner to give evidence.

In Kalamazoo Industries Ltd & others v. Minister of Labour35 at the end of the inquiry by the arbitrator gave a date for the parties to submit their written submission together with marked documents. Although the Union submitted their written submissions and marked documents the employer failed to do so in spite of several reminders. Ultimately the Arbitrator made the award without the marked documents or written submission of the employer. The award was in favour of the workers, The employer challenged the award in a writ application on the ground that the arbitrator had failed in his duty to make inquiries and hear all evidence tendered, the Court of Appeal dismissed the application and remarked-

'Although Sec. 17 (1) of the Industrial Disputes Act stipulates that the arbitrator shall make all inquiries into the dispute, hear evidence and thereafter make his award, no duty is cast on him to invade private offices of litigants and to take forcible possession of documents. It is not now open to the parties to annex the documents (to the Petition) and on the strength assail and impugn the award.'

In Colombo Dock Yark Ltd. v. De Silva and others[36] it was submitted by the petitioners that the award of the arbitrator "is a verbatim transcript to the written submissions" of the Respondent and hence devoid of procedural fairness to which the Petitioner is entitled. It was held by Jayasuriya J. that the "Petitioner was afforded a full and unrestricted right and opportunity of placing its evidence at the inquiry and all matters raised in the submissions of the Petition has been sufficiently considered by the arbitrator." Therefore it was held that there was no breach of natural justice and rules of procedural fairness.

Natural justice also requires that the arbitral tribunal should not be biased. In the recent case of Shell Gas Lanka Ltd v All Ceylon Commercial & Industrial Workers Union and others (2000) 3 Sri L.R. 170 Hector Yapa J. set down the

basis of determining bias in proceedings of this nature: "In law what is material is not the subjective belief of the Petitioner on the issue of bias. It is an objective test." Further the test as formulated by Lord Denning, M.R. in the case of Metroplitan Properties Co. (F.G.C.), Ltd. v. Lannon and others[37] was made applicable in determining the issue of likelihood of bias.

"In considering whether there was a real likelihood of bias, the Court does not look at the mind of justice himself or at the mind of the Chairman of the Tribunal, or whoever it may be, who sits in a judicial capacity. It does not look to see if there is real likelihood that he would, or did, in fact favour one side the expense of the other. The Court looks at the impression which would be given to other people. Even if he was as impartial as could be, nevertheless if right-minded persons would think that, in the corcumstances, there was a real likelihood of bias on his part, then he should not sit. And if he does it, his decision cannot stand."

***Error on the face of the Record***

Error on the face of the record is another ground on which an award can be set aside by certiorari.[38] There is such an error where the arbitrator takes into consideration irrelevant facts or evidence. In Kundanmal Industries v. Commissioner of Labour[39] the Court of Appeal made the following pertinent observation-

"A proper determination should have been made whether there were profits or not. There has been no specific finding that profits were made in 1980. Such a finding could not have been possible because the statement of profit and loss reflected in the balance sheet, R6 showed loss. There was no other material before the arbitrator to come to a clear finding that there were profits for 1980. It is strenuously urged by counsel for the petitioner that the arbitrator has based his findings on figures provided by the written submissions of the Union and not evidence placed at the inquiry.

This method of arriving at a conclusion has been disapproved in Dissanayake v. Kulatillake[40] - Basnayake, J. has stated that material other than which appears in the record could not be used by an inferior tribunal and that the use of such material amounts to an error on the face of the record. The very relevant question of profits for the year 1980 has not been determined by the arbitrator. If one were to proceed on the basis of profitability such a finding is a vital fact and indeed a pre-condition to an award for the payment of bonus. The surmises that the company has lost due to faulty trade policies is a factor in my view totally irrelevant in deciding this matter. Profit bonus can be awarded only by reference to that particular year. See, Management of Tocklain Research Station v. The Woodmen.[41]

On the established fact the order to pay two months wages would only be possible by drawing on the reserves of previous years. This would not be in accord with the established principles of the payment of annual bonus. Therefore the contention that there is error on the face of the record is valid."

Similarly, in Chas P. Hayley and Co. Ltd. v. Commercial and Industrial Workers and others[42] the Court of Appeal held that an arbitrator was guilty of error on the face of the record where he failed to appreciate that salaries paid to executives depended on market factors of supply and demand. The Court also held there was an error on the face of the record when he refused to consider a report regarding loss on the basis that the loss was temporarily without evidence to substantiate that position.

### *Fraud and Collusion*

Fraud and collusion are also grounds on which certiorari will be available to quash arbitral awards.[43] However, there is a dearth of authority on this question in the context of industrial awards.

### *Termination of the Award*

In terms of the Industrial Disputes Act, an award may be terminated by any party, trade union, employer or workman.[44] Where a valid notice of termination is given, the relevant award shall cease to have effect upon expiration of 3 months immediately succeeding the month in which the notice is so received by the Commissioner or upon the expiration of 12 months from the date on which the award came into force, whichever is later. In Thirunavukarasu v. Siriwardane[45] the Court emphasized that the award is not completely wiped off by a termination. Wanasundera, J. observed that "a repudiation can only have prospective application and cannot affect any rights and obligations that have already accrued."

### *Conclusion*

Naganathan was only few months in the Province of Jaffna. Thereafter he had settled in Colombo and married a Colombo lady and lived and died in Colombo. He visited Jaffna only twice. The District Judge described this as "extremely vague". The court held that he was a Colombo man and domiciled in Colombo.

Furthermore in the judgement, Wood Renton A.C.J. analysed the argument of both sides. Actually plaintiff did not rely on the evidence to establish that Naganathan was an inhabitant of the Province of Jaffna. She depended on the evidence of Arumogan and his *Tesawalamai* wife and Arumogan's parents before him. The fact that Naganathan's parents were "Malabar inhabitants of the Province" would not, of course, necessarily show that Naganathan was one. But it might create the presumption in favour of that conclusion. Arumogan's parents lived and died in Jaffna and were "inhabitants" of that Province. Arumogan was born in Jaffna and preserved the family name and religion and married a Jaffna Lady. He visited thrice to Jaffna. Even if he sold the land in that Province, again purchased a land at a higher value in the same Province. When he dealt with the deceased sister's property, he applied the provisions of the *Tesawalamai* Regulation. These facts which were in the judgement of the District Court were not challenged. But on the other hand, although Arumogan might cease to be an "inhabitant" of the Province of Jaffna, he did not cease to be a Tamil and a Hindu. It is not surprising to note the fact that he retained the family name and religion, and kept himself in occasional touch with his friends in

Jaffna. Moreover, the evidence showed that it was not unusual even for the members of the Colombo community to retain portions of their ancestral property in the province of their birth. The marriage was not celebrated in Jaffna. Most of the immovable property was in the District of Colombo, except some shares in the finance company. In these circumstances, the Court held that neither Arumogan nor wife was a Malabar inhabitant of that province.

Actually, a line cannot be drawn to decide for the applicability of the *Tesawalamai*. This depends on the circumstances, in which he or she intends to be governed by the *Tesawalamai*.

In *Tharmalingam Chetty v. Arunasalam Chettiyar*[7], the appellant was born in Jaffna of parents, who were natives of Ramnad, in South India, but who had permanently settled in Jaffna. The question was that whether any person who settled in Jaffna from India after 1806 be governed by the *Tesawalamai*.

In this case, Soertsz J. held that when the question is considered in that way it was easy to understand why in the Regulation of 1806 which gave full force to the collection made by Isaakz in 1706, it was briefly described as a collection of the customs of the Malabar inhabitants.

These views have been consistently followed in the later cases. There is the well known case of *Spencer v. Rajaratnam*, in which Ennis J. made the observation that "the *Tesawalamai* are not the customs of the race or a religion common to all persons of that race or religion in the Island; they are the customs of a locality and apply only to *Tamils of Ceylon who are inhabitants of a particular province*". "The *Tesawalamai* applies to Tamils with a Ceylon domicile and the Jaffna inhabitancy".

In *Savundranayagam v. Savundranayagam*[8] there was an action for declaration of title to a property, situated in the province of Jaffna. The property belonged to the wife of G P Tissera, who left two sons, A and S. After death of G P Tissera A and S divided the family property between themselves. S married the mother of the plaintiffs. After her death he married again, in 1869, the defendants' mother, to whom he left the house by his last will, and who, in turn, donated it to her two sons in 1906. The plaintiffs claimed a half share of the property on the basis that Roman-Dutch law governed its devolution.

The law applicable to the question whether S was or was not governed by the *Tesawalamai* is defined in the decision of this court in *Spencer v. Rajaratnam* "The *Tesawalamai* is not a personal law attaching itself by reasons of the decent and religion to the whole Tamil population of Ceylon, but an exceptional custom in force in the Province of Jaffna-now the Northern Province- and in force there primarily, and, mainly at any rate, only among the Tamils who can be said to be 'inhabitant' of that province; and further, as the *Tesawalamai* is a custom in derogation of the common law, any person who alleges that it is applicable to him must affirmatively establish the fact."

The court took the view that the burden of proof in this matter was on the defendants.

In *Spencer v. Rajaratnam*, we have observed that a line can not be drawn to decide for the applicability of the *Tesawalamai*. This depends on the circumstances, in which he or she intends to be governed by the *Tesawal amai*. The case of *Savundra nayagam v. Savundranayagam* had been connected to or a continuity of, *Spencer* case. Because *Savundranayagam's* case confer the burden of proof on the person who wanted to be governed by the *Tesawalamai*.

In *Nagaratnam v. Suppiah*[9], the defendant was born in India about 1910. At the age of 14 years, he had come to a village in the Northern Province where he had been employed for some years. In 1930 he started the business of a trader in the same village and in 1935 he married the plaintiff, who was herself a permanent inhabitant of Jaffna. The court took the view that "the Citizenship Act define the political status of citizen of Ceylon. These Acts were enacted only in 1948 and 1949, and the fact that a person did not at that stage have the qualifications necessary for citizenship is not relevant to the question whether that person had already become a permanent resident of the Northern Province. We are not concerned in this case with the more difficult question whether a person who has come to Ceylon after 1948, and does not acquire citizenship in Ceylon, can claim that he has nevertheless been a permanent inhabitant of Ceylon."

Now in the year 2002, around four hundred thousands of the population of the Jaffna province are living out of that province. But they have their property within that province. Even if they are out of the Island, if they come back to Sri Lanka, the

*Tesawalamai* would govern them also. Because the test would be that as the defendant-respondents counsel submitted in *Somasunderam v. Charavanamuttu*[10], if they keep up their connection with Jaffna, that is removing all doubt about their intention and right to be governed by the *Tesawalamai*.

In *Sivagnanalingam v. Sunderalingam*[11], Sharvananda CJ analysed the cases which are relevant to the applicability of the *Tesawalamai* and came to the firm decision on the issue that the intention to abandon the inhabitancy of the Northern Province should be established to be governed by the common law of the land.

The questions to be asked in this case were whether the deceased was an inhabitant of Jaffna at the time of his death? Had he abandoned his Jaffna inhabitancy and settled in Colombo? Can it be said that the deceased had severed his connection with Jaffna and chose to have his permanent home in Colombo?

The Supreme Court took the view that-

(1) "inhabitancy of the Province of Jaffna" is a question of fact and the petitioner should establish the fact that the deceased was at all relevant times an inhabitant of the Northern Province;

(2) the *Tesawalamai* is the personal law of the Tamil inhabitants of the Northern Province. It applies to them wherever they are and to their movable and immovable property wherever situate in Sri Lanka; and

(3) the evidence does not show that the deceased had given up his intention to return to Jaffna.

## Conclusion

In the applicability of *Tesawalamai*, as I mentioned earlier, there are three elements, which should be proved to be governed by the *Tesawalamai*.

1) Malabar
2) Tamil
3) Inhabitant of the Northern Province (earlier called as Jaffna province)

***Malabar: -***

This element was a strict one for the applicability of *Tesawalamai*. The court observed that, first of all whether a person was a Malabar during that period. The *Tesawalamai* Regulation itself reads "Malabar inhabitant". In *Fernando's* case, even though the lady was a Malabar inhabitant, she was not governed by the

*Tesawalamai*. Because she was not an inhabitant of Jaffna province. Furthermore, in *Nagarat nam*'s case and *Tharmalingam Chetty's* case the parties were from Indian Tamils and from South India, but they were not Malabar inhabitants to whom the *Tesawalamai* applied. Therefore finally, whether a person is a Malabar or not is not a matter that helps to decide to whom the *Tesawalamai* applies.

***Tamil: -***

This is a firm and concrete factor, that must be satisfied to be governed by the *Tesawalamai*, which has never been questioned by any court of law. The *Tesawalamai* cannot be applicable to the all Sri Lankan Tamils. In *Fernando*'s case and *Wellapula*'s case the court held that the *Tesawalamai* is not applicable to the Tamils of Puttalam and Trinco malee respectively. In *Veluppilai*'s case, the party who settled in Batticaloa, was an inhabitant of Jaffna province. That is why the *Tesawalamai* applied.

***Inhabitant of the Northern Province:***

"The *Tesawalamai* is not a personal law attaching itself by reason of descent and religion to the whole Tamil population of Ceylon, but an exceptional custom in force in the Province of Jaffna and in force there primarily and mainly at any rate, only among the Tamils who can be said to be inhabitants of the that Province" per Wood Renton CJ. in *Spencer v. Rajaratnam*.

"In *Tharmalingam Chetty,* it was contended by counsel for the appellant that *Tesawalamai* did not apply to all Tamil inhabitants of the Northern Province but only to such of them as were descended from the Malabar Tamils who were inhabitants of Jaffnapatnam at the time the Dissawe Isaak's collection of customs was given full force by the Regulation of 1806 or alternatively to other Malabar inhabitants of the peninsula. This contention was rejected by court which held that the father of the appellants, being a Tamil, although he came from Ramnad, India had settled permanently in Jaffna, *animo manendi et non revertendi* and hence the appellant was governed by the *Tesawalamai*." Soertsz J. thus upheld the generally accepted view that *Tesawalamai* applied to Tamils inhabiting the Northern Province. "The *Tesawalamai* applies to Tamils with a Ceylon domicile and a Jaffna inhabitancy." Thus *Tesawalamai* applies to persons of the Tamil race who settled in Jaffna after the enactment of the Code of *Tesawalamai*. In *Chetty V. Chetty* the parties were Tamils belong-

ing to the community known as the *Vaniyas,* who had, for about three generations made Jaffna their permanent home and observed the customs followed by other Hindu families. It was held that the parties were Malabar inhabitants of Jaffna to whom the *Tesawalamai* applied. In *Nagaratnam's* case an Indian Tamil who by his permanent residence and marriage in Jaffna had established that he was inhabitant of the Northern Province, was held to be subject to *Tesawalamai*.

Thus, for *Tesawalamai* to apply to a person, it must be established that he is a Tamil inhabitant of the Northern Province." per Sharvana nda CJ. in *Sivagnanalingam's* case.

Therefore the interpretation given by our court of law has made such impressive contribution so that any legal practitioner can embark on any matters relating to the applicability of *Tesawalamai,* without an iota of doubt.

### References

1. *Putyhatampy v. Mailvakanam 2 NLR 42*
2. *Fernando v. Proctor 12 NLR 309*
3. *Wellapula v. Sitambalam 1875 Ram. Rep. 114*
4. *Velupillai v. Sivahamipillai 13 NLR 74*
5. *King v. Perumal 14 NLR496*
6. *Spencer v. Rajaratnam 16 NLR321*
7. *Tharmaligam Chetty v. Arunasalam Chettiyar 45 NLR414*
8. *Savundranayagam v. Savundrana yagam 20 NLR 274*
9. *Nagaratnam v. Supiah 74 NLR 54*
10. *Sivagnanalingam v. Sunderalingam 1988 1SLR 87*
11. *Somasunderam v. Charavamuttu 44 NLR 01*

# நீதித்துறையின் சுதந்திரத்திற்குப் பதினேழாவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் எந்தளவு உதவி புரிகிறது?

சட்டத்தரணி.
கே.ஜீ.ஜோன் (பீ.ஏ.இலங்கை)

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் மூன்று அரசியலமைப்புக்களைச் சந்தித்துள்ளது. சோல்பரி அரசியலமைப்பு, முதலாவது இலங்கை சனநாயக சோசலிய குடியரசு அரசியலமைப்பு, இரண்டாவது இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசு அரசியலமைப்பு என்பனவே அவையாகும். இவ்வரசியலமைப்புக்களை ஆக்கியவர்கள் பல்வேறு அரசியல் எண்ணங்களைக் கொண்டவர்களாக இருந்ததினால் அவர் களது எண்ணங்கள் பல அவ்வவ் யாப்புக்க ளில் பிரதிபலித்து கொண்டிருந்தன. ஆயினும் மூன்று யாப்புக்களிலும் ஒரு பொது விடயமும் பிரதிபலித்ததென்று என்று கூறவேண்டும். அந்தப் பொது விடயம் என்னவெனில் நீதித்துறை சுதந்தி ரம் என்பதாகும். அதாவது இலங்கையில் நீதித்துறையானது இயன்றளவு சட்டத்து றையிலிருந்தும் ஆட்சித்துறையிலிருந்தும் விடுபட்டு, சுதந்திரமாக இயங்க வேண்டும் என்ற எண்ணம் மூன்று யாப்புக்களை தயாரித்தவர்கள் மத்தியிலும் இருந்ததென்று கூறவேண்டும். அவ்வாறு சுதந்திரமாக இயங்கவேண்டும் என எதிர்பார்த்த நீதித்து றைக்குத் தற்போதைய பதினேழாவது அரசியலமைப்புச் சீர்திருத்தமும் எந்த அளவு உதவி புரிகிறது எனப்பார்ப்பது சாலச்சிறந் ததாகும்.

## சுதந்திர இலங்கையின் சோல்பரி அரசியல் அமைப்பில் நீதித்துறை

சோல்பரி அரசியலமைப்பில் நீதித்துறை என்ற அத்தியாயத்தின் கீழ் இரு வகையான பிரிவுகள் இருந்தன. ஒன்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் பற்றியது. மற்றையது உயர் நீதி மன்ற நீதிபதிகள் அல்லாத ஏனைய நீதித்து றை அலுவலர்களைப் பற்றியது. உயர் நீதிமன்ற நீதிபதிகள் மகாதேசாதிபதியால் பிரதம மந்திரியின் சிபார்சின்படி அரசியல மைப்பு மரபுகளுக்கமைய நியமனம் செய்யப் பட்டனர். உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவர் மகாதேசாதிபதியால் பாராளுமன்றத்தில் விழித்துரை நிகழ்த்தியதன் பின்னரே பதவி யிலிருந்து அகற்றப்படுவார். இதன் பொருள் என்னவெனில் பாராளுமன்றத்தின் இரு சபைகளான பிரதிநிதிகள் சபையும் செனட் சபையும் ஒன்றாக அமர்ந்து ஒரு பிரேரணை யை நிறைவேற்றி உயர்நீதிமன்ற நீதியரசரை விலக்குமாறு கேட்டால் ஒழிய மகாதேசாதி பதி உயர்நீதிமன்ற நீதிபதியை விலக்க முடி யாது. உயர் நீதிமன்ற நீதியரசர்கள் 62 வயது வரை சேவையாற்றலாம். ஆனால் மகாதே சாதிபதி விரும்பின் பன்னிரண்டு மாதங்க ளுக்கு மேற்படாத காலத்திற்கு ஒரு உயர்நீ திமன்ற நீதியரசரின் சேவைக் காலத்தை மேலும் நீடிக்கலாம். உயர் நீதிமன்ற நீதியர சர்களின் சம்பளம் பாராளுமன்றத்தால் நிர்ண யிக்கப்படும். அது திரட்டு நிதியத்திலிருந்து வழங்கப்படும். ஒரு உயர் நீதிமன்ற நீதியர சரின் சம்பளம் அவரது பதவிக்காலத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் குறைக்கப் படமாட்டாது.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் அல்லாத ஏனைய நீதி அலுவலர்களின் நியமனம்,

இடமாற்றம், ஒழுங்கு நடவடிக்கை, வேலை நீக்கம் என்பவற்றைக் கவனிக்க நீதிச்சேவை ஆணைக்குழு இருந்தது. இந்தக் குழுவில் பிரதம நீதியரசர் பதவி வழியாக இடம் பெற்ற துடன் அதன் தலைவராகவும் விளங்குவார். உயர்நீதிமன்றத்தில் சேவையாற்றும் அல்லது ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவர் இன்னுமொரு அங்கத்தவராக இக்குழுவில் இருப்பார். மகாதேசாதிபதி பிரதம மந்திரியின் சிபார் சின்படி மேலும் இருவரை இக்குழுவிற்கு நியமிப்பார். நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டில் அல்லது அதன் அங்கத்த வர்களது செயற்பாட்டில் தலையிடுவது குற்றமாக இருந்தது.

மேற்படி பிரிவுகள் பற்றி லியனகே எதிர் அரசி (68 NLR 665) கோமறை கழகம் நன்கு ஆராய்ந்ததன் பின்னர் பின்வருமாறு கூறி யது. "மேற்படி பிரிவுகள் நீதித்துறையானது சட்டத்துறையினதும், ஆட்சித்துறையின தும் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டு இயங்கவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டது" என்று கூறியது.

ஆகவே சோல்பரி அரசியலமைப்பில் நீதித்துறை சுதந்திரமாக இயங்க வேண்டு மென, பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன எனலாம்.

**இலங்கை சனநாயக சோசலிஸக் குடியர சின் முதலாவது அரசியலமைப்பில் நீதித்துறை**

இலங்கை சனநாயக சோசலிஸக் குடியர சின் முதலாவது அரசியலமைப்பு சோல்பரி அரசியலமைப்புப் போல் நீதித்துறை சட்டத் துறையை விடத் தனிமையானது என்றும் சுதந்திரமானது என்றும் கூறுவதை ஏற்றுக் கொள்ள வில்லை. இந்த அரசியலமைப்பை ஆக்கிய சட்ட மன்றம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது என்றும் மக்களே இந்நாட்டின் இறைமையைப் பிரதிபலிப்பதால் சட்டமன் றத்திற்குமேல் ஒருதுறை இருக்கமுடியாது என்றும் தெரிவித்தனர். காலஞ்சென்ற திரு.பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அவர் கள் அரசியலமைப்பு நிருணய சபையில் உரையாற்றும் போது பின்வருமாறு கூறினார்.

*"We are trying to reject the theory of separation of powers. We are trying to say that nobody should be higher than the elected representatives of the people, nor should any person not elected by the people have the right to throw out decisions of the people elected by the people"*

திருவாளர் பீட்டர் கெனமன் அவர்கள் பின்வருமாறு கூறினார். *Let us be quite clear in our minds about this question of the independence of the judiciary. It does not and cannot deprive the legislature of its rightful supermacy in the constitutional order of things"*

மேலே கூறிய கட்சித்தலைவர்களின் பேச்சு நீதித்துறை சட்டத்துறையை விட உயர்ந்தது என்றும் தனிப்பட்டது என்றும் கூறுவதை நிராகரிப்பதைக் காணலாம். இதற்கு அமையவே இவ்வரசியலமைப்பில் நீதித்துறையின் அமைப்புப் காணப்பட்டது.

1972ம் ஆண்டு அரசியலமைப்பு அன் றைய உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனத் தை ஜனாதிபதியிடம் விட்டிருந்தது. அத்து டன் அந்நீதிபதிகள் நன்னடத்தை உள்ள வரைப் பதவியிலிருந்து அகற்றப்படாமல் இருப்பர் என்றும், ஜனாதிபதி தேசிய அரசுப் பேரவையை விளித்ததன் பின்னரே அவர்க ளைப் பதவி நீக்கலாம் என்றும் ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது. அவர்கள் 63 வயது வரை பதவி வகிக்க ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

உயர்நீதிமன்றம் தவிர்ந்த கீழ்நிலை

நீதிபதிகளின் நியமனம் முன்னைய அரசியலமைப்புப் போல் சுதந்திரமான நீதிச்சேவை ஆணைக்குழுவால் செய்யப்படவில்லை. அதற்குப்பதிலாக மந்திரிசபையினால் செய்யப்பட்டது. அவ்வாறு மந்திரி சபை நியமனத்தைச் செய்யும் முன்னர் நீதிச்சேவை ஆலோசனைக்குழுவின் சிபார்சைப் பெறறது. இந்த நீதிச்சேவை ஆலோசனைக் குழு பிரதம நீதியரசரையும் கீழ்நிலை நீதிமன்ற நீதிபதி ஒருவரையும் தொழில் நியாயசபைத் தலைவர் ஒருவரையும் இன்னும் இருவரையும் கொண்டிருந்தது. பிரதமரின் சிபார்சின்படி சனாதிபதியால் இவ்வங்கத்தவர்கள் குழுவிற்கு நியமிக்கப்பட்டனர். இக்குழுவின் சிபார்சுக்கு மாறாக மந்திரி சபை நடந்து கொண்டால் மந்திரிசபை தேசிய அரசு பேரவைக்குப் (பாராளுமன்றத்திற்கு) பதில் சொல்லவேண்டும். இடமாற்றம் நீதிச் சேவை ஆலோசனைக்குழுவாலேயே செய்யப்பட்டது. இம்மாற்றத்தில் அதிருப்தியுறும் ஒருவர் மந்திரிக்கு மேன்முறையீடு செய்ய வேண்டும்.

1972 ம் ஆண்டு அரசியலமைப்பின்படி நீதிபதிகளின் நியமனம், இட மாற்றம் என்பன ஆட்சித் துறையினருக்கு வழங்கப்பட்டிருந்தன. ஆயினும் ஆட்சித்துறையினர் தேசிய அரசுப் பேரவைக்குப் பதில் கூறவேண்டிய நிலையில் இருந்தனர்.

நீதிச்சேவை ஒழுக்காற்றுக் குழு கீழ்நிலை நீதிபதிகளின் வேலைநீக்கம், ஒழுக்காற்று நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்தது. அதேபோல் தேசிய அரசுப்பேரவையும் கீழ்நிலை நீதிபதிகளை வேலை நீக்கம் செய்யும் உரிமையைக் கொண்டிருந்தது.

ஆகவே மேலேயுள்ள பிரிவுகளை ஆராய்ந்தால் நீதித்துறை சட்டத்துறைக்கும் ஆட்சித்துறைக்கும் கட்டுப்பட்டதாக இவ்வரசியலமைப்பில் விளங்கியது எனலாம்.

## <u>இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் நீதித்துறை</u>

1978ம் ஆண்டு அரசியலமைப்பில் நீதித்துறை பற்றிய ஏற்பாடுகள் உறுப்புரை 105 தொடக்கம் 147 வரை காணப்படுகின்றன. இவ்வேற்பாடுகளின்படி நீதிபதிகளின் நியமனம், வேலை நீக்கம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை என்பன மட்டுமன்றி நியாயாதிக்கங்களும் நீதித்துறைக்கே வழங்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.

உயர் நீதிமன்ற நீதியரசர்களும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களும் சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர். ஆனால் 1948ம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் உள்ளதைப்போலவோ அல்லது 1972ம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் உள்ளதைப் போலவோ அன்றி சனாதிபதி பிரதம அமைச்சருடன் கலந்தாலோசிக்காமலேயே நீதியரசர்களை நியமிக்க முடியும். முன்னைய அரசியலமைப்புக்களில் பிரதம மந்திரியுடன் கலந்தாலோசனை செய்த பின்னரே சனாதிபதி நீதிபதிகளை நியமிக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சனாதிபதியின் நியமனத்தைப் பாராளுமன்றம் கேள்விக்குட்படுத்தமுடியாது. ஆயினும் ஒரு நியமனத்தைச் செய்தால் சனாதிபதி மீது 38(2) ம் பிரிவின் கீழ் குற்றமனு ஒன்று கொண்டு வரலாம். அப்போது கூட 2/3 வாக்கு இல்லாமல் சனாதிபதியை நீக்க முடியாது. ஆகவே சனாதிபதி செய்யும் நியமனம் சவாலுக்குப் பெரும்பாலும் உட்படுத்த முடியாததாகும். முன்னாள் சனாதிபதி அவர்கள் முன்னாள் பிரதம நீதியரசராக திரு. நெவில் சமரகோன் அவர்களை நியமித்த போது சட்ட தரணிகள், நீதியரசர்கள், சட்டவியலாளர்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது. ஆயினும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

தற்போதைய சனாதிபதி நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா அவர்களை நீதியரசராக நியமித்தபோதும் சலசலப்பு ஏற்பட்டது. இறுதியில் உயர் நீதிமன்றம், சனாதிபதி எவரையும் கலந்தாலோசிக்காமல் நீதிபதிகளை நியமனம் செய்யும் அதிகாரம் உள்ளவராக எமது அரசியலமைப்பில் விளங்குகிறார் எனக் கூறியது. ஆயினும் ஆலோசனை செய்வது வரவேற்கத்தக்கது எனக் கூறியது.

கீழ்நிலை நீதிபதிகள் (மேல் நீதிமன்றம் தவிர்ந்த) நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டனர். அவர்களது மாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை, வேலை நீக்கம் என்பவற்றுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவே பொறுப்பாக இருந்தது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களதும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களதும் வேலை நீக்கம் பாராளுமன்றத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையினால் பாராளுமன்றின் பரிபூரண பெரும்பான்மையினால் சம்மதிக்கப்பட்ட பிரேரணை ஒன்றின் மீதன்றி வேறு விதமாகச் செய்ய முடியாது. சனாதிபதியே நீதியரசர்களை நீக்க வேண்டுமாயினும் பாரளுமன்றம் பரிபூரண பெரும்பான்மையினால் நீதியரசர் ஒருவரை நீக்கும் பிரேரணையை நிறைவேற்ற வேண்டும். அதன் பின்னரே சனாதிபதி அவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

மேற்படி பாதுகாப்புகளினால் இன்றைய அரசியலமைப்பில் நீதித்துறையானது சட்டத்துறை, ஆட்சித்துறையின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு இயங்குகிறது எனலாம்.

## <u>17வது அரசியலமைப்புச் சீர்திருத்தமும் நீதித்துறையும்.</u>

சனாதிபதி யாரையும் கலந்தாலோசிக்காமல் உயர்நீதிமன்ற நீதிபதிகளையும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளையும் நியமிக்கலாம் என்ற உறுப்புரையை 17வது அரசியல் யாப்பு திருத்தம் திருத்தியுள்ளது. அதன்படி பிரதம நீதியரசரும், உயர் நீதி மன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைவரும் நீதிபதிகளும் நீதித்துறைச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் தவிர்ந்த உறுப்பினர்கள் சனாதிபதியினால் அரசியலமைப்புப் பேரவைக்குச் செய்யப்படும் விதப்புரையின் மீது அத்தகைய நியமனம் அரசியலமைப்புப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய சனாதிபதியினால் நியமிக்கப்படுதலாகாது என்கிறது. (41 இ உறுப்புரை) ஆகவே இப்பிரிவின் படி சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவை ஆலோசனைகள் அவசியமாகின்றன.

ஷிராணி பண்டாரநாயக்க வழக்கில் சனாதிபதி ஆலோசனை இல்லாமல் நீதியரசர்களை நியமிக்கலாம் என்பது சரியாயினும் ஆலோசனை செய்வது வரவேற்கத்தக்கது என்ற கூற்றை இந்த அரசியலமைப்புப் பேரவை அமைப்பு உறுதி செய்து நீதித்துறையை மேலும் சுதந்திரமாக்கியுள்ளது எனலாம்.

ஆனால் தற்போது எழுகின்ற வினா என்னவெனில், சனாதிபதியின் விதப்புரையை அரசியலமைப்புப் பேரவை நிராகரித்து அங்கீகரிக்க மறுத்தால் மாற்று நடவடிக்கை என்னவாக இருக்கும் என்பதே யாகும். அது எப்படியிருப்பினும் இன்றைய 17வது சீர்திருத்தம் நீதித்துறையை மேலும் சுதந்திரமாக்கியுள்ளது என்றே கூறவேண்டும்.

# சிவில் வழக்குகளில் கட்டாணையும் இடைக்காலத்தடை உத்தரவும்.

**சட்டத்தரணி**
**ஐ.பயஸ் றெஸ்ஸாக்**

பொதுவாக எமது நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் இடைக்கால நிவாரணங்கள் முக்கிய கோரிக்கையாய் இடம் பெறுவதை அவதானிக்க முடிகிறது. அதிலும் மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் இடைக்காலத் தடை உத்தரவு ஒரு முக்கியமான விடயமாகக் காணப்படுகிறது. ஏனெனில் ஒரு கட்சிக்காரருக்கு இடைக்காலத் தடை உத்தரவுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்குமாயின் அக்கட்சிக்காரருக்கு ஓரளவுக்கு குறித்த வழக்கில் பூரண நிவாரணம் கிடைத்த நிம்மதி கிடைக்கிறது. எனவே தான் நீதிமன்றங்கள் இடைக்காலத்தடை உத்தரவை வழங்கும் போது மிகவும் கவனமாகவும் அவதானமாகவும் செயற்படுகின்றன.

## இடைக்காலத்தடையுத்தரவு என்பது யாது? (Injunction)

எமது சிவில் நடபடி கோவையானது எந்த இடத்திலும் இடைக்காலத்தடை உத்தரவு என்றால் என்ன என்பதை வரைவிலக்கணம் செய்யவில்லை. மாறாக இடைக்காலத்தடையுத்தரவு விண்ணப்பத்திற்கான நடைமுறையினை மாத்திரமே கூறியிருக்கிறது.

ஆனால் பொதுச் சட்ட வரைவிலக்கணப்படி **குறித்த நபரை, குறித்த செயலை அல்லது விடயத்தை செய்யாதிருக்குமாறு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு நீதிமன்றத்தினால் விடுவிக்கப்படும் ஓர் இடைக்காலக் கட்டளையாகும்.** ஆனால் இது வொரு முழுமையான வரைவிலக்கணமாகக் கருதமுடியாது. ஏனெனில் தற்போது **குறித்த ஒரு செயலை செய்யுமாறு கோரும் கட்டளைகளைக் கூட (Mandatory Injunction)** நீதிமன்றங்கள் விடுக்கின்றது. அதேநேரம் Sohoni's Law of Injunctions எனும் இந்திய நூலில் இவ்வாறு வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. "Injunction as its commonly known in legal parlance is a quick relief provided by courts to aggrieved party restraining the concerned person from an act pending Finalisation of the Suit."

சுருக்கமாய்க் கூறினால், இடைக்காலத் தடை உத்தரவு என்பது வழக்கினைப் பூரணமாய் விளங்கித் தீர்ப்பு வழங்கும் வரைக்கும் பாதிப்படையும் திறந்தவருக்கு நீதிமன்றங்களினால் வழங்கும் ஓர் தற்காலிக நிவாரணமாகும்.

## கட்டாணை என்பது யாது? (Enjoining order)

இடைக்காலத் தடை உத்தரவு விண்ணப்பங்களில் இரண்டு விதமான சொற்பிரயோகங்கள் பிரயோகிக்கப்படுகிறது. அவை யாவன.

1. இடைக்காலத் தடை உத்தரவு (Injunction)
2. கட்டாணை (Enjoining order)

இவை இரண்டிற்கும் இடையே பெரி தாய் எவ்வித வேறுபாடும் கிடையாது. அதே வேளை இவை அமுலாகும் கால இடை வெளியில் மாத்திரம் தான் வேறுபாடு கொண்டது.

இடைக்காலத் தடை உத்தரவிற்கு எந்தளவிற்கு சட்ட வலிமை உள்ளதோ அதே விதமான சட்ட வலிமை கட்டாணையிற்கும் உண்டு. இடைக்காலத்தடை உத்தரவிற்கு யாரேனும் மனுச் செய்வாராயின் அல்லது பிராதிலே அதனை ஒரு நிவாரணமாய் வேண்டுவாராயின் **முதலில் நீதிமன்றம் கட்டாணை நிவாரணத்தினையே வழங்கும்.**

இக்கட்டாணையானது 14 நாட்கள் வலுக்கொண்டதாய் அமையும். எனவே இடைக்காலத்தடை உத்தரவை நிவாரண மாய்க் கேட்கின்ற திறத்தவர் தனது பிராதில் அல்லது மனுவில் கட்டாணையினையும் ஓர் நிவாரணமாய்க் கேட்டிருக்க வேண்டும். அவ்வாறு கேட்கத்தவறுவது இந்நிவார ணத்தை இழக்கச் செய்துவிடும்.

## ஒரு பக்கமாக (Exparte) இடைக் கால தடையுத்தரவு வழங்கப்பட முடியுமா?

1988ம் ஆண்டு குடியியல் நடைமுறைக் கோவைக்குக் கொண்டு வரப்பட்ட 79 ஆம் இலக்க திருத்தச்சட்டத்தின் வாயிலாய் ஓர் புதிய நடபடி அறிமுகம் செய்யப்பட்டது. இதன் பிரகாரம் இடைக்காலத்தடை உத்தர வினை நீதிமன்றம் ஒரு பக்கமாய் வழங்க முடியாது. திறத்தவரின் விண்ணபத்தில் நீதிமன்றம் திருப்தி காணுமாயின் ஒரு பக்க மாய் கட்டாணையினையே முதலில் வழங் கும்.

குடியியல் நடை முறைக் கோவையின் பிரிவு 664 (1) இன்படி நீதிமன்றமானது இடைக்காலத் தடை உத்தரவை வழங்கு வதற்கு முன்பு, இடைக்காலத்தடை உத்தரவு விண்ணப்பம், சத்தியக்கடதாசி என்பவற் றை எதிர்திறத்தவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் எனக்கூறுகிறது. இதன் வெளிப் படையான அர்த்தம் யாதெனில் ஒரு பக்க மாக இடைக்காலத் தடை உத்தரவு வழங் கப்படமுடியாது என்பதாகும். எதிர் திறத்த வர், குறித்த விண்ணப்பம் பற்றி அறிந்ததும் அவர்கள் மறுமொழி அல்லது ஆட்சேபனை தெரிவிக்க முடியும்.

அதன் பிற்பாடு எதிர் திறத்தவரையும் விளங்கிய பின்னரே இடைக்காலத்தடை உத்தரவு வழங்கப்படமுடியுமா, இல்லையா என்ற முடிவிற்கு நீதிமன்றம் வர முடியும்.

அதேநேரம் குடியியல் நடைமுறை கோவை பிரிவு 664 (2) இன்படி இடைக் காலத்தடை உத்தரவை வழங்குவதற்குச் சற்றுக் காலதாமதமாகும் என நீதிமன்றம் காணுமிடத்து, குறித்த விண்ணபத்தை விளங்கி, தீர்மானிக்கும் வரைக்கும் 14 நாட்களுக்கு, கட்டாணையை வழங்க முடி யும் எனக் கூறுகிறது. குறித்த இவ் 14 நாட் காலப்பகுதியானது நீதிமன்றம் சரியானதெ னக் காணும் பட்சத்தில் மேலும் நீட்டப்பட லாம்.

## இடைக்காலத்தடை உத்தரவு விண் ணப்பம் மீது நீதிமன்ற நியாயா திக்கம்

1978 ஆம் ஆண்டின் 2ம் இலக்க நீதிபரி பாலனச் சட்டம் பிரிவு 54 இன் படி:

(1) மேல் நீதிமன்றம்

(2) மாவட்ட நீதிமன்றம்,

(3) குடும்ப நீதிமன்றம் ஆகியவற்றிற்கு

இடைக்காலத் தடை உத்தரவு நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் வழக்காளிக்கு ஏற்படும் தீங்கில் இருந்து அல்லது குறித்த செயலை அல்லது தொல்லையை நிறுத்துமாறு எதிராளிக்கு கட்டளை பிறப்பிப்பதற்கு இந்நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் உண்டு.

வழக்காளி தனது விண்ணப்பத்தில் எதிராளிக்கு எதிராக தான் தீர்ப்புப் பெறுவதற்கான சாத்தியப்பாடு அதிகம் இருப்பதாகவும், எதிராளியின் செயலினால் தனது சட்ட ரீதியான உரிமை பாதிக்கப்பட இருப்பதாகவும் நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துவாராயின் நீதிமன்றம் குறித்த நிவாரணத்தை வழங்கும்.

அதேநேரம் வழக்கின் இடைநடுவிலும் எதிராளியினால் வழக்கின் விடயப் பொருளுக்கு ஏதாவது அபாயம் இருப்பதாக வழக்காளி காணும் இடத்து குறித்த நிவாரணத்தை நீதிமன்றத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நீதிபரிபாலனச் சட்டம் பிரிவு 54 (2) இன்படி இடைக்காலத்தடை உத்தரவைப் பெறுவதற்கு வழக்காளிக்கு எவ்வுரிமைகள் உள்ளனவோ, அதேவிதமான உரிமைகள் எதிராளிக்கும் உண்டு. எதிராளி தனது மறுமொழியில் எதிர்க்கோரிக்கையொன்றை எழுப்புவாராயின், அக்கோரிக்கையின் ஊடாய், வழக்காளிக்கு எதிராய் தடை உத்தரவு பெறப்பட முடியும்.

## மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவு நியாயாதிக்கம்.

மேலே குறிப்பிடப்பட்ட 3 நீதிமன்றங்களுக்கு மேலதிகமாக மேன்முறையீட்டு நீதிமன்றமும் இடைக்காலத் தடை உத்தரவு நியாயாதிக்கத்தைக் கொண்டு காணப்படுகிறது.

எமது அரசியலமைப்புச் சட்டம் சரத்து 143 இன்படி இந்நியாயாதிக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் சாதாரணமாய் இந் நியாயாதிக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. அவசரமான சந்தர்ப்பத்தில் முதனிலை நீதிமன்றங்களுக்கு விண்ணப்பம் செய்வது சற்றுக் காலதாமதமாகும் எனுமிடத்து, முதனிலை நீதிமன்றத்திற்குச் செல்கின்றவரைக்கும் <u>மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் இருந்து</u> இடைக்காலத்தடை உத்தரவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உதாரணமாய் - மாநகர சபைக்கு எதிராய் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டுமாயின் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 307 (1) இன்படி 1 மாத அறிவிப்புப் கொடுப்பது கட்டாயமானதாகும். அதேநேரம் மாநகர சபையின் தீங்கியல் செயலைத் தடுப்பதற்கு விரும்பும் திறத்தவர், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு நேரடியாகவே சென்று தடை உத்தரவைப் பெற முடியும். குறித்த இத் தடை உத்தரவு குறித்த அறிவிப்பை வழங்கும் வரைக்குமே செல்லுபடியாகும்.

## எவ்வகையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.?

இடைக்காலத் தடையுத்தரவு நிவாரணமானது இரண்டு நிலைகளில் கோரப்படலாம்.

1. வழக்கின் ஆரம்பத்தில்
2. வழக்கின் இடைநடுவில்

குடியியல் நடைமுறைக் கோவைப் பிரிவு 662 இன் பிரகாரம் வழக்கின் ஆரம்பத்தி

லேயே இடைக்காலத்தடை உத்தரவானது ஒரு நிவாரணமாய்க் கேட்கப்படும் இடத்து அவை

**பிராது (Plaint)**
**சத்தியப்பத்திரம் (Affidatvit)**

சமர்ப்பிக்கப்பட வேண்டும். சத்தியப்பத்திரமானது விண்ணப்பதாரரினால் அல்லது குறித்த விடயத்தை அறிந்த நபரினால் செய்யப்பட்டதாய் இருக்கலாம்.

அதேநேரம் வழக்கின் இடைநடுவில் இடைக்காலத் தடை உத்தரவை ஒரு நிவாரணமாய் கோரின் அவை;

**மனு (Petition)**

**சத்தியப்பத்திரம் (Affidavit) வடிவில்** சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எனவே இரண்டு நிலைகளிலும் சத்தியப்பத்திரமானது பொதுவான ஆவணமாய் அமைகிறது. எனவே சத்தியப்பத்திரத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் குடியியல் நடைமுறைக் கோவையின் ஏற்பாட்டிற்கும், சத்தியப்பத்திரக் கட்டளைச் சட்டத்திற்கும் இணங்கி ஒழுக வேண்டும்.

**அரசுக்கு எதிராய் இடைக்காலத் தடை உத்தரவு பெற முடியுமா?**

சொற்பொருள்கோடல் கட்டளைச் சட்டச் சட்டத்தின் (Interpretation ordinance) பிரிவு 24 ஆனது இவை பற்றி விளக்குகிறது. இப்பிரிவு 24 (1) இன்படி அரசுக்கு அல்லது அமைச்சர், பிரதி அமைச்சருக்கு எதிராய் இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட முடியாது எனக் கூறுகிறது.

சொற்பொருட்கோடல் சட்டத்தின் பிரிவு 24 (2) இன்படி பொது உத்தியோகத்தருக்கு எதிராகப் பிறப்பிக்கப்படும் இடைக்காலத் தடை உத்தரவானது அரசுக்கு, அமைச்சருக்கு, பிரதி அமைச்சருக்கு உட்கிடையாய், வெளிப்படையாய் ஓர் தடையை ஏற்படுத்துமாயின் அவையும் செல்லுபடியாகாது எனக் குறிப்பிடுகிறது.

**இடைக்காலத் தடையுத்தரவைப் பெறுவதற்குத் திருப்திப்படுத்த வேண்டிய 3 தேவைப்பாடுகள்**

1. முதற்தோற்றத்தளவில் உறுதியான வழக்கொன்றை ஸ்தாபித்தல். (Prima facie case)
2. வசதிகள் சமனிலையை எண்பித்தல். (Balance of Convenience)
3. இழப்பீடு செய்ய இயலாத பாதிப்பும், இழப்பினையும் நிரூபித்தல், (Irreparable or Irremediable Loss and Dam age)

**முதற் தோற்றத்தளவில் வழக்கினை ஸ்தாபித்தல்**

இடைக்கால நிவாரணத்தைக் கோரும் திறத்தவர் பிராதின் வாயிலாக ஓர் உறுதியான வழக்கினை நீதிமன்றிற்கு எடுத்தியம்பவேண்டும். இதன்படி தான் இறுதித் தீர்ப்பிற்கு உரித்துடையவர் என்றும், இவ்வழக்கில் தான் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு அதிகம் உண்டு என்பதையும் நீதிமன்றத்தில் ஸ்தாபிக்கவேண்டும்.

Amerasekera Vs Mitsui & Company Ltd. 1993 (1) SLR 22 எனும் வழக்கில் தீர்க்கப்பட்ட விடயம் யாதெனில், "முதற் தோற்றத்தளவில் ஓர் உறுதியான வழக்கு நிலை நாட்டப்பட்டு, வழக்காளி வழக்கில் வெற்றி பெறுவதற்கான சாத்தியப்பாட்டை எடுத்தியம்பினால் அன்றி இடைக்காலத் தடை உத்தரவானது வழங்கப்பட முடியாது." என்பதாகும்.

Felix Dias Bandaranayake Vs The State Film Corporation 1981 (2) SLR 287, எனும் வழக்கில் வழக்காளி தனது உரிமை மீறப்பட்டமையினையும், முக்கிய விடயமொன்றினை, நீதிமன்றம் விளங்கி விசாரிக்க வேண்டியுள்ள தென்பதையும், தான் வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளதென்பதையும், நிலை நாட்டுவது ஒரு முக்கிய தேவைப் பாடாகும்.

Mrs. Anjela John S. Rao Vs N. bakshminarayana (1978) 2 Andh WR (340), எனும் இந்திய வழக்கில்

" The very first principal of injunction law and a Principal of universal application, is that the court should decline to grant injunction unless prima facie case is shown in the plaint and the affidavit filed by the parties".

திறத்தவரின் ஆவணங்களில் இருந்து, முழுதாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதற் தோற்ற வழக்கு இல்லாதபோது இடைக்காலத் தடை உத்தரவு வழங்கப்பட முடியாது.

மேலும் Gulam Husein Vs cohen (95/2 SLR / 365)

எனும் வழக்கிலும் இது தெளிவாய் ஆராயப்பட்டுள்ளது.

## வசதிகள் சமனிலையை எண்பித்தல்

முதற்தோற்றத்தளவில் வழக்கு ஸ்தாபிக்கப்பட்டால் அடுத்து நோக்க வேண்டிய விடயம் வசதிகள் சமனிலை யார் பக்கம் உள்ளது என்பதாகும். இதுவும் ஓர் முக்கிய கோட்பாடாகும். இதன்படி குறித்த செயல் அல்லது தீங்கு இடைக்காலத்தடை உத்தரவினால் தடை செய்யப்படாவிடின் வழக்காளி கூடுதலான பாதிப்பு அடைவார் என்பதை வழக்காளி நிறுவ வேண்டும். அதே போன்று இடைக்காலத்தடை உத்தரவு வழங்கப்பட்டால் வழக்காளியிலும் பார்க்க எதிராளிக்குக் கூடுதலான பாதிப்பு உண்டாகும் என்பதை எதிராளி நிரூபிக்க வேண்டும். இவை இரண்டிற்கும் இடையே நீதிமன்றம் செயற்பட வேண்டும். இவை இரண்டிற்கும் இடையே ஓர் சமனிலைத் தன்மையை நீதிமன்றம் ஏற்படுத்த வேண்டும்.

இவற்றில் இன்னுமொரு முக்கிய அம்சம் என்னவெனில் இடைக்காலத்தடை உத்தரவு மறுக்கப்பட்டு அதேவேளை இறுதித் தீர்ப்பு வழக்காளிக்குச் சாதகமாய் அமையின், அதேபோன்று இடைக்காலத்தடை உத்தரவு வழங்கப்பட்டு அதேவேளை இறுதித் தீர்ப்பு எதிராளிக்குச் சாதகமாய் அமையின் சிக்கல் நிலைதோன்றும். எனவேதான் இவை குறித்து நீதிமன்றம் கூடிய கவனம் எடுக்கின்றது.

Rajan and two others Vs Sellas samy 1994 (2) SLR 397 இக் கோட்பாடு தெளிவாய் ஆராயப்பட்டுள்ளது.

Yakkaduwe Pragnarama Thero Vs Minister of Education (71 NLR 506)

வழக்கில் எதிராளியினை விடக் குறைந்தளவு வழக்காளி பாதிப்படைவராயின் இடைக்காலத்தடையுத்தரவு வழங்க முடியாது எனக்கூறப்பட்டது.

## இழப்பீடு செய்ய முடியாத இழப்பும், பாதிப்பும்

வழக்காளிக்கு ஏற்படப்போகும் பாதிப்பிற்கு இழப்பீடு ஏற்ற பரிகாரமாய் இருக்கும் போது இடைக்காலத் தடை உத்தரவு

மறுக்கப்படும். இடைக்காலத்தடை உத்தரவு, வழக்காளிக்கு ஏற்படப்போகும் இழப்பீடு செய்ய இயலாத தீங்கினைத் தடுப்பதற்காகவே வழங்கப்படும். மாறாகக் குறித்த தீங்கானது இழப்பீடு வழங்கப்பட முடியுமானதாய் இருப்பின் அவை இடைக்காலத் தடை உத்தரவினால் தடுக்கப்பட முடியாது.

## கட்டாணையை அகற்றுதல்

இடைக்காலத்தடை உத்தரவு விண்ணப்பத்தை நீதிமன்றம் - முதலில் விசாரணை செய்து அதில் திருப்தி கண்டால் கட்டாணையைப் பிறப்பிக்கும். இது 14 நாட்கள் அமுலில் இருக்கும். இவை பற்றி எதிராளிக்கு அறிவிப்புக் கொடுக்க வேண்டும். 14ம் நாள் முடிவில் எதிராளி உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து கட்டாணையை அகற்றும் படி அதே நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

Senanayake Vs Pieris வழக்கின்படி, கட்டாணையொன்றை அகற்ற விரும்பும் எதிர் திறந்தவர் முதலில் அதே நீதிமன்றத்திற்கே விண்ணப்பிக்க முடியும். நேரடியாய் மேன் முறையீட்டு நீதிமன்றிற்குப் போக முடியாது.

### 14 நாள் வரை காத்திருக்க வேண்டுமா?

கட்டாணையை அகற்றுவதற்கு 14 நாள் வரை காத்திருக்க வேண்டும் எனும் அவசியம் இல்லை. கட்டாணை வழங்கப்பட்டு மறுதினமே அது அகற்றப்பட முடியும். குடியியல் நடைமுறைக் கோவை பிரிவு 664 (3) இன் படி ஓர் கட்டாணையானது

1. முக்கியமான நிகழ்வுகளை மறைத்து அல்லது
2. பிறழ்ந்து கூறி

பெறப்பட்டிருக்கிறதுஎன நீதிமன்றம் அறியும் இடத்து குறித்த கட்டாணையானது இடைநிறுத்தப்படும்.

## இடைக்காலத் தடை உத்தரவு எப்போது வழங்கப்படும்?

கட்டாணையானது ஒரு பக்கமாகவே வழங்கப்படுகிறது. சில நேரங்களில் அது அகற்றப்படலாம். அல்லது 14 நாட்களுக்கு அமுலில் இருக்கும்.

இடைக்காலத் தடையுத்தரவு வழங்குவதைத் தீர்மானிப்பதற்கு ஓர் விசாரணையை நீதிமன்றம் நடாத்தும். இவ்விசாரணை நடைபெறும் வரை கட்டாணை அகற்றப்பட்டால் அன்றி, அமுலில் இருக்கும். குறித்த விசாரணையில் வழக்காளி மேலே குறிப்பிட்ட 3 முக்கிய விடயங்களையும் திருப்திப்படுத்துவாராயின் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கப்படும். திருப்திப்படுத்த தவறுவாராயின் நிராகரிக்கப்படும். கட்டாணையும் செயல் இழந்துபோகும்.

இலங்கையில் Jinadasa Vs Weerasinghe வழக்கில் (31 NLR 33) ஏற்கப்பட்ட விடயம் எதுவெனில்,

இழப்பீடு செய்யமுடியாத பாதிப்பினை ஸ்தாபிப்பது இடைக்காலத் தடை உத்தரவைக் கேட்கும் திறத்தவரின் கட்டாய கடப்பாடாகும்.

Hydrabad Industries Ltd Vs IDAC Trading Pvt Ltd (1995 / 2 SLR 304) எனும் வழக்கில் "பாதிப்பானது மதிப்பிடக்கூடியதாய் இருப்பின் நீதிமன்றங்கள் இடைக்காலத் தடை உத்தரவை வழங்குவதில் இருந்தும் தவிர்ந்து கொள்கின்றது."

வழக்காளிக்கு ஏற்படப்போகும் பாதிப்பிற்கு இழப்பீடு பரிகாரமாய் இருக்கும் சந்தர்ப்பத்தில் இடைக்காலத் தடை உத்தரவை வழங்குவதை நீதிமன்றம் அனுமதிப்பதில்லை ஆயினும் இது ஓர் முற்று முழுதான கோட்பாடு அல்ல.

இழப்பீடு கொடுக்கலாம் என்பதற்காய் ஓர் தீங்கு நடைபெறுவதை அனுமதிக்க முடியாது. இருந்தாலும் நீதிமன்றம் விதி விலக்கான சந்தர்ப்பத்திலேயே இதைக் கடைப்பிடிக்கிறது.

இடைக்காலத் தடை உத்தரவு வழங்குவது விதியாகவும், இழப்பீடு விதி விலக்காயும் அமைகிறது.

**இடைக்காலத் தடை உத்தரவை அகற்றல்**

இடைக்காலத் தடை உத்தரவானது இரண்டு தரப்பு வாதங்களையும் விளங்கிய பின்னரே பொதுவாய் வழங்கப்படுகிறது. இத்தடை உத்தரவானது வழக்கானது முடிவுறும் வரை அமுலில் இருக்கும்.

அதேநேரம் குடியியல் நடபடிக்கோவை பிரிவு 666 இன்படி கட்டாணையானது அல்லது இடைக்காலத்தடை உத்தரவானது, திறத்தவரின் விண்ணப்பத்தின் மீது அதே நீதிமன்றத்தால் நீக்கப்படலாம் என்கிறது. இது சற்று சிக்கலான நிலைமையினைத் தோற்றுவித்துள்ளது.

ஏனெனில் கட்டாணையினைப் பொறுத்தமட்டில் அவை ஒரு பக்கமாகவே வழங்கப்படுவதால் இப்பிரிவின் கீழ் அல்லது பிரிவு 664 (3) இன் அதே நீதிமன்றிற்கு அகற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

ஆனால் இடைக்காலத்தடை உத்தரவை பொறுத்தமட்டில் இரண்டு திறத்தவரையும் விளங்கிய பின்னரே (Inter Partae) இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. எனவே இக்கட்டளையிலே திருப்தியடையாத திறத்தவர் மீண்டும் அதே நீதிமன்றத்திற்கு மனுச் செய்வது விழலானது. பிரிவு 666 தினைப் பற்றி ஜனாதிபதி சட்டத்தரணி S.A. பரதலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். "I am of the view that section 666 of the civil procedure code which was brought in by - the Act No 79 of 1988 needs scrutiny"

நடைமுறையில் இடைக்காலத்தடை உத்தரவானது மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு மனுச் செய்வதன் மூலமாகவே அகற்றப்படும். இம்மனுவானது 14 நாட்களுக்கிடையில் **(Leave to appeal)** செய்யப்படும். சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் மனுவும், சத்தியக்கடதாசியும் ஆகும். (Pettion and affidavit)

**கட்டாணை அல்லது இடைக்காலத்தடை உத்தரவு மறுக்கப்பட்டால் நிவாரணம்**

திறத்தவரின் கட்டாணைக்கான மனுவை நீதிமன்றம் மறுத்தால் அதற்கெதிராய் 14 தினங்களுக்குள் Leave to Appeal முறையில் மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு விண்ணப்பம் செய்யவேண்டும். சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் மனுவும், சத்தியக் கடதாசியும் ஆகும். (Petition & Affidavit)

இதேபோன்று இடைக்காலத்தடை உத்தரவும் மறுக்கப்பட்டால் இதே நடைமுறையே பின்பற்றப்பட வேண்டும்.

## கட்டாணை அகற்றப்பட்டதற்கெதிரான பரிகாரம்.

நீதிமன்றமானது திறத்தவரின் விண்ணப்பத்தின் பேரில் முதலில் கட்டாணையினையே வழங்கும். அவ்வாறு வழங்கப்பட்ட கட்டளையினை, எதிராளி நீதிமன்றத்திற்குத் தகுந்த காரணங்களை எடுத்துக் கூறி, நீதிமன்றம் திருப்தி கண்டால் கட்டாணை அகற்றப்படும்.

இவ்வாறு அகற்றப்பட்டதற்கு எதிராய் மனுச் செய்ய விரும்பும் திறத்தவர் கட்டளை வழங்கப்பட்டு 14 தினங்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு Leave to Appeal முறையில் மனுச் செய்யவேண்டும். சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் மனுவும், சத்தியக்கடதாசியும்.

## வாய் மொழிச்சான்று அனுமதிக்கப்படுமா?

இடைக்காலத்தடை உத்தரவு விளக்கத்தின்போது பொதுவாய் வாய்மொழிச்சான்று அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் இரண்டு திறத்தவர்களும் சம்மதித்தால் வாய்மொழிச்சான்று அனுமதிக்கப்படும். Felix Dias Bandaranayake Vs National Film Corporation.

## அதி உச்ச நம்பிக்கை (Ubrima Fides)

இடைக்காலத்தடை உத்தரவைக் கேட்கின்ற திறத்தவர் அதி உச்ச நம்பிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். சகல விடயங்களையும் தனது விண்ணப்பத்தில் தெரியப்படுத்தக் கடமைப்பட்டவராவார். உண்மையாகவும் நேர்மையாகவும் நடக்கக் கடமைப்பட்டவர்.

## கட்டுரைக்கான மூலதாரங்கள்:


1. Civil Procedure Code
2. Judicature Act No. 2 1978
3. ***Interpretation*** ordinane No. 21 of 1901 as amended by Act No. 29 of 1974
4. S.A. Parathalingam P.C "Enjoining or der and, Interium Injunction", BASL, Lawyers Handbook P 11
5. Wijeyadasa Rajapaksha. P.C "Injunc tions" Law Journal (2001) Vol. (ix) Part I Page 35
6. Kalinga Indatissa, (Attorney at Law) (Injunctions) Lawyers Hand Book by Kalinga Indatissa Page 60.
7. Sohonis, Law of Injunction.

# இந்து மதமும் விரதங்களும்

அனுறஜி செல்வநாதன்
முதலாம் ஆண்டு.

நமது மானிடப் பிறவி கிடைத்தற்கரியது. "இந்தச் சரீரம் நமக்குக்கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்பது நல்லைநகர் ஆறுமுக நாவலரின் நல்வாக்கு. இறைவனின் திருவடிகளைச் சிந்தித்தலும், வணங்குதலுமே நமது முக்கியமான கடமையாகும். இக்கடமைகளை ஆற்ற இந்துக்களது வாழ்வியலில் விழாக்களும் விரதங்களும் முக்கியமான ஒரு பங்கினை வகிக்கின்றது. சைவசித்தாந்த நோக்கில் ஆன்மா தனது இலட்சியச் சிறப்பினை அடைவதற்குரிய வழிகளில் ஒன்றாக "விரதங்களை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் மூலம் விட்டுக் கொடுத்தல், அகத்தூய்மை புறத்தூய்மை ஏற்படுத்தல், திரிகரணசுத்தியை ஏற்படுத்தல் போன்ற நற்பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம். அது மட்டுமன்றி இவற்றைப் பற்றி அறிவதன் ஊடாக அவற்றினது உட்பொருள், தத்தவம், வழிபாட்டுமுறை, பலாபலன், மரபுக் கதைகள், பாரம்பரியங்கள் என்பவை பற்றி நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

விரதம் என்பது ஒரு வகைத் தவமாகும். இவ்விரதமானது மனம் பொறிவழி போகாது நிற்பதற்காக உணவை விலக்கியேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் இறைவனை விதிப்படி உண்மை அன்போடு விஷேடமாக வழிபடல் ஆகும். விரதத்திற்கு உபவாசம் எனும் ஒரு பெயர் உண்டு. உபவாசம் என்பது பட்டினி கிடத்தல் என்ற பொருளில் இப்பொழுது வழங்கி வருகின்றது. இது தவறான கருத்து. இறைவனோடு மிகவும் நெருங்கியிருந்து வழிபடுவதும், இறை சிந்தனையோடு இருப்பதுமே உபவாசம் என்பதன் பொருளாகும்.

காலத்திற்குக் கடவுளோடு நெருங்கிய தொடர்பு உண்டு. இதனால் சில காலப் பகுதிகளில் கடவுளின் தன்மை மேலோங்கிக் காணப்படுகின்றது. இவையே விரதங்களுக்குச் சிறப்பான காலங்களாகக் கொள்ளப்படுகின்றன. விரதங்களுட் சில நித்திய விரதங்களென்றும், வேறு சில காமிய விரதங்களென்றும் அழைக்கப்படும். சில வேண்டுதல்களை இறைவன் முன்வைத்து குறிப்பிட்ட காலத்திற்கு அனுட்டித்துப் பின் உத்தியாபனம் செய்தல் காமியவிரதம் எனப்படும். எதுவித பலன்களையும் எதிர்பாராமல் அமாவாசை முதலிய விரதங்களைத் தொடர்ந்து அனுட்டித்தல் நித்திய விரதங்களாகும்.

விரத நாட்களில் அதிகாலை துயிலெழுந்து நீராடி தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து சந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்ம அனுட்டானங்களைச் செய்தல் வேண்டும். விரத நாட்களில் திருக்கோயில்களில் இயன்றமட்டும் நெய்விளக்கேற்றல் வேண்டும். விரத தினத்திற்கு அடுத்த நாட்காலை சூரியன் உதித்து ஆறு நாழிகைக்குள் பாரணை செய்யவேண்டும். பாரணையில் மகேசுவர பூசை மிக இன்றியமையாதது. விரத பலனைப் பெறுவதற்கு ஒவ்வொரு விரதத்திற்கும் அனுட்டிக்க வேண்டிய கால எல்லை உண்டு. உரிய காலம் முடிந்ததும் விரத உத்தியாபனம் செய்து விரதத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். விரதத்தைக் கைக் கொள்பவர் சுத்தபோசனமுடையோராயும், தீட்சைபெற்றவர்களாயும், ஆசார சீலர்களாயும் இருத்தல் வேண்டும். இவ்விரதங்களில் மிகவும் சிறப்பான விரதங்களாக பிரதோஷம், சிவராத்திரி, நவராத்திரி, கந்த சஷ்டி, திருவெம்பாவை போன்றவை கடைப்பிடிக்கப்படுகின்றன.

இந்த வகையில் இந்துக்களால் அனுஷ்டிக்கப்படும் ''பிரதோஷ விரதம்'' பற்றி நோக்கும் போது இது சிவனுக்குரிய விரதங்களில் ஒன்றாகும். பிரதோஷம் என்பதன் பொருள் ''இராக்காலத்திற்கு முன்'' என்பதாகும். வளர்பிறை தேய்பிறையாகிய இரண்டு பருவத்தும் 13ம் நாள் ''திரயோதஷிதிதி'' எனப்படும். அன்றுமாலை சூரியன் மறைவதற்கு முன் 1 1/2 மணி நேரத்திற்குப் பின்பு உள்ள மூன்று மணி நேரமே ''பிரதோஷ காலம்'' எனக் கணிக்கப்படுகின்றது. சிவபெருமான் நஞ்சினை உண்டு தேவர்களைக் காத்தருளிய வளர் பிறையும் திரயோதஷியும் சனிக்கிழமையும் கூடிய நாட்களே பிரதோஷ விரத காலமாகக் கொள்ளப்படுகின்றது. இந்நாளிலே பகல் உணவின்றி சூரியன் மறைவதற்கு முன்பு நீராடி சிவபூஜை செய்து கோயிலில் நந்தியின் இரு கொம்புகளுக்கிடையே வழிபாடு செய்தல் வேண்டும். இதில் சனிப் பிரதோஷமே சிறப்பானதாகும்.

பிரதோஷ விரதத்தைப் போன்றே ''சிவராத்திரி'' விரதமும் கொள்ளப்படுகின்றது. இது மாசி மாதத்தில் வரும் தேய்பிறைக் காலமாகிய அபரபட்சத்தில் 14ம் நாள் இரவு சதுர்த்தஷி கூடிய நாளிலே வரும் விரதமாகும். சிவபெருமான் சோதிப்பிளம்பாகத் தோன்றிய இரவே ''மகா சிவராத்திரி'' தினமாகக் கொண்டடப்படுகின்றது. இவ் விரதத்தினை அனுஷ்டிக்கும்போது முதல் நாள் ஒருவேளை உணவு உண்டு, சிவராத்திரி அன்று உபவாசம் இருந்து, நித்திரை கொள்ளாது சிவத்தியானம், சிவபூஜை என்பன மேற்கொள்ளவேண்டும். ஆன்மார்த்தமாக சிவபூஜை செய்வோர் நான்கு ஜாமங்களிலும் அபிஷேகம் செய்தல் முறை ஆகும்.

அடுத்ததாக இந்துக்களால் கடைப்பிடிக்கப்படும் விரதங்களில் ஒன்றாக விளங்கும் ''ஏகாதசி விரதம்'' விஷ்ணுவிற்குரிய விரதமாகும். இதைக் கடைப்பிடிப்பவர் உபவாசம் இருந்து இரவு முழுவதும் நித்திரை செய்யாது இருத்தல் வேண்டும. மேலும் துவாதஷித்திதி முடியும் முன்பு ''பாராயணம்'' செய்தல் வேண்டும். இல்லற நிலையில் வாழ்வோர் வளர்பிறையில் வரும் ஏகாதஷி திதியினையும், வானப்பிரஸ்தரும், சந்நியாசரும் தேய்பிறையில் வரும் ஏகாதஷியினையும் அனுஷ்டித்தல் வேண்டும். பன்னிரு மாதங்களில் ஆடி தொடக்கம் கார்த்திகை ஈறாகவுள்ள ஏகாதஷி நாட்களே சிறப்பான வையாகும்.

அடுத்து ''கந்த சஷ்டி'' விரதமும் சிறப்பானதாகக் கொள்ளப்படுகின்றது. இது ''முருகனுக்குரிய விரதமாகும் - இங்கு ''கந்தசஷ்டி'' என்பதன் பொருள் முருகனுக்குரிய ஆறாவது நாள்'' என்பதாகும். இது ஐப்பசி மாதம் வளர்பிறை பிரதமை திதி தொடக்கம் சஷ்டி திதி முடியவுள்ள ஆறு நாட்களும் அனுஷ்டிக்கப்படும். இவ்விரதத்தைத் தொடர்ந்து ஆறு வருடங்களாக இடைவிடாது அனுஷ்டிக்கவேண்டும்.

அடுத்து சக்தி விரதங்களில் ஒன்றாக விளங்கும் ''நவராத்திரி'' விரதமானது புரட்டாதி மாதத்தில் வருகின்ற வளர்பிறைக் காலத்தில் பிரதமை முதல் நவமி ஈறாகவுள்ள ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படும். இது ''மகாநவமி'' எனவும் அழைக்கப்படும். மகிடாசுரனை துர்க்கை வதை செய்த தினத்தையே நவராத்திரி குறித்து நிற்கின்றது. இவ்விரதத்தின் தத்துவம் பற்றி நோக்கும் போது சக்தியை ஒன்பது நாள் வழிபட்டு எமது உள்ளத்திலுள்ள அசுரத்தனத்தை நீக்குவதை இது குறிக்கின்றது.

இவ்வாறாக விரதங்கள் இந்துக்களது வாழ்வியலில் முக்கியத்துவம் பெறுகின்ற அதேவேளை அவர்களுடைய ஆன்ம ஈடேற்றத்திற்கு துணை நின்று இந்துக்களின் வாழ்க்கையை செழுமைபெற வைக்கின்ற தன்மையினை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

# பிரார்த்தனை

## "உடல் வளர்ச்சிக்கு உணவு உள வளர்ச்சிக்குப் பிரார்த்தனை"

*ஜெ. கஜநிதிபாலன்*
*1ம் வருடம்*
*இலங்கைச் சட்டக்கல்லூரி*

உலகில் பல சமயங்கள் இருக்கின்றன. சமயங்களைப் பழக்கத்தில் கொண்டு வருவதற்குப் பல முறைகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. அவைகளுள் பிரார்த்தனை என்பது மிக முக்கியமானது. பிரார்த்தனை என்னும் நெறி எந்த மதத்திற்குரியது, எதற்கு உரியதல்ல என்று பாகுபடுத்த முடியாது. கடவுளே உலகாகத் தோற்றிக் கொண்டிருக்கிறார் என்று சொல்லும் அத்துவைதமதத்திலும் பிரார்த்தனைக்கு இடமுண்டு. மனிதனுடைய இயல்பிலேயே அது அமைந்திருக்கின்றது என்று இயம்புவது பொருந்தும். குழந்தை ஒன்று தன்தாயின் உதவியை நாடி அழுவது போன்று, மனிதன் தன்னிலும் மிக்கதொரு பொருளிடத்திலிருந்து அல்லது சக்தியினிடத்திலிருந்து உதவியைப் பரிந்து வேண்டுகிறான். அறிவிலும் ஆற்றலிலும் தன்னிலும் மிக்கதொன்று இயற்கையில் ஊடுருவியோ அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்டோ இருக்கின்றது என்ற நம்பிக்கை மனிதனிடத்து உறுதி பெற்றிருக்கின்றது. அப்பெரிய பொருளோடு தொடர்பு பூணவும், அதன் உதவியைப் பெறவும் அவன் அவாவுறுகிறான். அங்ஙனம் மேலான ஒன்றின் துணையை நாடியிருப்பதற்குப் பிரார்த்தனையென்று பெயர். பிரார்த்தனை பண்ணும் பாங்கு இயல்பாகவே மனிதனுக்கு உண்டாகிறது. பிறர் செய்வதைப் பார்த்து அது அவனுக்கு வந்து அமைவதுண்டு. பிரார்த்தனை பண்ணும் பாங்கு எவ்விதத்தில் வந்தமைந்தாலும் தனது நல்வாழ்வுக்கு அது முற்றிலும்இன்றியமையாதது என்று மனிதன் உணர்கிறான்.

மனம் உடையவன் மனிதன். மனதைக் கருவியாக வைத்துக் கொண்டே மனிதன் மனிதனோடு இணக்கம் ரொகள்கின்றான். ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்குப் பக்கத்தில் வாழ்ந்து வருவதால் அவன் அண்டை வீட்டுக்காரன் ஆகிவிடமாட்டான். பக்கத்தில் வாழ்ந்து வருவதற்கிடையிலேயே மனவேற்றுமையை முன்னிட்டு ஒருவன் மற்றொருவனுக்கு வேற்றான் ஆகிவிடுகிறான். பக்கத்தில் வாழும் வேற்றானுக்கும் தனக்கும் வெகுதூரம் என்றே அவன் இயம்புகின்றான்.

ஆனால் வெகு தூரத்தில் வாழ்ந்து வரும் மற்றொருவனோடு மன ஒற்றுமை உண்டாகிவிட்டால், அவன் மிக நெருங்கியவன் ஆகிவிடுகிறான். இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே பிரார்த்தனை என்னும் ஆன்மசாதனம் அமைந்துள்ளது. மனத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒரும் தன்மை ஒரு பகுதி; உணரும் தன்மை மற்றொரு பகுதி. ஓர்-தல் வாயிலாகவும், உணர்தல் வாயிலாகவும் மனிதன் தெய்வத்தோடு இணக்கம் கொண்டால், அது பிரார்த்தனை என்னும் பெயர் பெறுகின்றது. தான் அடைய விரும்புவதைப் பிரார்த்தனையின் வாயிலாக மனிதன் தெய்வத்திடமிருந்து ஏற்க முயலுகிறான்.

பிரார்த்தனை பண்ணாத மக்களே உலகில் இல்லை. ஏதேனும் ஒரு விதத்தில் யாதே

னும் ஒரு சக்திக்கு மனிதனுடைய பிரார்த்தனை செலுத்தப்பட்டு வருகிறது. அந்தப் பிரார்த்தனைகளையெல்லாம் பொதுவாக நான்கு வகைத் தலைப்புக்களின் கீழ்க் கொண்டு வந்து சேர்க்கலாம். துயருறுவோர் செய்கின்ற பிரார்த்தனைகளெல்லாம் ஒரு தலைப்பில் வந்து அடங்குகின்றன. துயரப் படாத மனிதனை உலகில் காண முடியாது. தனக்கு வரும் இன்னல்களைச் சமாளிக்க அவன் தானே முயலுகிறான். அப்படி முயலுதற்கிடையில் தன்னிலும் மேலானதும் தனக்குக் கட்புலனாகாததுமான தெய்வத்திடம் உதவியை வேண்டி அவன் விண்ணப்பிக்கிறான், நோய்வாய்ப்பட்டிருப்பவன் தனது நோயை நீக்குவதற்கு மருத்துவருடைய சிகிச்சையைப் பெறுவதோடு நின்றுவிடுவதில்லை. தோன்றாத்துணையாயிருக்கும் தெய்வத்திடத்திலும் தனது குறையைக் கூறி, அதை நீக்கி வைக்குமாறு அவன் வேண்டுகின்றான். தன்னைத் துன்புறுத்தும் கொடிய பிராணியை அல்லது பொல்லாத பகைவனை ஒழித்துவிட வேண்டுமென்று கடவுளிடம் மனிதன் பரிந்து கேட்டுக்கொள்கிறான். பகைவர்களிடமிருந்தும் ஆபத்துக்களினின்றும் தங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று மக்கள் கூக்குரலிட்டுச் செய்த வேண்டுதல்கள் சிறந்த இலக்கியங்களாகப் பல சமுதாயங்களில் அமைந்துள்ளன. பிணியைப் போக்குவதற்காகப் புரியும் பிரார்த்தனைகள் யாவும் ஒரு தலைப்பில் வந்து சேர்கின்றன. இது பிரார்த்தனையின் முதற்படியாகிறது.

இயற்கையின் கண் உள்ள இனியவைகளையும் பயன்படுபவைகளையும் தனக்கு உரியவைகளாக ஆக்கிக் கொள்ளுதற்கு மனிதன் முயலுகிறான். இந்த முயற்சியில் வெற்றியும், தோல்வியும் மாறி மாறி அமைகின்றன. தனக்கு வெற்றியே உண்டாக வேண்டுமென்றும் தோல்வி வந்து விடலாகாதென்றும் மனிதன் தெய்வத்திடம் வணங்கிக் கேட்டுக் கொள்கின்றான். ஆக்கம் நிறைந்த வாழ்க்கைக்குத் தனம், தானியம் போன்ற செல்வங்கள முற்றிலும் தேவையாயிருக்கின்றன. அதற்கு அடிப்படையாகப் பருவ மழையும் பூமியில் நல்ல விளைவும் உண்டாகவேண்டும். அதற்கு மேல் தனக்குத்திட்பமும், தீர்க்காயுளும் தேவை. உற்றார் உறவினரும் மண்ணுலக வாழ்க்கைக்கு இன்றியமையாதவர்கள். இவை யாவையும் குறித்து மனிதன் இறைவனிடம் விண்ணப்பிக்கிறபொழுது அரும்பொருளைப் பற்றிய பிரார்த்தனையாகிறது. இது இரண்டாவது படியில் இடம் பெறுகிறது.

இந்த இரண்டு படிகளிலும் உள்ள பிரார்த்தனைகளைக் கடவுளோடு ஒப்பந்தம் பண்ணுகிற பாங்கில் செய்துவருகிறவர்களும் உளர். தங்கள் துன்பத்தை அகற்றி வைத்தால் அதற்குக் கைமாறாகக் கடவுளுக்கு ஏதேனும் கைங்கரியம் பண்ணி வைக்க அவர்கள் முடிவுகட்டுகின்றனர். தாங்கள் விரும்புகின்ற பொருளையும் போகத்தையும் தெய்வம் தங்களுக்கு நல்கியருளினால் அதைக் குறித்து நன்றி செலுத்துகிற பாங்கில் தாங்கள் ஏதாவது பிரதியுபகாரம் தெய்வத்துக்கோ அல்லது சிறு தெய்வங்களுக்கோ செய்துவைக்கத் தீர்மானிக்கின்றனர். இதற்குக் காமியப் பிரார்த்தனையென்று பெயர். கோரிக்கையென்றும் இதைக் கூறுவார்கள். காமியப் பிரார்த்தனை பண்ணுகின்றவர்களாகவே உலகில் பெரும்பான்மையானோர் இருக்கின்றனர். தங்களுக்குப் பிடிக்காத மனிதர்களையும் எதிரிகளையும் குறித்து அவர்கள் தெய்வத்திடம் பண்ணும் பிரார்த்தனை மிக விசித்திரமானது. எதிரிகளைக் கொன்று விட வேண்டும், அவர்கள் கண்ணைப் பிடுங்கிவிட

வேண்டும். செல்வத்தைச் சிதைத்துவிட வேண்டும், அவர்களுக்கு நோயை உண்டு பண்ணிவிட வேண்டும் இப்படியெல்லாம் அவர்கள் மன்றாடிக் கேட்பர். மெய்ப் பொருள் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றவர்கள் உலகில் இருக்கின்றனர். அவர்களும் தெய் வத்திடத்துப் பிரார்த்தனை பண்ணுகின் றனர். ஆனால் அவர்கள் செய்யும் பிரார்த் தனை இன்பத்தைப் பெறுதலையும் பொரு ளைப் பெருக்குதலையும் அடிப்படையாகக் கொண்டதன்று. கடவுளோடு நெருங்கி உற வாட அவர்கள் விரும்புகின்றனர். கடவுளின் சொரூபத்தை மேலும் மேலும் ஆழ்ந்து அறிந்து கொள்ள அவர்கள் எத்தனிக்கின் றனர். அதற்கேற்றவாறு ஞானமும் பக்தியும் தங்களுக்கு அதிகரித்தல் பொருட்டு அவர் கள் பிரார்த்தனை பண்ணுகிறார்கள். உலகப் பற்று ஒழியும்போதே தெய்வப்பற்று ஓங்கு கிறது. அற்ப ஆசைகளும் உலகப் பற்றும் தங்கள் உள்ளத்தினின்று அகலவேண்டு மென்று அன்னவர் விண்ணப்பிக்கின்றனர். பக்தர்கள் இயற்றி உள்ள நூல்களில் அத்த கைய பிரார்த்தனைக்குச் சான்றுகளை ஏராள மாய்க் காணலாம். நன்னெறியைக் கடைப் பிடிக்கின்றவர்கள் நல் வாழ்வுக்கு ஏதுவாகிய இத்தகைய பிரார்த்தனைகளையே சிறந்த வையென ஏற்றுக்கொள்கின்றனர். இவை கள் உயர்வில் மூன்றாவது படியில் ஏறி நிற்கின்றன.

பிரார்த்தனைகளுள் தலையாது மற் றொன்று உண்டு. மெய்ப்பொருளாகிய கட வுளை ஏதேனும் ஒரு விதத்தில் சுவானுபூ தியில் உணர்ந்தவர்கள் செய்யும் பிரார்த் தனை அது. தங்களுக்காக என்று எதையும் விண்ணப்பம் செய்கின்ற பாங்கில் அவர்க ளுடைய பிரார்த்தனை அமைவதில்லை. மெய்ப்பொருளின் பெருமைகளைத் தெளி வுபட விளக்குதல் பிரார்த்தனையின் முக்கிய மான பகுதியாகும். பெருமை பொருந்திய அப்பெரிய பொருளிடத்துத் தங்களுடைய மனம் யாண்டும் உறுதியாக நிலைத்து நின்றுவிட வேண்டுமென்று அவர்கள் ஆழ்ந்து வேண்டுகின்றனர். கடவுளின் பெருமையை ஓயாமல் எண்ணியெண்ணி, அவர்களுடைய எண்ணமே கடவுள் மய மாய் மாறியமைந்து விடுகிறது. எண்ணத் தை அங்ஙனம் கடவுளிடம் விடுவதைப் பிரார்த்தனை என்று ஞானிகள் இயம்புகின் றனர். மனத்துக்கு வேகம் மிக உண்டு. தூய மனத்துக்கு ஆற்றலும் அதிகரிக்கின்றது. ஆழ்ந்து அது தெய்வத்தின் சொரூபத்தி லேயே மூழ்குமாகில் தெய்வ சொரூபம் அதற்கு வந்துவிடுகிறது. அனுபூதி என்பது அதுவே பிரார்த்தனையின் விளைவாக ஞானிக்கு அது உண்டாகிறது.

நாங்கள் எல்லோரும் பிரார்த்தனை செய்து மனதைப் பண்படுத்தி அதன் வழி சென்று அனுபூதியடைந்து ஞானியாக வேண்டும் என்று இல்லை. பிரார்த்தனை மூலம் மனதைப் பண்படுத்தி முழுமனித னாக முயற்சி செய்யுங்கள். ஒவ்வொரு மனிதனும் உணர்வுகள் மூலம் இணைந்து உறவுகளைப் பலப்படுத்துங்கள்: மனித உணர்வுகளே மிகப் பெரிய தொடர்பாடல் சாதனம், மனங்கள் மாறுபாடுகள் இல்லாமல் இணைந்து கொள்ளக்கூடிய ஒரே -யொரு எல்லையற்ற வலைப்பின்னல்:

"Each mind is connected with every other mind. And each mind, Wherever it is located, is in actual communication with the whole world."

# சிறுவர் துஷ்பிரயோகமும் அதன் விளைவுகளும்

*T. சரவணராஜா,*
*இறுதி வருடம்,*
*இலங்கை சட்டக்கல்லூரி.*

*இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்*
*இன்றைய தலைவர்கள் நேற்றைய சிறுவர்கள்.*

சிறுவர்கள் என்னும் போது சட்டத்தின் படி 18 வயதிற்குக் குறைந்த சிறுவன், சிறுமியைக் குறிக்கும். மனித வாழ்க்கையில் மிக முக்கியமான பராயமாக இச்சிறுவர் பராயம் கணிக்கப்படுகிறது. இச்சிறுவர் பராயத்தில் தான் ஒரு மனிதனது வாழ்க்கைக்கான உறுதியான அடித்தளம் இடப்படுகிறது. இவ் அடித்தளம் உறுதியாக இல்லாது போனால், அம்மனிதனது வாழ்க்கையே ஆட்டம் கண்டு இடிந்து விழுந்து சின்னா பின்னமாகி விடுகிறது. அந்த வகையிலே இவ்வடித் தளத்தை உறுதியானதாக ஏற்படுத்திக் கொடுக்கும் கடமை ஒவ்வொரு பெற்றோருக்கும், சமூகத்துக்கும், அரசுக்கும் உரியது. இவ் உறுதியான அடித்தளமே சிறுவர் உரிமைகளாகும்.

அந்தவகையில் எல்லா உரிமைகளும் விதிவிலக்கின்றி எல்லாச் சிறுவர்களுக்கும் உரியது. ஒவ்வொரு பிள்ளைக்கும் அதன் உய்வு, பாதுகாப்பு, மேம்பாடு என்பன பிறப்புரிமைகளாகும். சாதி, நிறம், பால், மொழி, சமூக பூர்வீகம், மதம், தராதரம் போன்ற எத்தகைய பாகுபாடும் சிறுவர்களுக்குக் காட்டப்பட முடியாது. ஒவ்வொரு சிறுவரும் தனது உடல், உள ஆன்மீக, ஒழுக்க, சமூக, கலாச்சார மேம்பாட்டுக்கு இசைவான வாழ்க்கைத் தரத்தைப் பெறும் உரிமையுடையவர்களாவர். கல்விபயிலும் உரிமை எல்லாச் சிறுவருக்கும் உண்டு. சிறுவர்களது ஆளுமை, திறமை, உடல், உள ஆற்றல்களை முழுமையாக விருத்தி செய்து அவர்களைத் தயார்படுத்துவதற்கு கல்வி மிக முக்கியமானது. ஆகவே ஆரம்பக்கல்வியைக் கட்டாயமாகவும், இலவசமாகவும் எல்லாச் சிறுவர்களுக்கும் கிடைப்பதை உறுதி செய்வது அரசின் கடமையாகும் சுகாதாரப் பராமரிப்பைப் பெறும் உரிமை, கருத்து வெளியிடும் உரிமை, சிந்தனை மனசாட்சி உரிமை, துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு என்பவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை, பொழுது போக்கு, விளையாட்டு கலை, கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் உரிமை, வேலைப் பளுவிலிருந்தும், போதைப் பொருள் பாவனை, பிள்ளைகளைக் கடத்தல் விற்பனை செய்தல் ஆகியவற்றிலிருந்தும் பாதுகாப்புப் பெறும் உரிமை, ஆயுதப்பிணக்குகளிலிருந்தும், சித்திரவதை, துன்பம், உளவியல் பாதிப்பு ஆகியவற்றிலிருந்தும் பாதுகாப்புப் பெறும் உரிமை ஒவ்வொரு சிறுவருக்கும் உண்டு.

தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் இவ்வனைத்து உரிமைகளும் ஒவ்வொரு சிறுவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தாலும் கூட, இவ்வுரிமைகள் அநேக சிறுவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதே நிதர்சனம்.

எமது நாட்டை எடுத்துக் கொண்டால் சிறுவர்களின் இன்றைய நிலைமை மோச மானதாகவே உள்ளது. உள்நாட்டு யுத்தம், வறுமை, வேலை வாய்ப்பின்மை, ஜனத் தொகைப் பெருக்கம் இதற்கு முக்கிய கார ணங்களாகும். வடகிழக்கிலே நடைபெற்ற யுத்தம் காரணமாகப் புலம் பெயர்ந்த சிறுவர் களினதும், அகதி முகாம்களிலே அடைபட் டுக் கிடக்கும் சிறுவர்களினதும், எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது, இவர்க ளது கல்வி, சுகாதார உரிமைகள் மறுக்கப் பட்டு, உடல், உள ரீதியான பாதிப்பிற்குள் ளாகியுள்ளார்கள். அதுமட்டுமல்ல யுத்தத் தின் நேரடித் தாக்கங்களுக்குள்ளாகி உயிர் வாழும் உரிமை பறிக்கப்பட்டவர்கள் எத்த னை சிறுவர்கள்? அங்கவீனர்களாகிய சிறு வர்கள் எத்தனைபேர்? பெற்றோரை இழந்து அநாதைகளாகிய சிறுவர்கள் எத்தனை பேர்? அநேகர்.

இதேபோல் வறுமையின் காரணமாக சிறுவர்கள் வீடுகளிலும், கடைகளிலும், தொழிற்சாலைகளிலும், தோட்டங்களிலும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இச்சிறுவர்கள் அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டவர்களாகவே வாழ்கின்றார் கள். உதாரணமாக கொழும்பு போன்ற நகரங் களில் உள்ள செல்வந்த குடும்பங்களின் பிள்ளைகள் கைகளை வீசியபடி பாடசா லைக்குச் செல்வதையும், அவர்களின், புத்த கப் பைகள், பொருட்களைச் சுமந்தபடி வே லைக் காரப்பிள்ளை அவர்களின் பின்னால் செல்வதையும் நாம் அன்றாடம் காணலாம். வேலைக் காரப்பிள்ளைகள் அவர்களின் புத்தகப் பைகளையும் பொருட்களையும் மட்டும் சுமக்கவில்லை, தமக்கும் பாடசா லைக்குப் போக முடியாதா? கல்வி கற்க முடி யாதா? என்ற ஏக்கப் பெருமூச்சுகளையும் சுமந்தபடியே தான் செல்கின்றார்கள்.

குடும்ப சூழல் காரணமாகவும், வறுமை யின் காரணமாகவும் வேலைக்கு வரும் பிள்ளைகள், வேலை செய்யும் இடங்களில் எஜமானர்களினால் கொடுமைகளுக்கும், சித்திரவதைகளுக்கும், பாலியல் வல்லுற வுகளுக்கும் உள்ளாக்கபப்ட்டு இளம் வயதி லேயே நடைப் பிணங்களாக மாற்றப்படு கின்றார்கள். இவை பற்றிய செய்திகளை நாம் அன்றாடம் பத்திரிகைகளில் பார்க்கின் றோம்.

இதேபோல் சிறுவர்கள் கடைகளிலும் காரியாலயங்களிலும், தொழிற்சாலைகளி லும், பெருந்தோட்டங்களிலும் தொழிலாளர் களாகப் பணிபுரிகின்றார்கள். புத்தகம் ஏந்த வேண்டிய பிஞ்சுக்கரங்களினால் ஓய்வு உறக்கம் இன்றி வேலை வாங்கப்பட்டு அதற்கேற்ற ஊதியமும் கொடுக்கப்படுவ தில்லை. அத்துடன் போதிய பாதுகாப்பு, சுகாதார மருத்துவ வசதிகளின்றி இச்சிறுவர் கள் பணிபுரிவதால் விரைவிலேயே பலவித நோய்களால் தாக்கப்பட்டு இளம் வயதி லேயே நோயாளிகளாகவும், சக்தியற்றவர்க ளாகவும் மாறுகின்றார்கள்.

நகரங்களின் ஜனத்தொகை வளர்ச்சி வறுமை, போன்ற காரணிகள் தெருவோரச் சிறுவர்களை உருவாக்குகின்றது. இவர்க ளுக்கு, கல்வி, சுகாதாரம் போன்ற உரிமை கள் மறுக்கப்படுகின்றது. இதனால் இவர்கள் சமூகவிரோத செயல்களில் ஈடுபடுபவர்க ளாகவும், போதைப் பொருள் பாவனையாளர் களாகவும், அந்நியர் எடுப்பார்கை பிள்ளைக ளாகவும், வேலைக்காரர்களாகவும் மாறுகின் றார்கள்.

சர்வதேச ரீதியாக சிறுவர்களின் இன் றைய நிலைமையை எடுத்துக் கொண்டால்

உலகின் பலகோடி சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லவோ, விளையாடவோ, கலை, கலாசார, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவோ, சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ளவோ, முடியாதவர்களாக இருக்கின்றார்கள். சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் கணிப்பின்படி வளர்முக நாடுகளில் 5 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட 250 மில்லியனுக்கும் அதிகமான சிறுவர்கள் தொழிலாளர்களாகப் பணி புரிகின்றார்கள். கடந்த தசாப்த காலத்தில் 20 இலட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் ஆயுதப் பிணக்குகளில் கொல்லப்பட்டுள்ளார்கள் அத்துடன் 50 இலட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் காயமடைந்தும் அங்கவீனமடைந்தும் உள்ளனர் என ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய (Unicef) அறிக்கை கூறுகின்றது.

உலகில் 15 வயதிற்குட்பட்ட 4.3 மில்லியனுக்கும் அதிகமான பிள்ளைகள் எயிட்ஸ் நோய்க்குப் பலியாகியுள்ளார்கள். 1.4 மில்லியனுக்கும் அதிகமான சிறுவர்கள் எயிட்ஸை உருவாக்கும் எச்.ஐ.வி. வைரசுடன் வாழ்கின்றார்கள். பெற்றோர் எயிட்ஸ் நோயினால் இறந்ததன் காரணமாக 13 மில்லியனுக்கும் அதிகமான சிறுவர்கள் அநாதைகளாகியுள்ளார்கள். 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களில் 20 சதவீதமானவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது மட்டுமன்றி வறுமை, பஞ்சம், வெள்ளம், பூமியதிர்ச்சி, தொற்றுநோய், போதைப் பொருள் பாவனை காரணமாகவும் மில்லியன் கணக்கான சிறுவர்களின் உரிமைகள் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவர்களின் இந்த அவல நிலையும் உரிமை துஷ்பிரயோகமும் தடுக்கப்படாவிட்டால் விளைவுகள் விபரீதமாகும். சிறுவர் உரிமைகள் துஷ்பிரயோகத்தினைத் தடுப்பதற்கு ஏற்படும் செலவினை விடப் பன்மடங்கு பணத்தினை சிறுவர் துஷ்பிரயோகத்தினால் ஏற்படும் விளைவுகளுக்குச் செலவு செய்ய நேரிடும். எதிர்கால மனித இனம் அழிவிலிருந்து பாதுகாக்கபப்டவேண்டும். உடலாலும், உள்ளத்தாலும் உயர்ந்த பிரஜைகளாலேயே குடும்பத்துக்கும், சமூகத்துக்கும், நாட்டுக்கும், நன்மை செய்ய முடியும். இதனைக் கருத்திற் கொண்டே எமது நாட்டிலும், சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எமது அரசியலமைப்புச் சட்டத்தில் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் பிரிவுகள் 10, மற்றும் 12 (1) ஆகியவை சிறுவர்களின் உரிமையை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 10 ஆனது 14 வயதிற்குக் குறைந்த சிறுவர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதைத் தடை செய்கிறது. அதேபோல் பெண்கள், இளைஞர், பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தல் சட்டத்தின் பிரிவுகளான 7 (2) (a), 9(1), 9(2)(a) 13, 15, 18(1), 59 (1) ஆகியவை சிறுவர்களின் உரிமை தொடர்பாக வலியுறுத்துகின்றன, இதன் 1984ம் திருத்தச் சட்டத்தின் பிரிவுகள் 2 (1), 7(1) ஆகியவையும் சிறுவர்களின் உரிமைகளை வலியுறுத்துவதற்காக கொண்டு வரப்பட்டது. இச்சட்டமும் 14 வயதிற்குக் குறைந்த சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுக்கிறது.

தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 67,68,69,70 ஆகியவை சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளதைக் காணலாம். இதே போல் இன்னும் பல சட்டங்கள் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காகவே சிறுவர் சாசனமும் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக ஐ.நா. சபை சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எடுத்தும் வருகிறது. அந்த வகையிலே ஐ.நா. சபையின் சிறுவர்களுக்கான முகவர் நிலையமான ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (Unicef) பல மகத்தான பணிகளைச் செய்து வருகின்றது. உலகெங்கிலும் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்குப் பாடுபடும் அதேவேளை சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டு மனிதாபிமான நிவாரணம் பெறும் பொருட்டு அவலக் குரல் எழுப்பும் மில்லியன் கணக்கான சிறுவர்களுக்கு நிவாரணங்களையும் வழங்கி வருகிறது.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு 54 உறுப்புரைகளைக் கொண்ட சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் (Convention of the right of the child) ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. அது போல சிறுவர் தொடர்பிலான உலக உச்சி மாநாடு ஐ.நா. சபையினால் நடத்தப்பட்டுள்ளது. இது மட்டுமன்றி சிறுவர் துஷ்பிரயோகத்தினைத் தடுப்பதற்குப் பிள்ளைகளின் நலன் காக்கும் உலகளாவிய இயக்கம் ஒன்று சர்வதேச ரீதியாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தில் ஒவ்வொருவரும் இணைந்து தங்களது பங்களிப்பைச் செய்யலாம். இது தொடர்பிலான மேலதிக விபரங்களை htt:// www.glo balmovement for children. org என்னும் மின்னம்பலத்தில் (website) பெற்றுக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் எத்தனை தான் சட்டங்கள் போட்டாலும், தண்டனைகள் கொடுத்தாலும், சிறுவர் சாசனம், சிறுவர் சமவாயங்கள் நிறைவேற்றப்பட்டாலும், சிறுவர் உச்சி மாநாடுகள் நடத்தப்பட்டாலும் கூட சிறுவர் உரிமைகள் தினமும் மறுக்கப்பட்டே வருகிறது. தினமும் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் தமதுயிரை சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாகப் பறிகொடுக்கின்றார்கள். சிறுவர் உரிமைகளை மதிப்பது அரசினது கடமை மட்டுமல்ல, ஒவ்வொரு தனிமனிதனதும் கடமை, மனித நேயம், அன்பு, இரக்கம், கருணை ஆகியவற்றை சிறுவர்கள் மீது செலுத்தி சிறுவர்களை எந்த வகையான பாகுபாடுகளிலிருந்தும், பாரபட்சம், ஏற்றத் தாழ்வுகளிலிருந்தும் காக்க வேண்டும். அவர்களது உரிமைகளை மதிக்கவேண்டும். அதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்போதுதான் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்து சிறந்த பிரஜைகளை உலகில் உருவாக்கலாம்.

# சட்ட ஆட்சி (Rule of Law)

ஜெயசிங்கம் ஜெயரூபன்
இடை நிலையாண்டு
இலங்கைச் சட்டக் கல்லூரி

**சட்டவாட்சிக் கோட்பாடு உருவாகக் காரணம்**

பிரித்தானியாவில் அன்றைய காலகட்டத்தில் சட்டம், நீதி ஆகியவற்றின் ஒட்டுமொத்த உருவமாக அரசன் காணப்பட்டான். நீதியின் பிறப்பிடம் அவனே. நேர்மையின் பிறப்பிடமும் அவனே. அரசன் தவறு, தீங்கு செய்யாதவன் அல்லது செய்ய இயலாதவன் என்று கருதப்பட்டான். அரசனைக் கடவுளுக்கு நிகராக மக்கள் கருதினர்.

17ம் நூற்றாண்டு மக்களின் கல்வி அறிவையும் தொழிலறிவையும் சட்ட அறிவையும் திறந்தது. அரசனின் செய்கைகளை மக்கள் ஏன்? எதற்கு? எப்படி? என்று கேள்வி கேட்க ஆரம்பித்தனர். சிந்திக்கத் தலைப்பட்டனர்.

முதலாம் ஜேம்ஸ் என்ற அரசன் நீதியரசராக இருந்த சேர் எட்வர்ட் கோக் என்பவரைப் பதவி நீக்கம் செய்தார். ஏன்? என்று காரணம் கேட்டபோது - பிரித்தானிய மன்னன் சட்டத்திற்கும், இயற்கை நீதிக்கும் கட்டுப்பட்டவர் என்று நீதியரசர் சேர் எட்வட் கோக் சொன்னதே என்று காரணம் கூறப்பட்டது. அன்று முதலே சட்டத்தின் ஆட்சி (Rule of Law) என்ற கோட்பாடு உருவானது. இக்கோட்பாடு உருவாகக் காரணம் சேர் எட்வர்ட் கோக் தான்.

**டைசியின் சட்டவாட்சிக்கோட்பாடு**

டைசியின் கருத்துப்படி சட்டத்தின் ஆட்சியானது மூன்று பிரிவுகளைக் கொண்டது.

சட்டத்தின் ஆட்சி என்பது சட்டம் மேலானது என்பதைக் குறிக்கிறது. சட்டத்தின் உயர்வான நிலையைக் குறிக்கிறது. சட்டம் வழங்கும் அதிகாரத்தினால் மட்டுமே மனிதனைத் தண்டனைக்கு உட்படுத்த வேண்டும். வேறு எந்த அதிகாரத்தினாலும் அல்ல:

சாதாரணமாக மனிதன் நாட்டில் எல்லோருக்காகவும் பொதுவாக உள்ள நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்டவன். சட்டத்தை மீறினால் நாட்டில் அப்பொழுது நடைமுறையிலுள்ள சட்டங்களினால் குற்றம் சாட்டப்பட்டு நாட்டில் உள்ள பொது நீதிமன்றங்களான திறந்த நீதிமன்றங்களில் விசாரணை செய்யப்பட்டு தண்டனை வழங்கப்படவேண்டும். தண்டனையும் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு உட்பட்டே வழங்கப்படவேண்டும். நிறைவேற்றப்பட வேண்டும். அரசும் சட்டத்ததிற்கு உட்பட்டே செயற்பட வேண்டும். சட்டத்தை அரசு உருவாக்கினாலும் சட்டம் அரசின் பிடியில் இருக்கக்கூடாது.

**சட்டத்தின் முன் சகலமும் சமன் (Equality before Law)**

ஒருவர் சமூகத்தில் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலும் அவர் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் அல்ல. சட்டத்திற்குக் கீழ்ப் பட்டவரே. சட்டத்தின் முன் சகலமும் சமன்.

**சட்ட எழுச்சியின் மேன்மை (Predominance of Legal Spirit)**

தனி மனித சுதந்திரம் நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களின் வழியாகவே கிடைத்த உரிமைகள். மாறாக அரசியலமைப்பின் மூலமாக அல்ல என்பது டைசியின் வாதம். தனி மனித உரிமைகளை நீதிமன்றங்களினாலேயே வழங்கப்படலாம். தீங்கிழைத்தவரின் சமூக அந்தஸ்து, பதவி முதலியவற்றைப் பார்க்காமல் நீதிமன்றங்கள் அவரைத் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு விளங்கலாம் என்று டைசி கூறினார்.

எழுதப்பட்ட அரசியலமைப்பிலோ அல்லது சட்டத்திலோ உரிமைகளைக் கொடுத்து விட்டு அதனைச் செயற்படுத்துவதற்கு உரிய சிறப்புச் செயல்கள் எதனையும் வழங்காது விடுவதும் பரிகாரங்களை வழங்காது விடுவதும் பாதுகாப்புக்களை வழங்காது விடுவதும் மக்களின் மத்தியில் சட்டத்தின் மதிப்பைக் குறைத்து விடும். பிரித்தானியாவில் ஆட்கொணர்விக்கும் சட்டம் (Habeas Corpus Act) என்றொரு சட்டம் உண்டு. இச்சட்டம் கொள்கைகள் எதனையுமோ அல்லது உரிமைகள் எதனையுமோ உள்ளடக்கவில்லை. ஆனாலும் நடைமுறையில் அரசியலமைப்புக்கள் உறுதியளிக்கும் தனி மனித உரிமைகளுக்கு ஈடாகும் வகையில் காணப்படுகின்றன என்று டைசி கூறுகின்றார்.

**டைசியின் கோட்பாட்டின் மீதான விமர்சனங்கள்.**

1. பாராளுமன்றம் இயற்றும் சட்டம் உயர்வானது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளலாம். பாராளுமன்றம் ஏதேச்சதிகாரமாக சட்டங்களை இயற்றும் போது, அப்பொழுது அதனையும் ஏற்றுக் கொள்ள வேண்டி வரும். எனவே அரசனின் கட்டுப்பாடு பாராளுமன்றத்தின் சட்டம் இயற்றும் அதிகாரத்தின் மீது தேவை என்று கருதக்கூடிய காலம் வரலாம் என்பது ஜென்னிங்ஸ் என்பவரின் கருத்து.

2. சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்பதில் சற்று மாற்றம் தேவை. சமமானவர்களே சட்டத்தின் முன் சமமாகப் பாவிக்கப்பட வேண்டும். சமன் இல்லாதவர்களைச் சமனாகப் பாவிக்க முடியுமா? அப்படிப் பாவித்தால் சட்டமே தவறு செய்தது போலாகும்.

3. பிரித்தானியாவில் உரிமைகளை நீதிமன்றங்கள் வழங்கியனவாய் இருக்கலாம். மற்ற நாடுகளில் அதுபோல் கிடையாது. உதாரணமாக இலங்கையில் அடிப்படை உரிமைகளை அரசியலமைப்புச் சட்டமே வழங்கியுள்ளது.

எனவே டைசியின் கூற்று அவர்காலத்திற்கு ஏற்புடையதாக இருந்திருக்கலாம். தற்காலத்திற்கு முழுமையாகப் பொருந்தாது.

**சட்டத்தின் ஆட்சியும் 1978ம் ஆண்டின் அரசியலமைப்பும்**

எமது அரசியலமைப்புச் சட்டத்திலும் டைசியின் கோட்பாடு சேர்க்கப்பட்டுள்ளது.

அவை அடிப்படை உரிமைகள் எனும் தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளன.

சட்டவாட்சிக் கோட்பாட்டின் முக்கிய பிரிவான சமத்துவத்திற்கான உரிமை அரசிய லமைப்பின் உறுப்புரை 12ல் உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது. இவ் உறுப்புரையில் சட்டத்தின் முன் ஆட்கள் எல்லோரும் சமனா னவர்கள் என்றும், அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படு வதற்கும் உரித்துடையவர்கள் என்றும், இனம்-மதம்-மொழி-சாதி-பால்-அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரண்ங்களுள் ஏதே னும் ஒன்று காரணமாக எந்தப் பிரஜையும் ஓரங்காட்டுதல் ஆகாது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 13ம் உறுப்புரையில், சட்டத் தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடவடிக்கை முறைக்கு இணங்க தகுதி வாய்ந்த நீதிமன் றத்தினால் ஆக்கப்படும் கட்டளையின் மூலம் அல்லாமல் ஆள் எவரையும் தண் டிக்க முடியாது என்றும், புரியப்பட்ட நேரத் தில் தவறு ஒன்றாக இருந்திராத ஏதேனும் செயல் அல்லது செய்யாமை காரணமாக ஆள் எவரையும் தண்டிக்க முடியாதென்றும், தவறு புரியப்பட்ட நேரத்தில் வலுவிலிருந்த தண்டனையிலும் பார்க்க கடுமையான தண் டனை எதனையும் விதிக்க முடியாது என்றும் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

இந்த இரு உறுப்புரைகளும் சட்டவாட் சிக்கோட்பாட்டின் மிக முக்கிய பெரும் பகுதி களாகும். மேலே கூறப்பட்ட உரிமைகள் மீறப்படும் பொழுது உறுப்புரை 126 க்கு அமைய உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப் பிப்பதன் மூலம் பரிகாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே சட்டவாட்சிக்கோட்பாடானது எமது அரசியலமைப்பின் மூலம் ஏற்று அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

# வலுவேறாக்கம்

தனபாலசிங்கம் ஜனகன்
முதலாம் ஆண்டு
இலங்கைச் சட்டக் கல்லூரி

அரசாங்கத்தின் அதிகாரங்கள் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

1. Legislative - சட்டவாக்கத்துறை
2. Executive - நிர்வாகத்துறை
3. Judicial - நீதித்துறை

இவைகள் ஒன்றோடு ஒன்று கலக்காதவாறு மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மேலும் ஒன்றின் வரம்பெல்லையினுள் மற்றொன்று நுழையக்கூடாது. தலையிடக்கூடாது. தலையிடாக் கொள்கை இருப்பின் சாலச் சிறந்தது. வலுவேறாக்க கோட்பாடு பிரான்சு நாட்டின் சட்ட வல்லுநரான மொண்டெஸ் கியு (Montes quieu) என்பவரால் முதன் முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. வலுவேறாக்கம் நல்ல அரசு நடத்தப்பட மிகவும் முக்கியமானது என்று அவர் கருதினார். எனவே,

1. அதிகாரங்கள் பிரிக்கப்பட வேண்டும்
2. பிரிவுகள் தனித்தனியே இயங்க வேண்டும். ஒன்று மற்றொன்றின் அதிகாரத்தைப் பறிக்க முயலக்கூடாது என்பதே கருத்து.

**வலுவேறாக்கக் கோட்பாடு என்றால் என்ன?**

1. நிர்வாகத் துறையின் அதிகாரங்களையோ நீதித்துறையின் அதிகாரங்களையோ சட்டவாக்கத்துறை எடுத்துக் கொண்டு செயலாற்றக்கூடாது.
2. அதேபோல் நீதித்துறை, சட்டவாக்கத் துறையின் அதிகாரங்களையோ, நிர்வாகத்துறையின் அதிகாரங்களையோ எடுத்துக் கொண்டு செயலாற்றக் கூடாது.
3. சட்டவாக்கத்தறையின் அதிகாரங்களையோ, நீதித்துறையின் அதிகாரங் களையோ நிர்வாகத்துறை ஏற்றுக் கொண்டுசெயல்படக்கூடாது.

மேலும் ஒரே அங்கத்தினர்கள்மூன்று துறைகளையும் கவனிக்கக்கூடாது. ஒரு துறை மற்ற இரண்டு துறைகளின் அலுவல்களைச் செய்யக்கூடாது. ஒரு துறை மற்ற இரண்டு துறைகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளக்கூடாது என்று அறிஞர்கள் Wade மற்றும் Philips கூறுகின்றார்கள்.

எனவே, வலுவேறாக்கம் என்று கூறும் பொழுது அது ஆட்களானாலும் சரி அலுவல் ஆனாலும் சரி தனித்தனியே இருக்க வேண்டும். வலுவேறாக்கம் என்பது அமெரிக்க அரசியல் அமைப்புச்சட்டத்தின் அடிப்படைக்கொள்கை ஆகும். அங்கே நிர்வாகத்துறை ஜனாதிபதி (President) யாலும் சட்டவாக்கத் துறை பிரதிநிதிகள் சபை (House of Representatives) யாலும் நீதித்துறை நீதிமன்றங்களாலும் கவனித்துக் கொள்ளப்படுகின்றன.

வலுவேறாக்கம் என்பது பேச்சு அளவில் தான் இருக்க முடியுமே தவிர செயலளவில்

முடியாது. மூன்றும் தனித்தனியாக இருப்பினும் ஒன்றை ஒன்று அனுசரித்து கைகோர்த்துச் செல்ல வேண்டும். ஒன்றையொன்று கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முயலலாகாது.

வலுவேறாக்கமானது தனி நபர்களை அதிகாரத்தின் கோரப் பிடியில் இருந்தும் எதேச்சாதிகார சக்திகளில் இருந்தும் காப்பாற்றித் தனிநபர் சுதந்திரத்தையும், உரிமையையும் பாதுகாக்கும் ஒரு உபாயமாகவே இதனைக் கொள்ளவேண்டும்.

### அமெரிக்காவில் வலுவேறாக்கம்

அமெரிக்காவின் அரசமைப்புச் சட்டம் மிகவும் தெளிவாக வலுவேறாக்கம் குறித்துக் கூறுகிறது.

1. நிர்வாகத்துறை அதிகாரங்கள்- அமெரிக்காவின் குடியரசுத்தலைவரிடம் (President) உள்ளன.
2. சட்டமியற்றும் அதிகாரங்கள் (Legis lative Powers) அமெரிக்காவின் பாராளுமன்றம் "**காங்கிரஸ்**" (Con gress) கொண்டுள்ளது.
3. நீதித்துறை அதிகாரங்கள் (Judicial Powers) அமெரிக்காவின் உச்ச நீதிமன்றத்திடமும் - கீழ்நிலை நீதிமன்றங்களிடமும் உள்ளது.

(i) ஆனால் நடைமுறையில் பார்க்கும் பொழுது காங்கிரஸ் போடும் சட்டமூலங்களைத் தடுத்து நிறுத்த ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

(ii) மேலும் ஜனாதிபதி செய்து கொள்ளும் உடன்படிக்கை (Treaty) மற்றும் பணி அமர்த்துதல் (appointment) போன்றவைகள் பேரவையின் (Senate) அங்கீகா ரம் பெற்றாக வேண்டும்.

(iii) Judicial Review - நீதிமுறைச் சீராய்வு சட்டமியற்றும் அதிகாரம் மீது கட்டுப்பாடு விதிப்பது போல், நீதிமன்றங்கள் நீதிமுறைச் சீராய்வு என்ற மந்திரக் கோல் (Magic Wand) வைத்துள்ளன.

### இங்கிலாந்தில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு

இங்கிலாந்தில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினைக்கடைப்பிடிப்பதே இல்லை. பிரபுக்கள் சபை (House of Lords) சட்டமியற்றும் அதிகாரத்தையும் (Legislative powers) நீதித்துறை அதிகாரத்தையும் (Judicial powers) தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இதுவே முதல் முரண்பாடு. அடிப்படை முரண்பாடு.

மந்திரிகளின் அதிகாரம் குறித்து அறிக்கை சமர்ப்பித்த குழு (The Report of the committee of ministers Power) - இந்த அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு முழுமையற்ற (incomplete) கோட்பாடு என்று கூறுகிறது.

கிரிபித் மற்றும் ஸ்டிரீட் (Griffith and street) என்னும் சட்ட அறிஞர்கள் உண்மைக்கு எதிர்மாறாக இந்தக் கோட்பாடு உள்ளதால் இதனை முற்றிலும் ஒதுக்கித் தள்ளி விடுதல் (disregard) நன்று என்று கூறுகின்றனர்.

### இலங்கையில் 1978ம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் வலுவேறாக்கம்

இலங்கையில் தற்பொழுது அமுலில் இருக்கும் அரசியலமைப்பின் கீழ் வலுவேறாக்கக் கோட்பாடானது இறைமையைப் பிரயோகித்தல் எனும் பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவ் அரசியலமைப்பின் கீழ் சட்டவாக்கத் துறை அதிகாரம் பாராளுமன்றத்திடமும் நிர்வாகத்துறை அதிகாரம் சனாதிபதியிடமும் நீதித்துறை அதிகாரம் நீதிமன்றங்களிடமும் வழங்கப்பட்டுள்ளது எனினும் இவை தமது துறை தவிர்ந்த மற்றத் துறைகளின் அதிகாரத்தில் தலையிடும் நிலை அரசியலமைப்பின் ஏற்பாடுகள் வாயிலாகவே காணப்படுகின்றன.

உதாரணமாக சட்டவாக்க அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தாலும் சனாதிபதி மக்களின் தீர்ப்பின் மூலம் சட்டவாக்க செயலை மேற்கொள்ளக்கூடிய நிலை காணப்படுகிறது. அதேபோல் பிரதமரும் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவதால் சட்டவாக்கத்துறையும் நிர்வாகத்துறையும் ஒன்றுடன் ஒன்று கலந்து செயற்படும் நிலை காணப்படுகிறது. இது வலுவேறாக்கக் கோட்பாட்டிற்கு எதிரான நிலையாகும் நீதிமன்றங்களில் வழங்கப்படும் ஆணைகள் (Writs) நிர்வாகத்துறை மீது நீதித்துறை மேற்கொள்ளும் தலையீடாகவே அமைகின்றது.

சட்ட மூலங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புக்கள் சட்டவாக்கத்துறையை நீதிமன்றங்கள் வழிநடத்துபவையாகவேகருத வேண்டும்.

இவ்வாறு பல ஏற்பாடுகள் வலுவேறாக்கக்கோட்பாட்டிற்கு எதிரானவையாகக் காணப்படுகின்றன.

எனவே எமது அரசியலமைப்பும் வலுவேறாக்கக்கோட்பாட்டைக் கொண்டிருப்பினும், இம் மூன்று துறைகளும் எதுவித கட்டுப்பாடும் இன்றி தன்னிச்சையாகவும் எதேச்சாதிகாரமாகவும் செயற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு ஒன்றை ஒன்று கண்காணிக்கவும், ஒரு துறை வரம்பு மீறிச் செல்லும் போது அதைத் தட்டிக் கேட்கவும், ஒரு துறை தனது கடமையைச் செய்யத்தவறும் போது அதைச் செய்யும்படி தூண்டவும் மற்றைய துறைக்கு அரசியலமைப்பு வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வறுமை எமது உடன் பிறப்பு

வறுமை எமது உடன் பிறப்பு
பசியும் பட்டினியும் எமது
வீட்டில் குடியிருப்பு-வயிற்றுப்
பசிதீர்க்க வழியின்றி
நாள் முழுதும் கூழ் குடித்து
நானிலத்தார் தூற்றாமல்
நாயகனுக்குத் தீங்கின்றி
நல்லவனாய் வாழ்கின்றோம்.

கரை சேர வேண்டிய இளம்
கன்னியர் பலர் வீட்டிலே காத்திருக்க
கைகாசு கொடுக்க பணம் இல்லை -ஏழை
குமர்களுக்கு கைகொடுப்பார் யாரும் இல்லை
பலாக்காய் இல்லை என்றிருந்தால்
வாழ்வில்
பிச்சை எடுத்திருப்போம்
பாவம் இல்லை என்றிருந்தால்
பாரில் கொள்ளையடித்திருப்போம்.

பிச்சை எடுக்கவில்லை வாழ்வில்
பொய்யும் உரைக்கவில்லை
களவும் எடுக்கவில்லை
கபடமும் எம்மிடமில்லை
கூலி வேலை செய்தோம் நாம்
கூழ் குடித்துப் பசிதீர்க்க.

பள்ளி செல்லவில்லை
பட்டினித் தொல்லையினால்
படிக்க முடியவில்லை - கையில்
பணம் இன்மையினால்
பண்பை இழக்கவில்லை நம்
பிறப்பு நல்லதினால்
வஞ்சனை கொள்ளவில்லை
வளர்ப்பு நல்லதினால்

அன்று முதல் இன்று வரை
எம்மை ஆதரிப்பார் எவருமில்லை
இறைவனிடம் முறையிட்டோம்
இதுவரையில் பலனில்லை
அல்லாஹ் நீ அறிவாயே
அடியேனின் நிலைமையினை.

**S.A.M. உபைதுல்லாஹ்.**
**இடைநிலை ஆண்டு**
**இலங்கைச் சட்டக் கல்லூரி**

# ஓம் சக்தி

*அங்கயர்க் கண்ணி அபிராமி சிவகாமி*
*அங்காள பரமேஸ்வரி*
*மங்கையர்க் கரசி மதுரை மீனாட்சி*
*மஹிஷ வர்த்தனி தாரணி*
*பங்கயச் செல்வி பார்வதி சிவசக்தி*
*பரி பூரணி ஆரணி*
*சங்கரி சடாட்சரி சாமுண்டி ஜெயகௌரி*
*சக மெலாம் "சக்தி", வடிவே.*

*முத்துநவ ரத்னமணி நுட்பமுறு வைடூர்யம்*
*முறையதா யொளிரு முடியும்*
*முகிலனைய கூந்தலும் செவிமிளிரு தழைகளும்*
*மூக்குத்தி மின்னும் ஒளியும்*
*முக்தறிநீறு பிறை நெற்றியில் திலகமும்*
*முழுமதி முகத்தின் அழகும்*
*மூவுலக மீடேற முறுவலி பவளமிடை*
*முத்தொளிர் பற்கள் நிரையும்*
*நித்தமும் கருணை பொழி யற்புதக் கண்களும்*
*நிறைவுதரும் அபய கரமும்*
*நிலையான பேறுதவு அருள் சக்தி யுருவாக*
*நினைத்து நாமுள மிருத்தி*
*சத்தியம் சன்மார்க்கம் தழைத்தோங்க அகிலமிசை*
*சகலரும் ஒன்றி வாழ்ந்து*
*சகமெல்லாம் அரூபமாம் "சக்தி" யின் ஆட்சியெனச்*
*சக்தி வழிபாடு செய்வோம்.*

ச. ஈசாநந்தினி
இடைநிலை ஆண்டு
சட்டக்கல்லூரி

## Law Students' Hindu Mahasabha Executive Committee 2002

| | |
|---|---|
| *Patron* | *Dr. H.J.F. Silva* |
| *Senior Treasurer* | *Mrs. K. Nagendra* |
| *President* | *T. Saravanaraja* |
| *Vice President* | *S. Jothilingam* |
| *Secretary* | *S. Eesananthini* |
| *Asst. Secretary* | *S. Anuraji* |
| *Treasurer* | *V. Hamsakanambiha* |
| *Editor* | *S. Sriskandarajah* |
| *Auditor* | *J. Jeyaruban* |
| *Committee Member* | *B. Partheeban* |

## Members of the Law Students' Hindu Mahasabha 2002

***Preliminary Year***

*Miss. S. Anuraji*

*P.D. Janakan*

*B. Partheeban*

*J. Kajanithiblan*

***Intermediate Year***

*Miss. S. Eesananthini*

*S.A. Jothilingam*

*J. Jeyaruban*

***Final Year***

*S. Sriskandarajah*

*T. Saravanarajah*

*Miss. V. Hamsakanambiha*

***Apprentices***

*N. Kandeepan*

*K. Selvendran*

*B. Kathirkamanathan.*

### S. நடேசன் Q.C ஞாபகார்த்த கேடயத்திற்கான எழுத்தமான கட்டுரைப் போட்டி முடிவு

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | : | அன்புமுகைதீன் றோஷான் |
| இரண்டாம் இடம் | : | உமர்லெப்பை அகமட் றாஸி |
| மூன்றாம் இடம் | : | அமலவளன் ஆனந்தராஜா |

## அமரர் செல்வி கலாநிதி கந்தையா ஞாபகார்த்த பதக்கத்திற்கான தேவார பண்ணிசைப் போட்டி

| | | |
|---|---|---|
| தங்கப் பதக்கம் | - | செல்வன்.கிருபானந்தமூர்த்தி அரவிந்தன் றோயல் கல்லூரி, கொழும்பு-7. |
| வெள்ளிப் பதக்கம் | - | செல்வன். துரைரட்ணம் துவாரகன் றோயல் கல்லூரி, கொழும்பு-7. |
| வெண்கலப் பதக்கம் | - | செல்வி. கவினாளி ஸ்ரீஸ்கந்தராஜா இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-4 |

## ஆறுதல் பரிசுகள்

| | | |
|---|---|---|
| ஹர்ஷனா விக்னேஸ்வரன் | - | சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு-6 . |
| வித்தியா சிவராம் | - | சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு-6 . |
| அமுதாஜினி பொன்னையா | - | கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை - கல்முனை. |
| பூர்ணிமா இராமச்சந்திரன் | - | பாக்கியம் தேசியக்கல்லூரி, மாத்தளை. |
| ஞானகுருபரன் சிறீதரன் | - | இந்துக்கல்லூரி, கொழும்பு-04. |
| தாரணி இரத்தினவேல் | - | கொ/ திருக்குடும்ப கன்னியர் மடம். |

# இந்து மகாசபையின் சரித்திரத்தில்....

பல இடர்பாடுகளுக்கிடையிலும் சுயநலம் பாராது அறுபதுகளிலிருந்து இற்றைவரை இந்துமகாசபையை இனிதே வழிநடத்தியவர்களின் பட்டியல்

| ஆண்டு | தலைவர் | செயலாளர் |
|---|---|---|
| 1963 - | ஏ. மயில்வாகனம் | ரீ. யோகநாதன் |
| 1964 - 65 | என். அருணாசலம் | எம். காசி விஸ்வநாதன் |
| 1965 - 66 | ஆர். ஸ்ரீநிவாசன் | பி. சிவலோகநாதன் |
| 1966 - 67 | சிவா பாலேந்திரன் | எஸ். என். ஜீவலோகநாதன் |
| 1967 - 68 | எம். திருநாவுக்கரசு | ஏ.வி.கே. நீலகண்டன் |
| 1968 - 69 | ஏ.வி.கே. நீலகண்டன் | ஏ. தம்பாப்பிள்ளை |
| 1969 - 70 | கே.வி. மகாதேவன் | எஸ்.எம். சண்முகநாதன் |
| 1970 - 71 | கே. வெற்றிவேல் | கே. கணேசயோகன் |
| 1971 - 72 | திருமதி.எம். சின்னத்துரை | எஸ். பகீரதன் |
| 1972 - 73 | ஆர். மாசிலாமணி | செல்வி. வி. சிங்காரம் |
| 1973 - 74 | கே. ஜெயகிருஷ்ணன் | எஸ். திருஞானம் |
| 1974 - 75 | கே. ஜெயகிருஷ்ணன் | எஸ். திருஞானம் |
| 1975 - 76 | கே. ஜெயகிருஷ்ணன் | எஸ். திருஞானம் |
| 1976 - 77 | கே. நவரேந்திரன் | என். ரஞ்சிதகுமாரன் |
| 1977 - 78 | ஆர். ரீ. விக்கினராஜா | வி.ரீ. சித்தேஸ்வரன் |
| 1978 - 79 | ................................ | ................................ |
| 1979 - 80 | ஏ. தெய்வேந்திரன் | எம். விமலேந்திரன் |
| 1980 - 81 | எஸ். விக்னேஸ்வரன் | எஸ். செல்வமுருகானந்தம் |
| 1981 - 82 | எஸ். கணபதிப்பிள்ளை | செல்வி. எஸ். விஜயரட்னம் |
| 1982 - 83 | ................................ | ................................ |
| 1983 - 84 | ................................ | ................................ |
| 1984 | ................................ | ................................ |
| 1985 | எஸ். முத்துலிங்கம் | செல்வி. எஸ். செல்லையா |
| 1986 | ந. இரவிராஜ் | எஸ். இராஜரட்ணம் |
| 1987 | எஸ். துரைராஜா | செல்வி. எஸ். மாதவராஜா |

| | | |
|---|---|---|
| 1988 | பாலக்குமார் | செல்வி. எஸ். பாலச்சந்திரன் |
| 1989 | என். சுரேஷ்குமார் | செல்வி. ட. சம்பந்தப்பிள்ளை |
| 1990 | செல்வி. ட. சம்பந்தபிள்ளை | ஏ. பிரேம்சங்கர் |
| 1991 | செல்வி. எல் காசிப்பிள்ளை | செல்வி. சி. சிவதாசன் |
| 1992 | சி. சிவதாசன் | பெ. ரவீந்திரன் |
| 1993 | வி.வி. தேவதாஸ் | எஸ். குணநாதன் |
| 1994 | செல்வி. வி. நடராஜா | சின்னத்துரை மயூரன் |
| 1995 | செல்வி. எஸ், துரைராஜா | கு. சாந்தகுமார் |
| 1996 | செல்வி. கீ. தாமோதரம்பிள்ளை | செ. பிருந்தாபன் |
| 1997 | செ. பிருந்தாபன் | மோகன் பாலேந்திரா |
| 1998 | ..................................... | ப.ச. மௌலீஸ்வரன் |
| 1999 | அ. சந்திரவதனி | கு. செல்வேந்திரன் |
| 2000 | கு. செல்வேந்திரன் | ந. காண்டீபன் |
| 2001 | சி. ஸ்ரீஸ்கந்தராஜா & பி. கதிர்காமநாதன் | செல்வி. வா. ஹம்ஸகனாம்பிகா |
| 2002 | ரி. சரவணராஜா | செல்வி. ச. ஈசாநந்தினி |

# சைவ நீதி வழங்கியோரும் நக்கீரம் நல்கியோரும்

| | | |
|---|---|---|
| 1967-68 | சைவநீதி | விமல் சொக்கநாதன் |
| 1968-69 | சைவநீதி | சு.சி. தவராஜா |
| 1970-71 | சைவநீதி | ச. லோகேஸ்வரன் |
| ** | | |
| 1995 | நக்கீரம் | ப.பா. கௌதமன் |
| 1997 | நக்கீரம் | ப.பா. கௌதமன் |
| 1999 | நக்கீரம் | செல்வி. ந. மதிவதனி |
| 2002 | நக்கீரம் | சி. ஸ்ரீஸ்கந்தராஜா |

# பொதுச் செயலாளரின் ஆண்டறிக்கை - 2002

சிந்திக்கும் சக்தியால் அளப்பரிய சாதனைகளையும் ஞான தத்துவங்களையும் காண முடிகின்ற மனிதனே உயர்திணையில் வைத்துக் கணிக்கப்படுகின்றான். இவற்றின் பேறாகவே அறம், பொருள், இன்பம், வீடு என்னும் தத்துவம் மனிதனின் சிந்தனையில் உதித்தது. அந்த வழிபாட்டின் தத்துவங் களையும் நியதிகளையும் தெளிவுபடுத்தத் தோன்றியதே இந்து மதமாகும். இன்றுகூட நம் ஈழத்திருநாட்டில் நடைபெற்றுவரும் யுத்தநிலை காரணமாக இந்துமத வழிபாட்டு ஸ்தலங்கள் மண்மேடுகளாகவும் புராணச் சிதைவுகள் போன்றும் தோற்றமளிப்பதைக் கண்டு மனம் வேதனைப்படாதோர் இருப்பர் என்று கூறமுடியாது. ஆதியும் அந்தமும் இல்லாத இந்துமதம் எங்கே அந்தத்தை அடைந்துவிடுமோ என்று அஞ்சுகின்ற இவ்வேளையிலே எமது மதத்தை அழிவிலி ருந்து காப்பாற்றுவதில் ஓர் துரும்பாகவாவது நாம் இருப்போமானால் அதுவே எமது பாக்கியம் ஆகும்.

18ம் திகதி மாசி மாதம் 2002ம் ஆண்டு இந்துமகா சபையின் செயற்குழுவைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் திரு. பி. கதிர்காமநாதன் தலைமையில் இருக்க நடைபெற்றது. இக்கூட்டத்தின் முடிவில் 2002ம் ஆண்டின் இந்து மகா சபை யின் செயற்பாடுகளைக் கொண்டு நடத்துவ தற்கான செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. இதன் பின் எமது செயற்குழு 2002ம் ஆண் டிற்கான சபையின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டது.

1999ம் ஆண்டின் நக்கீரம் இதழின் வெளியீட்டின் பின்பு, கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தவிர்க்க முடியாத காரணங் களினால் வெளியிட முடியாது போனது. எனினும் இவ்வருடத்திற்கான (2002) நக்கீரம் இதழ் எமது பெரும் பொருளா ளரினதும், செயற்குழுவினதும் தளராத முயற்சியினால் வெளியிடப்படுகிறது என் றால் அது மிகையாகாது.

2002ம் ஆண்டிற்கான செயற்குழுவின் கால்கோள் விழாவும் சட்டக்கல்லூரியின் வருடாந்த சிவராத்திரி விழாவும் மாசி மாதம் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று கொட்டாஞ்சேனை ஸ்ரீ பொன்னம்பலவா ணேஸ்வர ஆலயத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் சிறப்பு அதிதிகளாக பிரதம நீதிய ரசர் Sarath N Silva, உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், சட்டக்கல்லூரி அதிபர் H.J.F. Silva, பெரும் பொருளாளரும் விரிவுரையாளருமான திருமதி க. நாகேந் திரா, தமிழ் சங்கத் தலைவரும் விரிவுரை யாளருமாகிய கலாசூரி இரா. சிவகுருநாதன், சட்டத்தரணிகள் மற்றும் பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். அது மட்டுமன்றி பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ இன மத வேறுபாடுமின்றி அனைத்து சமூக சட்ட மாணவர்களும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

சிவராத்திரி பூசையையும் கால்கோள் விழாவையும் ஒருங்கே நடாத்த சகலவிதத் திலும் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து தந்த சட்டத்தரணி திரு. D.M. சுவாமிநாதன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

அடுத்ததாக 15-08-2002 அன்று எஸ். நடேசன் Q.C. ஞாபகார்த்த கேடயத்திற் கான எழுந்தமான கட்டுரைப் போட்டி நடாத்தப்பட்டது.

மேலும் எமது சபை 18-08-2002 அன்று அமரர் செல்வி கலாநிதி கந்தையா ஞாப கார்த்த தங்கப்பதக்கத்திற்கான தேவாரப் பண்ணிசைப் (திருமுறை) போட்டி ஒன்றி னை 16 வயதிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்தியது. இப் போட்டி 18-08-2002 அன்று அகில இலங் கை இந்து மாமன்ற தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் நடுவர்களாகக் கலந்து சிறப்பித்த சங்கீத ஆசிரியைகளான திருமதி சுகுந்தலா குமாரசிங்கம், திருமதி சத்தியவதி நடராஜா மற்றும் சங்கீதத்தில் பாண்டி யத்தியம் பெற்ற இந்தியாவைச் சேர்ந்த திருமதி பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் இம்மண்டபத்தை இலவசமாக தந்துதவிய அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் அவர்க ளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஞாபகார்த்த சுழற்கேடயத்திற்கான விவாத அணி தெரிவு, மாலினி சின்னத்துரை ஞாபகார்த்த கேடயத்திற்கான எழுந்தமான பேச்சுப் போட்டி என்பவை தவிர்க முடியாத காரணங்களால் நடாத்தப்பட முடியாமல் போனதும் மற்றும் ஜீ.ஜீ பொன்னம்பலம் மகத்தான சாதனையாளர் விருது வழங்க முடியாமல் போனதும் மிகவும் வருத்தத் திற்கு ரிய விடயங்களாகும்.

எமது பெரும் பொருளாளரும், விரிவுரை யாளருமான திருமதி கமலா நாகேந்திரா அவர்கள் சட்டக்கல்லூரி இந்து மகாசபை யை நாம் இந்த ஆண்டில் பொறுப்பேற்றதில் இருந்து எமக்கு மிகவும் பக்கபலமாக இருந்து சிறந்த ஆலோசனைகளை வழங்கி எமக்கு ஊக்கத்தை ஊட்டி இந்த மலரை வெளியிடு வதில் உறுதுணையாகவும் நல்ல வழிகாட்டி யாகவும் இருந்தார் என்றால் அது மிகையா காது. ஆகவே அவர்களுக்கு எமது விசேட நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

இறுதியாக எமது இம் மலர் வெளியீட்டி னை சிறப்புற நடாத்த நிதி மற்றும் பல்வேறு உதவிகளை செய்த சட்டத்தரணிகள், விளம்பர நண்பர்கள், விரிவுரையாளர்கள், பிரமுகர்கள், நலன் விரும்பிகள், சட்டக் கல்லூரி அதிபர், மற்றும் மாணவர்களுக்கும் எமது மன்றத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தவிரவும் எங்களின் செயற்பாடு களைப் பத்திரிகையில் பிரசுரித்த பத்திரிகை யாளர்களுக்கும் ஒலிபரப்பு செய்து உதவிய வானொலி நிலையங்களுக்கும் மற்றும் நியூ கார்த்திகேயன் பிறின்டஸ் பிறைவேட் லிமிட்டெட் ஸ்தாபனத்தினருக்கும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கும் எமது நன்றிகள்.

எமது நக்கீரம் இந்து மகாசபையின் வெளி யீடாக இருந்த போதும், சமயம், சட்டம் மற்றும் பல்வேறு விடயங்களைக் கொண்ட ஓர் சஞ்சிகையாக இம்முறை வெளிவரு வதுடன் இனிவரும் ஆண்டுகளில் இடை விடாது தொடர்ந்து வரவேண்டும் என்றும், சுடர் விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்றும் அடுத்த ஆண்டில் இச்சபையைப் பொறுப் பேற்க இருக்கும் சக மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக இந்த மலரை மிகுந்த சிரமங்க ளுக்கு மத்தியில் வெளியிட எமக்கு அருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவனைப் போற்றி வணங்குகிறோம்.

*With Best Compliments From*

# EAP Technologies (Pvt) Ltd.

654, Galle Road,
Colombo -03.

*With Best Compliments From*

# Sangam

## Law Entrance Classes

7,57th Lane, ( Off Rudra Mawatha)
Colombo -06.

*With Best Compliments From*

**Master Electrical & Electronics**

Wholesale, Retail & Dealers in Electrical & Electronic Goods


387A, Galle Road,
Wellawatte, Colombo- 06.
Tel Phone :- 596648

*With Best Compliments From*

**Well Wisher**

*With Best Compliments From*

## Saraswathi Stores



No. 12, Wolfendhal Street,
Colombo -13.
Tel :- 432035, 348635
Fax : 471275

*With Best Compliments From*

## New Asian Chemical

Dealers in chemicals and Batikdyes

**No. P.5B, China Street,**
**Colombo -11.**
**143A, Bankshall Street,**
**Colombo 11.**
**T.P : 338163**
**Fax:- 445931**

*With Best Compliments From*

## PRATHA TRADING CO.

Suppliers to Confectioners & Bakers, Importers of all Kinds of Food Colours Essence chemicals etc.

No . 64, Dam Street,
Colombo 12,
Sri Lanka.
Tel :- 445626
074-615185

*With Best Compliments From*

## Barakath Traders

*IMPORTERS & GENERAL MERCHANT*

Dealers in Printed, Colour & Clear Polythene, Polyproplene and Bags Etc.

12 & 13-A, China Street,
Colombo 11,
Sri Lanka.
Tel :- 439531, 439668
Fax:- 324587

*With Best Compliments From*

# New
# Devi Jewellers

Genuine
22kt Gold & Fine
Jewellery

269, Galle Road, Wellawatta,
Colombo -06, Sri Lanka.
Tel :- 580011, 075- 518206
Mobile:- 077 -311371

*With Best Compliments From*

**Ramanee Jewelart**

ரமணி ஜுவலார்ட்
130, செட்டியார் தெரு,
கொழும்பு -11.

රමණි ජුවල්ආට්
130, සෙට්ටි වීදිය.
කොළඹ - 11.

**130** Sea Street,
Colombo -11.
T'Phone : 422687

*With Best Compliments From*

NLC

**New Lankka Chemical**

Dealers In : Dyes , Acids, Wax
& Chemicals

***No. P2, China Street,***
***Colombo -11.***
***Tel :- 321759***

***Branch :***
***137, Bankshall Street,***
***Colombo -11.***

*With Best Compliments From*

*New*

**RANJANNAS**

Jewellery Mart

**116V, Sea Street,**
**Colombo 11.**
**Tel :- 074 -712597**

*With Best Compliments From*

**Ganesha Jewellers**

AIR CONDITIONED

கணேசா ஜுவலர்ஸ்


**52, Sea Street, Colombo -11.**
**Ph : 432164**

*With Best Compliments From*

New

# SaravanaS

**JEWELLERS (PVT ) LTD.**



නිව් සරවනාස්

நியூ சரவணாஸ்

**46, Sea Street, Colombo 11.**

**Tel : 434546 , 447690**

*With Best Compliments From*

# Nithyakalyani

நித்தியகல்யாணி ஜுவலர்ஸ்

**NO.40, Sea Street, Colombo -11.**

**T'Phone :- 421617, 329847**

*With Best Compliments From*

# Metro Constructions
# ( Pvt) Ltd.

**Civil Engineers Building Contractors & Consultants**

**58, Mayfield Road, Colombo -13.**

**T.P 321302**

*With Best Compliments From*

**WINTER QUILTS (PVT)LTD.**
**LANKAPURA APPAREL (PVT) LTD.**
**TEXWIN CLOTHING (PVT)LTD.**

Manufactures & Exporters of Quality Garments

111, Pallidara Road, Dehiwela, Sri Lanka.
Tel :- 730516, 730517, 730362, 730426, 730444, 731375

Fax : 94 -1- 737579
E-mail : winlan@sri.lanka.net

# நினைவுகூருகின்றோம்


சட்டக் கல்லூரியில் மிக நீண்டகாலமாக விரிவுரையாற்றி தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு ஒளிவிளக்காக இருந்து பல சட்டத்தரணிகளை உருவாக்க பெரும் பங்காற்றிய எமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய எமது நெஞ்சங்களில் என்றும் நீங்காத இடம் பிடித்த

**அமரர் S. குமாரசாமி BA,LL.B**

**அவர்களை சட்ட மாணவர்**

**இந்து மாகாசபை நன்றியுடன்**

**என்றென்றும் நினைவுகூருகின்றது.**



# நன்றி! நன்றி!! நன்றி!!!


நக்கீரம் மலர் உங்கள் கைகளில் பூத்துக்குலுங்க உரமூட்டி தண்ணீரிட்டு வளர்த்தவர் பலர். அவர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது இந்து மகாசபையின் வளர்ச்சியிலும் அதன் நடவடிக்கைகளிலும் அக்கறையுடன் செயற்படும்

- பெரும் பொருளாளர் திருமதி. க. நாகேந்திரா அவர்களுக்கும்,
- கல்லூரி அதிபர் கலாநிதி H.J.F. சில்வா அவர்களுக்கும்,
- சிறப்புச் பேட்டி தந்த பேராசிரியர் வே. இரத்தினசபாபதி அவர்களுக்கும், இப்பேட்டிக்கு ஏற்பாடு செய்து தந்த திரு. கந்தையா நீலகண்டன் அவர்களுக்கும்,
- தரமிகு ஆக்கங்களால் மலரின் அழகை மெருகேற்றிய நீதிபதிகள், பேராசிரியர்கள், சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள், சமயப்பெருந்தகைகள் அனைவருக்கும்,
- ஆக்கங்களை மனமுவந்தளித்த மாணவர்களுக்கும்,
- நக்கீரம் மலர் வெளிவர நிதியுதவி வழங்கிய சட்டத்தரணிகளுக்கும், நலன்விரும்பிக ளுக்கும்,
- மனங்கோணாது எமக்கு வாரி வழங்கிய நலன் விரும்பிகள், விளம்பரதாரர்களுக்கும்,
- இம்மலர் சிறப்புடன் வெளிவர முகம் கோணாது எங்களோடு ஒத்துழைத்த நியூ கார்த்திகேயன் அச்சக நிறுவகத்தாருக்கும், அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கும்,
- எமது மலர் வெளியீட்டை விளம்பரப்படுத்திய வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கும்,
- எம்முடன் கைகோர்த்து செயற்பட்ட சிரேஷ்ட கனிஷ்ட மாணவ மாணவியர் அனைவருக்கும்,
- உதவி வழங்கிய ஆனால் குறிப்பிட மறந்த அனைவருக்கும்,

## *நன்றி! நன்றி!! நன்றி!!!*

***ஆக்கியோரே தத்தம் ஆக்கங்களுக்குப் பொறுப்பாவார்***


With Best Compliments From
Nature Lanka
Travels & Tours (Pvt) Ltd.
கொழும்பு – யாழ் நேரடி பஸ் சேவை (குளிரூட்டப்பட்டது) ஒவ்வொரு
திங்கள் புதன் சனிக்கிழமைகளில் காலை 5 மணிக்கு
7-2/6, 2nd Floor,
Orchard Complex,
(Opp, Savoy Cinema)
Colombo -06,
Sri Lanka.
Mobile :- 078 -661634
077 - 515834
Phone :- 585977
595025
Fax :- 504725
AIR TICKETING AND TOUR OPERATOR

*With Best Compliments From*

# Laavanya

## Laavanya Jewell House

Makers of Genuine 22Ct. Gold Jewelleriés ,
Pawn Brokers

**62** Sea Street, Colombo 11,
Sri Lanka
Tel :- 328536, 334693

New Karthikeyan (Pvt) Ltd.Tel :- 077-356036, 728801